ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ ஐப்பசி௴—நவம்பர்-1939 கதிர் 4

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை 1

மானிட சமூகத்தின் வளர்ச்சி — டி. நா. ரா. 5

காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்கள் 12

தென்னாப்பிரிக்கா ஏழை இந்தியர்களின் உரிமைகள் — நமது தென்னாப்பிரிக்கா நிருபர் 17

நவராத்திரி — எஸ். கே. நாராயணய்யர் B. A., B. L., 20

ஞானக் களஞ்சியம் — ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள் 23

இந்திய தேசீய இயக்கம்—எப்படி வளர்ந்தது? — ஜி. டி. காரெட் 26

யுத்தத்தைப் பற்றிய சில விவரங்கள் 31

அக்கா— தொடர் கதை — எம். வி. வேங்கடராமன் 33

கம்பர்—4 இராமனுடைய அருள் வீரம் — நா. லக்ஷ்மீநரசிம்மம் 39

சுதந்திரத்தின் தேவை யாவை? ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் 3 —வெ. சா. 46

இலங்கையில் இந்தியர்கள் — நாராயணசிவன் 54

ஜோன் ஆப் ஆர்க் — ச. முனிஸ்வாமி பிள்ளை 57

அன்னி பெஸண்ட் — "ஒரு காங்கிரஸ்வாதி" 62

தமயனின் கடிதம்-7 — "தேவிதாசன்" 66

எனது சகோதரர்-ஜவஹர் — ஸ்ரீமதி கிருஷ்ணா ஹுதி ஸிங் 68

அன்றாட உலகம் — 73

யுத்தச் செய்திகளில் நகைச்சுவை! — 79

கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நின்று இந்தியாவை நோக்குகிற போது, விபரீதமான மாற்றங்களோ கொந்தளிப்புகளோ ஏற்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இதைக் கண்டு, பாரத ஜாதி திருப்தியடையவில்லை; திருப்தியடையவும் அடையாது. இந்தக் கொந்தளிப்பிலே, இந்தப் புயற் காற்றிலே, ஒரு வெளிச்சத்தைக் காண வேண்டும்; ஒரு புதிய பாதையைத் திறந்துவிட வேண்டும் என்பதுதான் இந்தியத் தலைவர்களின் நோக்கமே தவிர, பிரிட்டிஷாருடைய சங்கடமான நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பது அல்ல. இந்த உயர்ந்த நோக்கத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உணராமலிருப்பதற்கு நாம் வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

ஐரோப்பிய யுத்த விஷயத்தில் இந்தியாவின் நிலைமை யென்ன வென்பதைப்பற்றி காங்கிரஸ் காரிய கமிட்டியார் 15-9-39ல் வெளியிட்டிருந்த அறிக்கை, இந்தியப் பொதுஜன அபிப்பிராயத்தை உண்மையிலேயே பிரதிபலித்துக் காட்டுவதாயிருக்கிறதென்று ஏற்கனவே நாம் கூறியுள்ளோம். இந்த அறிக்கையில், இந்தியாவின் கோரிக்கை என்னவென்பதும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ராஜப்பிரதிநிதி விடுத்திருக்கும் பதில் அறிக்கையானது பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இல்லையென்ற கருத்தை அழகான பாஷையில், வசீகரமான நடையில் ஆடம்பரமாகத் தெரிவித்திருக்கிறார் ராஜப்பிரதிநிதி. இந்த நாஸ்தி மந்திரத்தை இவ்வளவு பகட்டோடுசொல்வதற்கு, காங்கிரஸ் தலைவர்களை அழைத்துப் பேசியிருக்க வேண்டியதில்லை. இவர்களும் ராஜப்பிரதிநிதியின் மாளிகையில் பேட்டிக்காகக் காத்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தார், நல்லதொரு சந்தர்ப்பத்தை இழந்து விட்டனர். ராஜபக்திக்கும் ஒரு சோதனை காலம் உண்டு என்பதை பிரிட்டன் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையென்றால் அது விசனிக்கத்தக்கது தான்.

ராஜப்பிரதிநிதியின் அறிக்கையைப் பற்றி ஆலோசிக்க, காங்கிரஸ் காரியக் கமிட்டி 22—10—39ல் வார்தாவில் கூடியது. மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்ய வேண்டுமென்று தீர்மானித்தது. அப்படியே மாகாணங்களிலுள்ள மந்திரிச் சபைகள் ராஜீநாமா செய்து கொண்டு வருகின்றன. இந்த விஷயத்திலும், சென்னை மாகாண மந்திரிச்சபை வழிகாட்டியாயிருப்பது நமக்கு ஒருவித பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒரு விஷயம். எல்லா மாகாண மந்திரிகளும் குறிப்பிட்டதொரு தேதியில் ராஜீநாமா செய்திருந்தால், அது பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு எவ்வித அதிர்ச்சியையும் கொடுக்காமற் போனாலும், பொது ஜனங்களுக்காவது ஒருவித உணர்ச்சியைக் கொடுத்திருக்கும். இப்படி ஒரே சமயத்தில் ராஜீநாமா செய்வது மாகாணப் பொறுப் பாட்சி முறைக்கு முரணானது என்று அரசியல் பண்டிதர்கள் கருதலாம். ஆனால் அரசியல் பாண்டித்யம் நமக்கு இருக்கிறதா இல்லையா வென்ற பரீட்சையில் இப்

பொழுது தேறவேண்டிய நிலைமையில் நாம் இல்லை. அந்தச் சந்தர்ப்பமும் நமக்கு இப்பொழுது ஏற்படவில்லை. ஏனென்றால் இப்பொழுதுள்ள அரசியல் நமது நாட்டினரால் வகுக்கப்பட்ட அரசியல் இல்லையே. பிறரால் திணிக்கப்பட்ட அரசியல்தானே. நாம் சிருஷ்டித்த பொருளை நாம் ஒழுங்காக உபயோகித்து வருகிறோமாவென்பதிலேதான் நமது பரீட்சை இருக்கிறதே தவிர, பிறர் பொருளை உபயோகிப்பதிலே நமக் கென்ன பெருமை இருக்கிறது.

இந்த ராஜீநாமா தீர்மானத்தை முன்னிலைப்படுத்தி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஸர் சாமியல் ஹோர் முதலிய ராஜதந்திரிகள் நீண்ட பிரசங்கங்களைச் செய்திருக்கிறார்கள். ஸர் சாமியல் ஹோரின் இந்தப் பேச்சு, அச்சுறுத்தும் தோரணையிலேயே இருக்கிறது.

"இந்தியாவில் ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப்படுமானால் நமக்கு வேறு வழியில்லை. அரசாங்கம், திறமையுடனும், வல்லமையுடனும், நியாயத்துடனும் நடத்தப்பட வேண்டும்',

ஸர் சாமியலின் திருவாக்கு இது. இந்த தோரணையில் பேசுகிற இவர், இதே பேச்சில் வேறோர் இடத்தில் என்ன பேசுகிறார் பாருங்கள்.

"ஏகாதிபத்திய ஆசைகளை நாம் எப்பொழுதோ ஒதுக்கி வைத்து விட்டோம். பிறரை ஆள்வது நமது நோக்கமல்ல; மற்றவர்கள், தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளக் கூடியவாறு அவர்களுக்கு உதவி செய்வதே நமது நோக்கம்."

உண்மையில் நமக்கு இஃதொரு புதிராகவே யிருக்கிறது. பிரிட்டன், தன்னுடைய ஏகாதிபத்திய நோக்கத்தை எப்பொழுது முதல் ஒதுக்கி வைத்திருக்கிறது? சரித்திரத்திலே இதற்கு என்னென்ன ஆதாரங்கள் இருக்கின்றன? இதற்கென்று யாரேனும் புதிய சரித்திரம் எழுதுவார்களோ என்னவோ நமக்குத் தெரியவில்லை. மற்ற ஜனங்களை ஆளவேண்டுமென்பது நமது நோக்கமல்லவென்று ஸர் சாயமில் சொல்கிறார். நிரம்ப சந்தோஷம். அப்படியானால், இந்தியாவுக்கு ஓர் அரசியல் அந்தஸ்தை அளிப்பதற்கு—அந்த அந்தஸ்து குடியேற்ற நாட்டந்தஸ்து என்று கனவு கண்டு கொண்டிருப் போமா!—சிறுபான்மையோர் பிரச்னை குறுக்காக நிற்கிறதென்ற ஆட்சேபத்தைக் கிளப்புவானேன்? சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுக்கே உண்டு என்று தாங்களே ஏன் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்? 'எங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுங்கள்' என்று இந்தியாவிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினர் பலரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு எப்பொழுதேனும் சன்னது கொடுத்திருக்கின்றனரா? சரித்திரத்தில் அப்படி யிருப்பதாகத் தெரியவில்லையே. இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையை இந்தியர்கள் கையிலே விட்டுவிடுவதுதானே. அதுவன்றோ, அவர்களை அவர்களே ஆண்டு கொள்ள உதவி செய்வதன் லட்சணம். ஆனால் 'உதவி செய்வது' சிறுபான்மையோரின் உரி

மைகளைப் பாதுகாப்பது' 'ஏகாதிபத்தியம்' என்ற சொற்களுக் கெல்லாம் நவீன பிரிட்டிஷ் ராஜதந்திர அகராதியில் என்ன எழுதப்பட் டிருக்கிறதோ நாம் என்ன கண்டோம்?

ஸர் சாமியல் ஹோரின் அறிக்கைக்குப் பதிலாக மகாத்மா காந்தி விடுத்திருக்கும் அறிக்கையில், 'சிறு பான்மையோரைப் பாதுகாப்பது என்ற பிரச்னை ஏதேனும் இருந்தால் அது, பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் காங்கிரஸாரும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலையாகும்' என்று குறிப்பிடுகிறார். இதை நம்மால் அங்கீகரிக்க முடியவில்லை. இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் பிரிட்டிஷாருக்கு உரிமையுண்டு என்ற கொள்கையை, இந்த அபிப்பிராயம் அங்கீகரித்தது போலாகிறது. அப்படியானால், இந்தியாவின் எதிர்கால வாழ்வு, ஓர் அந்நிய ஆதிக்கத்தின் நிழலிலேதான் இருக்கப்போகிறதா? அப்படித்தான் இருக்க வேண்டுமா? இதைவிட பாபு ராஜேந்திரருடைய அபிப்பிராயம்நேர்மையாகவும் தெளிவாகவும் இருக்கிறதென்று நாம் கருதுகிறோம். ராஜேந்திரர் கூறுகிறார்:—

> இந்தியாவினுடைய முன்னேற்றத்திற்குச் சிறு பான்மையோருடைய பிரச்னைகளை குறுக்காக நிற்கின்றன வென்று சொன்னால், வெளியாருடைய தலையீடில்லாமல், இந்தியர்களின் ஒரு முகப்பட்ட அபிப்பிராயத்திற் கிணங்கின ஓர் அரசியல் திட்டத்தை அமுல்படுத்துகிற பொறுப்பை இந்தியாவினிடத்திலேயே ஒப்படைத்து விடட்டும். அத்தோடு அப்படி அமுல்படுத்தப் பட்டால், அதற்குச் சட்டரீதியான அங்கீகாரம் கொடுப்பதாக உறுதிமொழி கொடுக்கட்டும்.

இனி தேசத்தின் கடமை என்ன? மந்திரிகளின் ராஜீநாமாவோடு இந்த விஷயம் முடிவுபெற்று விட்டதாக நாம் கருதவில்லை. சட்ட சபைகள் வேலை செய்யுமா, மாகாண கவர்னர்களே நிருவாகத்தை ஏற்றுக்கொண்டு காரியத்தை நடத்திக் கொண்டு போவார்களா வென்பவைகளைப்பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. அந்தக் கவலையை அரசாங்கத்தாருக்கு விட்டுவிடுவோம். தேசத்திலே மீண்டும் சட்டமறுப்பு ஆரம்பிக்கப்படுமா வென்ற கேள்வி கேட்கப்படுகிறது. இது விஷயத்தில், அடுத்து கூடப்போகும் காங்கிரஸ் காரியகமிட்டியின் தீர்மானத்தை தேசம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் காந்தியடிகள், 'ஹரிஜன்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

> காங்கிரஸ் காரர்கள் பூரணமான ஒழுங்கைக் காட்டினாலன்றி, அஹிம்சையையும் சத்தியத்தையும் அதிகமாகக் கடைப்பிடித்தாலன்றி பொது ஜன சட்ட மறுப்பு ஏற்படுவதற்கு இடமேயில்லை. அதிகாரிகள், பொது ஜன சட்ட மறுப்பில் இறங்குகிற நிர்ப்பந்தத்திற்கு நம்மை உட்படுத்தினாலன்றி, பொது ஜன சட்ட மறுப்பே இராது.

இந்த நிலைமையில் தேசத்தாரின் கடமை யென்ன, அரசாங்கத்தாரின் கடமை யென்னவென்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

மானிட சமூகத்தின் வளர்ச்சி

—ம. நா. ரா.

1. மனிதனுடைய ஆரம்ப வாழ்வு எப்படியிருந்தது?

ஆதி மனிதனுடைய வரலாறு என்ன, மனித சமுதாயத்தின் ஆரம்ப தசை எப்படியிருந்தது என்பனவற்றைப்பற்றிப் பல திறப்பட்ட அறிஞர்கள், பல முகங்களாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இதில் கருத்து வேற்றுமைகள் பலவும் உண்டு. பல கருத்துக்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமல்லவா? இங்கு வெளியிடப் பெற்றிருக்கும் கட்டுரையில், லௌகிக திருஷ்டியில் இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

மனிதனுடைய ஆதி வரலாறு என்ன? மானிட சமுதாயத்தின் ஆரம்பதசை எவ்வாறு இருந்தது? இவைகளெல்லாம் பெரிய பிரச்னைகள், சிக்கலான பிரச்னைகளுங்கூட, ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம். விஞ்ஞான ஆராய்ச்சி ஏற்பட்டு அது காரணமாக மனிதனுடைய அறிவானது, பல புதிய பாதைகளைக்காண்கிற வரையில், மனிதனுடைய ஆதிவரலாறு, மானிட சமுதாயத்தின் ஆரம்பதசை முதலியனவற்றைப்பற்றி ஏற்பட்டிருந்த அபிப்பிராயங்களெல்லாம் மதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கை எப்படி அமைய வேண்டும், அவனுக்கும் ஜன சமுதாயத்திற்கும் எத்தகைய தொடர்பு இருக்க வேண்டுமென்பவைகளெல்லாம், கடவுளின் ஆணைக்குட்பட்டவை, அல்லது ஏதோ ஒரு தத்துவத்தை அநுசரித்திருக்க வேண்டியவை என்ற எண்ணமே வலுத்திருந்தது. பிற்காலத்தில்தான், ராஜ்யாதிகாரமானது ஜனங்களிடத்திலிருந்தே பிறக்கிறதென்ற கொள்கை ஏற்பட்டது. இந்தத் தத்துவத்தை அநுசரித்தே சட்டங்களும் செய்யப்பட்டன. ஜனங்களை ஆள்வதற்கே அரசர்கள் பிறந்தார்கள், அந்தப் பிறப்புரிமையானது தெய்விகத் தன்மை வாய்ந்தது என்ற எண்ணம் மாறி, ஜன விருப்பத்திற்கு இணங்கியே அரசன் ஆட்சி புரிய வேண்டுமென்ற எண்ணம் பரவிய காலத்தில்கூட, மனித சமூகத்தின் ஆரம்பம், அதன் வளர்ச்சி முதலியனவைகளைப் பற்றி அறியாமையும் தவறான அபிப்பிராயங்களும் ஏற்பட்டிருந்தன. எனவே, மனிதனுடைய புராதன வரலாற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால், விஞ்ஞான திருஷ்டியுடனேயே ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

டார்வின் என்ற மேனாட்டு அறிஞன் (1809—1884) மனிதனுடைய உற்பத்தி வரவாற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்து சில புதிய தத்துவங்களை வெளியிட்டான். இதற்குப் பிறகு மனிதனுடைய ஆரம்ப நிலையைப்பற்றிய மத சம்பந்தமான எண்ணங்கள் சிதறுண்டு போயின. லூயிஸ் மார்கன் என்ற ஓர் அறிஞன், (1818—1881) மனிதன், தனது ஆரம்ப வாழ்வை எப்படி நடத்தினான் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து சில அரிய கொள்கைகளை வெளியிட்டான். இந்த ஆராய்ச்சிகள் ஜன சமுதாயத்தினிடையில் பரவத் தொடங்கியது முதல், நமது மூதாதையர்கள், ஏதோ கட்டுக் கதைகளிலும் பழைய காவியங்களிலும் வசிக்காமல், நமகண் முன்னர் வந்து உலவத்தொடங்கினார்கள். அதாவது அவர்களைப்பற்றி அதிகமாக நாம் தெரிந்து கொள்ள முடிந்தது.

இதன் பிறகு ஹெகல் என்ற ஒரு ஜெர்மானிய அறிஞன் (1770—1831) தோன்றி, விஞ்ஞான சாஸ்திரமானது எப்படி ஆராய்ச்சியின் பரிணாமமாக வளர்ச்சியடைந்து வருகிறதோ அதைப்போல நமது மூதாதையர்களின் சரித்திரமும், ஆராய்ச்சியின் பயனாக வளர்ச்சியடையக் கூடிய ஒரு விஞ்ஞான சாஸ்திரமென்ற சித்தாந்தத்தை நிலை நிறுத்தினான். அதாவது மனித சமூகமானது படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிற தென்பதே இவன் கொள்கை. இதன் பிறகு கார்ல் மார்க்ஸ் (1818—1883) ப்ரெடரிக் எஞ்ஜெல்ஸ் (1820—1895) என்ற இரண்டு அறிஞர்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்தில் மனிதனுடைய ஆதி சரித்திரமானது அவனுடைய தேவையையும் அவனுடைய பொருளுற்பத்தி சக்தியையும் பொறுத்தே வளர்ச்சியடைந்து வந்திருக்கிறதென்றும், வாழ்க்கைக்காக ஏற்பட்டு வந்திருக்கிற போராட்டமே மனித சமூகத்தின் சரித்திரமென்றும் சாதித்தார்கள். அதாவது இவர்கள் சரித்திரத்தை உலகாயதக் கொள்கை மீது தான் நிறுத்திப்பார்த்தார்கள். இவைகளினால் விளங்கிய தென்னவென்றால் மனிதன், பாவத்தைச் செய்ததற்காகக் கடவுளால் கோபிக்கப்பட்டு மோட்சலோகத்திலிருந்து விரட்டப் பட்டவனல்ல. அவ்வப் பொழுது ஏற்படுகிற பிரளய காலம் என்று சொல்கிறார்களே அந்தப் பிரளயத்திற்கும் தப்பி சிரஞ்சீவிகளாக இருக்கப்பட்ட ஒரு சிலரிடமிருந்து மானிடஜாதி உற்பத்தியாகவில்லை. யதேச்சாதிகாரமுள்ள ஒரு கடவுள், ஏதோ ஒரு விளையாட்டுக்காக, இந்த மகத்தான பூலோகத்தைச் சிருஷ்டி செய்து விடவில்லை. ஜன சமூகத்திலே மனிதனுக்கு மனிதன் எப்படி உறவு கொள்ள வேண்டுமென்பன போன்ற நியதிகளெல்லாம் ஏதோ ஒரு கடவுளின் சக்தியாலோ அல்லது தர்ம ரீதியாகவோ நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், வாழ்க்கைக்காக ஏற்பட்ட போராட்டங்களிலிருந்தே மானிட சமுதாயம் உற்பத்தியாயிற்று; அதன் பிந்திய வளர்ச்சிக்கு அநேக லௌகிக காரணங்கள் இருந்தன. இந்த மாதிரியான எண்ணங்கள், உலக அறிஞர்களிடையே பரவலாயின.

பிராணி வர்க்கத்தின் படிப்படியான வளர்ச்சியின் எல்லைதான் மனி

தன். ஒரு ஜீவஜந்துவானது, தான் சௌகரியமாக வாழ்வதற்கு, தன் தேக அவயவங்களைமட்டும் உபயோகித்துக் கொள்ளாமல், வெளிச் சக்திகளின் துணையை நாடுகிறது. அதாவது ஆயுதங்களை உபயோகிக்கிறது. ஒரு பிராணியானது, கடுமையான குளிரினின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அடர்த்தியான மயிரைத் தன் தேகத்தின் மீது வளர்த்துக் கொள்கிறது. அதுபோலவே, ஆதி மனிதனும், தன் தேகத்தை மூடிக்கொள்ள இலைகள், மரப்பட்டைகள், தோல், கடைசியில் துணி முதலியவற்றை வரிசைக்கிரமமாக உபயோகித்தான். ஒரு பிராணியானது, ஆதி மனிதனுடைய நிலைமையடைகிற தருணத்தில், தனது ஆகாரத்தைத் தேடிக்கொள்வதற்கு பற்களையோ, நகங்களையோ உபயோகிப்பதில்லை. கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்கள், வில், அம்பு முதலியவைகளை உபயோகிக்கிறான். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவக்கூடிய மாதிரியான வளைந்து கொடுக்கக்கூடிய அவயவங்கள் குரங்குகளுக்கு இருக்கின்றன. இப்படியே, குரங்கானது, ஒரு மரக்கிளையை ஒடித்து, அதனையே மரத்திலுள்ள பழங்களை உலுக்கும் ஆயுதமாக உபயோகிக்கிறது. ஆதி மனிதருடைய மூதாதையர் இங்கிருந்துதான் பிறந்தனர்.

தனது வாழ்க்கைப் போராட்டத்தில் மனிதன் எப்பொழுது தனது தேக உறுப்புகளை உபயோகிப்பதை நிறுத்திக் கொண்டு, வெளிச்சக்திகளை ஆயுதங்களாக உபயோகிக்க ஆரம்பித்துவிட்டானோ அப்பொழுதே, இயற்கையை வெற்றிகொள்கிற போராட்டத்திலும் அவன் இறங்கி விட்டானென்று சொல்ல வேண்டும். இங்ஙனம் இயற்கைச் சக்திகளோடு போராடி வெற்றி கொள்வதற்காக, மனிதன், தன்னினத்தாரின் துணையை நாடினான். இதுவே ஜனசமுதாயத்தின் ஆரம்பம். இவ்வாறு மனிதர்கள் ஒரு சமுதாயமாகக் கூட, இந்தக் கூட்டுறவானது, முதலில் வேட்டையாடுவதற்கும், பிறகு மிருகங்களை வீட்டில் வைத்துப்பழக்குவதற்கும் கடைசியில் பூமியைப் பயிரிட்டு அதிலிருந்து பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் உபயோகிக்கப் பெற்றது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், ஏதேனும் புதிய பொருள்களை உற்பத்தி செய்வதற்காக இயற்கைச் சக்திகளை உபயோகப் படுத்த மனிதர்களின் உழைப்பு தேவையாயிருக்கிற நிலைமையிலேயே ஜனசமுதாயம் என்பது ஆரம்பித்தது.

கோபமுள்ள ஒரு கடவுளினுடையவோ, அல்லது மகேச்சாதிகாரமுள்ள கடவுளினுடையவோ சிருஷ்டியல்ல மனிதன். சிருஷ்டி கர்த்தாவாக யாராவது ஒருவர் இருந்திருக்க வேண்டுமென்றால் அது மனிதன்தான். முற்போக்கான முறையில் சிருஷ்டி செய்கிற சக்தி மனிதனுக்கு இருக்கிறபடியால்தான், மனிதன் மிருகங்களினின்று வேறுபட்டவனாகிறான். மிருகங்கள் கூட சிருஷ்டி செய்கின்றனவே யென்று கேட்கலாம். ஆனால் அவை முற்போக்கான சிருஷ்டியல்ல. எனவே, சிருஷ்டிக்காக அல்லது பொருளுற்பத்திக்காக மனித உழைப்பை எவ்வாறு உபயோகப்படுத்துவது, எந்தெந்த விதங்களில் உபயோகப் படுத்துவது முதலியவைகளைப்

பொறுத்தே சமுதாயத்திலே ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் ஏற்படுகிற சம்பந்தா சம்பந்தம் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தச் சம்பந்தா சம்பந்தத்தின் வளர்ச்சியைத்தான், மானிட சமூகத்தின் சரித்திரம் வரிசைக் கிரமமாகக் குறிப்பிட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவை—அதாவது மனிதனுக்கும் மனிதனுக்கும் இருக்க வேண்டிய சம்பந்தத்தை—வரையறுக்கவும், அதையே எல்லாரும் அநுஷ்டிக்குமாறு பார்த்துக்கொள்ளவுமே நீதி முறைகள், சட்டங்கள் முதலியன வகுக்கப் பட்டிருக்கின்றன. இவை, அந்தந்தக் காலத்திற்கேற்ற வாறு ஒழுங்கு செய்யப் பட்டு அமைக்கப் பட்டன. மனிதன் எப்படி வாழ வேண்டும், எந்த நிலைமையில் வாழ வேண்டுமென்பதற்கு, எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற நிரந்தரமான சட்டமொன்றுமில்லை. உலகத்திலே இயங்குகின்ற யாவற்றையும் ஒரு நியமத்திற்குக் கட்டுப் படுத்துகிற தெய்விக சக்தியும் இல்லை.

காட்டு மிராண்டி நிலையில் மனிதன் இருந்த காலத்திலேயே, அவன் ஒரு ஜன சமூகமாகச் சேர்ந்து கொள்ள ஆரம்பித்தாலும், விவசாயத்திற்காகப் பூமியை உபயோகிக்க அவன் தெரிந்து கொண்ட போதுதான், ஜன சமுதாயத்திற்கு உண்மையான அஸ்திவாரம் போடப்பட்டதென்று சொல்ல வேண்டும். இந்த விவசாய உற்பத்தி ஆரம்ப காலமே, தங்கள் ஆகாரத்திற்காகவும் தங்கள் கால் நடைகளின் ஆகாரத்திற்காகவும் மனிதர்கள் இடம் விட்டு இடம் செல்கிற அவசியத்தின் முடிவு காலமாகவுமிருந்தது. ஜனங்கள் கூட்டங் கூட்டமாக ஆங்காங்குக் குறிப்பிட்ட இடங்களில் நிரந்தர வாசஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள். சமுதாய அமைப்பின் ஆரம்பம் இங்கிருந்துதான் உதயமாகிறது. ஒவ்வொரு கூட்டத்தினரும், மொத்தமாகத் தங்களுடைய உபயோகத்திற்கென்று ஓர் இடத்தை வரையறுத்துக் கொண்டனர். தங்கள் தேவைக்கு அதிகமான பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டிய அவசியமோ, தூண்டுதலோ இவர்களுக்கு இல்லை. தங்களுடைய சுவாதீனத்திற்குட்பட்டிருந்த நிலத்திலிருந்து போதிய பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய திறமையைப் பொறுத்திருந்ததல்லவா இந்த ஆசைத் தூண்டுதல்? அப்படி இந்தத் திறமை ஏற்படுவது மேற்படி கூட்டத்தினரின் உழைப்புத் திறனைப் பொறுத்திருந்தது. நிலம், சமுதாயத்திற்குப் பொதுவானதாயிருந்தது. ஏனென்றால், நிலத்தில் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாருடைய உழைப்பினாலுமே விவசாயஞ் செய்யப்பட்டு வந்தது. அந்த ஆரம்ப காலத்தில் ஒரு தனிப்பட்ட மனிதன், பூமியோடு போராட முடியாது. உற்பத்தி செய்கிற விதம், எல்லாருடைய உழைப்பையுங் கொண்டு எல்லாருக்கும் தேவையான ஆகாரத்தை உண்டாக்குவது, முதலியவைகளைக் கொண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் சம்பந்தா சம்பந்தம் நிர்ணயிக்கப் பட்டது. எல்லாருடைய உழைப்பின்பேரிலும் ஏற்படுகிற பலனை, எல்லாரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். என்னுடையதென்றும் உன்னுடையதென்றும் வித்தியாசமில்லாமலிருந்தது.

ஓரிடத்திலேயே மனிதர்கள் நிரந்தர வாசஞ் செய்ய ஆரம்பித்ததும், நாளா வட்டத்தில், மனித உழைப்பின் சக்தியும் அதிகமாகிக் கொண்டு வர ஆரம்பித்தது. பொருளுற்பத்திக்குத் தேவையான கருவிகள் உபயோகத்திற்கு வந்தன. இந்தக் கருவி சாதனங்கள், எல்லாரும் சேர்ந்துழைக்கிறதென்ற முறையில் தலையிட்டன. எவனொருவனுக்கு இந்தக் கருவிகளைச் செய்து கொள்ளத் தெரிகிறதோ, அவன் அந்தக் கருவியின் துணை கொண்டு தனக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள ஆரம்பித்தான். இதனால் இவன், தன் உழைப்பினால் உண்டான பொருளுக்குத்தானே சொந்தக்காரனானான். இங்கிருந்து தனி மனிதனின் சொத்துரிமை என்பது ஆரம்பமாயிற்று.

வர வர, சமுதாயத்திற்கென்று பொதுவான கடமைகள், நன்மைகள் என்பன இல்லாமற் போய் விட்டன. சமுதாயத்தைச் சேர்ந்த பல திறத்தினருக்கும், அந்தச் சமுதாயத்திற்கும் எந்தெந்த விதங்களில் என்னென்ன விதமான சம்பந்தங்கள் இருக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கச் சட்டங்கள் ஏற்பட்டன. இந்தச் சட்டங்களை ஏற்படுத்துவதற்கு ஏதேனும் ஓர் ஆதாரம் அல்லது அதிகாரம் தேவையாயிருந்தது. மதம், இந்தச் சந்தர்ப்பத்தில் துணைக்கு வந்தது. அமானுஷிக சக்தி வாய்ந்ததாகச் சொல்லப்பட்ட ஒரு சிலரை இந்த மதமானது சிருஷ்டி செய்து, இவர்களே மேற்படி சட்டங்களை வகுக்க அருகதையுடையவர்களென்று கூறியது. புராதன காலத்துச் சட்டகர்த்தர்கள் அத்தனை பேரும் ரிஷிகளாகவே இருந்தார்கள். இவர்களுக்கு அமைந்திருந்த தெய்விக திருஷ்டியினால் இந்தச் சட்டங்களை நிர்மாணித்தார்கள் என்று சொல்லப்பட்டது. சூரியன், சந்திரன், நெருப்பு, மழை முதலிய இயற்கைச் சக்திகளைப் பற்றி, தான் கொண்டிருந்த அறியாமை காரணமாக ஆதி மனிதன், அவைகளுக்கு ஒரு தெய்விக சக்தியைப் புகுத்தி விட்டான். இதிலிருந்து, உலகத்திலே தோன்றின ஒவ்வொரு பொருளுக்கும் காரணம் என்னவென்ற ஆராய்ச்சி ஆரம்பித்து விட்டது. ஒரு நித்தியப் பரம்பொருளானது, மனிதர்களுடைய ஒழுக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்தி வருகிறதென்ற எண்ணம் வேரூன்ற ஆரம்பித்தது. தெய்வ சம்பந்தத்தைப் பெற்று நிர்ணயிக்கப்பட்டதாகச் சொல்லப் பெற்ற இந்தச் சட்டங்களெல்லாம் மனிதனுடைய லௌகிக வாழ்க்கையைப் பற்றியனவாகவே இருந்தன. அதாவது, அப்பொழுது தான் தோன்றியிருக்கிற தனிச் சொத்துரிமையைக் காப்பாற்றுவதற்கும், அப்படித் தனிச் சொத்துரிமையுடையவர்களே ஆளும் ஜாதியாரென்று ஸ்தாபிதப்படுத்துவதற்குமே இந்தச் சட்டங்கள் ஏற்பட்டன.

மேலே கூறப்பட்ட தனிச் சொத்துரிமையானது, காலக்கிரமத்தில், ஆரம்ப தசையிலிருந்த மனித சமூகத்தின் உற்பத்தி சாதனமாயிருந்த நிலத்திற்கும் பரவியது. எவனொருவன் தானே சொந்தமாகக் கருவிகளைச் செய்கிறானோ அவனே அந்தக் கருவிகளுக்குச் சொந்தக்காரனாகி அந்தக் கருவிகளைக் கொண்டு

அவன் ஏதேனும் பொருள்களை உற்பத்தி செய்வானாகில் அவனே அந்தப் பொருள்களுக்கும் சொந்தக்காரனாகிறானல்லவா? இதனால், விவசாய நிலமானது, சமுதாயத்திற்குப் பொதுவான சொத்தாக இல்லாமற் போய் விடுகிறது. ஆரம்பத்தில் இருந்த பொதுவுடைமைச் சமுதாயமானது உடைந்து போய் தனித் தனிக்குடும்பத்தினராகவும் தனித்தனி கூட்டத்தினராகவும் பிரிந்து விடுகின்றது. நாளா வட்டத்தில் இந்தக் கூட்டத்தின் தலைவன், தன்னுடைய கூட்டத்திற்குச் சொந்தமான நிலத்திற்குத் தானே சொந்தக்காரனாகி விடுகிறான். இவன் மெது மெதுவாக நிலச்சுவான்தாரனாகி, விவசாயியின் நிலத்தையெல்லாம் தானே சுவாதீனப்படுத்திக் கொண்டு விடுகிறான். இங்ஙனமே, ஒரு குடும்பத்திற்குத் தகப்பனே தலைவன் என்ற அஸ்திவாரத்தின் மீது அரச பரம்பரை என்பது ஏற்பட்டது. இந்த அரசர்கள், தாங்கள் தெய்விகத் தோன்றல்கள் என்ற உரிமை கொண்டாடிக் கொண்டு பலர் மீதும் அதிகாரஞ் செலுத்த ஆரம்பித்தார்கள். இவ்வாறு, சமுதாயமானது, சுதந்திர மனிதர்கள் அடங்கிய ஒரு கூட்டமாக இருந்ததிலிருந்து மாறி விட்டது. பலபட்ட உரிமைகளைக் கொண்டாடுகிற பல வகுப்புகளாக இந்த ஜன சமுதாயம் பிரிந்தது. ஆனால், பொருளுற்பத்திக்கு முக்கிய சாதனமாக நிலமே இருந்தது. எனவே, எவனொருவனுக்கு நிலம் அதிகமாயிருந்ததோ, அவனே சமுதாயத்தில் உயர்ந்தவன் என்று கருதப்பட்டான். இந்த மாதிரியாக ஏற்பட்ட நிலச்சுவான்தார்கள், தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உபயோகித்து சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கை நிலை நிறுத்திக் கொண்டார்கள். மதம், தருமம், சட்டம் முதலியவைகளெல்லாம், இந்தச் செல்வாக்கு மங்கிவிடாமல் பாதுகாப்பதற்காகவே இருந்தன.

பல நோக்கங்களையும் உரிமைகளையும் உடைய வகுப்புகள் சமுதாயத்தில் தோன்றி விடுமானால், அவற்றின் பரிணாமமாக வகுப்புச் சச்சரவுகள் ஏற்படுவது சகஜந்தானே. இந்தச் சச்சரவுகள் வர வர முற்றுவதும், திடீரென்று வெடித்து, ஏதோ ஒரு விதமாக இயங்கிக் கொண்டிருந்த சமுதாயத்தை ஆட்டிக் கொடுப்பதும், சரித்திரத்திலே அடிக்கடி நிகழ்கிற சம்பவங்களாக நாம் பார்க்கிறோம். இந்த வெடிப்பு அல்லது புரட்சி எப்பொழுது ஏற்படுகிறதென்றால், ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிற சமுதாயமானது அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற போதுதான். இந்த அழிவு நிலையிலேயே புதியதொரு சமுதாயத்தைச் சிருஷ்டி செய்யக் கூடிய சில சக்திகள் தோன்றுகிறன. மனிதனுடைய சிருஷ்டி சக்தி, இவ்விடத்தில் முன்னணிக்கு வந்து நிற்கிறது.

குறிப்பிட்ட ஒரு சமுதாய அமைப்பானது, அந்தச் சமுதாயத்திற்குத் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகிற முறையைப் பொறுத்திருக்கிறது. சமுதாயமே மனிதனுடைய சிருஷ்டிதானே. எனவே, அந்தச் சமுதாயத்தின் அமைப்பும் அதன் வேலையும் எதைப் பொறுத்திருக்கிறதென்றால், அந்தச் சமுதாயத்தைச் சிருஷ்டி செய்வதற்கு என்னென்ன முறைகள் கையாளப்பட்

டனவோ, அவைகளைப் பொறுத்தே இருக்கின்றன. நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு சமுதாயத்திற்கு எப்பொழுது ஆபத்து ஏற்படுகிறதென்றால், அந்தச் சமுதாயத்திற்குள்ளே, புதிய முறையில் பொருளுற்பத்தி செய்யப்படுகிற முறை தோன்றும் பொழுதுதான். மனிதன் கடவுளல்ல. ஒருபொருளை வைத்துத்தியானிப்பதற்காக அதனை அவன் சிருஷ்டி செய்வதில்லை. அதிகமான பொருள்களையும் புதிய பொருள்களையும் உற்பத்தி செய்யவே அவன் விரும்புகிறான். ஆனால் பழைய சம்பிரதாயங்களிலேயே ஊறிப்போயிருக்கிறவர்கள், முன்னேற்ற சக்திகளைத் தடை செய்ய முயல்வது சகஜந்தானே. நின்ற நிலையிலேயே இருக்க வேண்டுமென்ற கொள்கையும், புதிய சக்திகளை உற்பத்தி செய்துகொண்டிருக்க வேண்டுமென்ற கொள்கையும் எப்பொழுதும் போராடிக் கொண்டிருக்குமல்லவா? ஒரே இடத்தில் நின்று கொண்டிருப்பதா அல்லது முன்னேறிச் செல்வதா வென்ற இரண்டு பிரச்னைகளில் ஏதேனும் ஒன்றை மனிதன் கைப்பற்றிக் கொண்டு தன் காரியத்தைச் செய்ய வேண்டும். வாழ்வு என்பது என்ன? சதா இயங்கிக் கொண்டிருப்பது தானே. அப்படி இயங்காமல் வாழ்க்கையானது ஸ்தம்பித்துப்போய் விடுமானால், விளைவு என்ன? மரணம். ஆகையால், மனித வாழ்க்கையானது முன்னேறிக்கொண்டு செல்லவேண்டும். இதற்கு இடைமறித்து நிற்போர் அப்புறப்படுத்தப் படவேண்டும். இதுதான் சமுதாய மாற்றத்தின் சாராம்சம். சிருஷ்டி சக்தியானது, எப்பொழுதுமே போராட்டத்தைத் தூண்டி விடுகிறது. உரிமைச் சக்திகளும், சலுகையோடு வாழ்ந்து வந்த சக்திகளும் எப்பொழுதுமே புதிய சிருஷ்டிகளோடு போரிடத்தான் செய்யும். மனிதன் நின்ற நிலையிலேயே இருக்க முடியாது. அப்படி நின்றால் அவன் மனிதனல்லன். ஏதேனும் புதிதாகச் சிருஷ்டி செய்ய வேண்டுமென்று அவனுக்கேற்பட்டிருக்கிற எண்ணமானது, அவனைக் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக மேடைக்கு அழைத்துச் செல்கிறது. இன்றைய நாகரிகமானது, பூரணத்துவம் பெறாமல், அதாவது ஒழுங்குபடாமல் பல குறைபாடுகளோடு கூடியதாயிருக்கிறதென்றால், அதற்குக் காரணம் மனிதனிடத்தில் இப்பொழுதும் சிருஷ்டி சக்தி தீவிரமாக எரிந்து கொண்டிருக்கிறதென்பதுவே அர்த்தம். மனிதன், உன்னதமான சிருஷ்டிகளைச் செய்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இன்னும் அதிக உன்னதமான சிருஷ்டிகளை அவன் செய்ய வேண்டியவனாயிருக்கிறான். அதுவே நமது நம்பிக்கை.

காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்கள்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 1939ம் வருஷம் அக்டோபர் மாதம் 7, 8, 9ந் தேதிகளில் வார்தாவில், பாபு ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியது. சுமார் முந்நூறு அங்கத்தினர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். மகாத்மா காந்தியும் கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அங்கத்தினர்கள், ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையைப்பற்றியும், யுத்தத்திற்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தையும் பற்றியும் வாதஞ் செய்தார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன:—

அடுத்த காங்கிரஸ்

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியின் காரணமாக உண்டாகக் கூடிய பல விளைவுகளைச் சமாளிக்கவும், தேசிய தேவைகள் அவசியமாக வேண்டப்படுகிற காலத்தில் ஜனங்களின் கவனம் வேறுவிதமாகச் செல்லாதிருக்கவும், 1939ம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசிவாரத்தில் நடத்துவதாக இருந்த காங்கிரஸானது, 1940ம் வருஷம் மார்ச் மாதம் இரண்டாவது பட்சத்திற்குத் தள்ளிவைப்பதென்று அ. இ. கா கமிட்டி தீர்மானிக்கிறது. காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல், அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர் தேர்தல், தலைவர் தேர்தல் முதலியவை யெல்லாம், பின்னடி நிர்ணயிக்கப் படுகிற ஒரு தேதிவரை தள்ளிவைப்பதென்று முடிவு செய்திருக்கிறது.

ஆயினும், தேசநலனைப் பாதிக்கக் கூடிய பலபிரச்னைகள் இடைக் காலத்தில் எழுமாதலாலும், அதற்காக வெகு சீக்கிரத்தில் காங்கிரஸின் விசேஷக் கூட்டமொன்று கூட்டப் பெறுதல் அவசியமாதலாலும் டிசம்பர் மாதம் கடைசி வாரத்திலோ அல்லது வேறு உசிதமான காலத்திலோ, காங்கிரஸ் விசேஷக் கூட்டமொன்றை காரியக் கமிட்டி கூட்டலாம்.

அப்படிப் பட்ட விசேஷ காங்கிரஸ் கூட்டுவதின் அவசியத்தை காரியக் கமிட்டியே தீர்மானிக்கும்படி அநுமதிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது, காங்கிரஸ் பிரதிநிதிகளாகத் தெரிந் தெடுக்கப் பட்டிருப்பவர்களே இந்த விசேஷ காங்கிரஸ் கூட்டத்திற்கும் ஆஜராயிருக்கலாம்.

விசேஷ காங்கிரஸின் விஷயாலோசனைக் கமிட்டியாக, பிரஸ்தாப வருஷத்திற்கு அ. இ. கா. கமிட்டியே இருக்கும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

யுத்த நெருக்கடி தீர்மானம்

ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கப்பட்டு விட்டதானது, பொதுவாக உலகத்திற்கும் சிறப்பாக இந்தியாவுக்கும் முக்கியமாயிருக்கக் கூடிய ஒரு சர்வ தேச நிலைமையை உண்டு பண்ணி விட்டது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், இந்தியப் பொது ஜனங்களை வழி காட்டிச் செல்லும் மகத்தான பொறுப்பு அ. இ. கா. கமிட்டிக்கு ஏற்பட்டிருப்பதால், அது—அதாவது அ. இ. கா. கமிட்டி—காங்கிரஸ் இதுகாறும் வெளியிட்டுள்ள கொள்கைகளையும் உறுதி மொழிகளையும் தனக்கு ஆதாரவாக இக்தச் சந்தர்ப்பத்தில் தேடிக் கொள்கிறது.

இந்திய மகா ஜனங்கள் சுதந்திரமடைந்து, எல்லாவித சிறு பான்மைச் சமூகத்தினருடைய உரிமைகளும் சலுகைகளும் பாதுகாக்கப் படக் கூடிய சுதந்திர ஜன நாயக அரசாங்கத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதையே தனது குறிக்கோளாகக் கொண்டு காங்கிரஸ் இதுகாறும் வேலை செய்து வந்திருக்கிறது. இந்த நோக்கத்தை அடைவதற்குக் காங்கிரஸானது, சமாதான முறைகளையும் நியாயமான முறைகளையுமே கையாண்டு வந்திருக்கிறது. யுத்தம், பலாத்காரம் முதலியவைகள், முன்னேற்றத்திற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் விரோதமானதென்றும், ஆகையால் அவை வெறுக்கத் தக்கனவென்றும் இதுகாறும் காங்கிரஸ் கருதி வந்திருக்கிறது. ஏகாதிபத்தியத்திற்காக நடைபெறும் யுத்தங்களையும், ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதையும் காங்கிரஸ் எதிர்த்துக் கொண்டு வந்திருக்கிறது.

யுத்த சம்பந்தமாகக் காங்கிரஸ் இந்த மாதிரி யெல்லாம் தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்த போதிலும் இந்திய மகாஜனங்களின் சம்மதமின்றியே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந்தியாவை, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒரு நாடாகக் கருதிவிட்டனர். தவிர, இந்திய மகா ஜனங்களைப் பாதிக்கக் கூடிய பல சட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதோடு, மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்களையும் வரையறுத்திருக்கின்றனர்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் யுத்தநோக்கங்களென்ன, சமாதான நோக்கங்களென்ன என்பதைப்பற்றித் தெரிவிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை மேற்படி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கொடாமல் அ. இ. கா. கமிட்டி இதென்று எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

யுத்த நெருக்கடி சம்பந்தமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி 14-9-1939ல் விடுத்திருக்கிற அறிக்கையை இந்த அ. இ. கா. கமிட்டி அங்கீகரிக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களுடைய யுத்த நோக்கங்களையும் சமாதான நோக்கங்களையும் தெரிவிக்க வேண்டுமென்று அதில் கூறப்பட்

டுள்ள வேண்டுகோளை இந்தக் கமிட்டி மீண்டும் வற்புறுத்துகிறது.

பாசிஸ, நாஜீப ஆக்ரமிப்பை அ. இ. கா. கமிட்டி கண்டிக்கிறது. ஆனால் அதே சமயத்தில், உலகத்தில் சமாதானமும் சுதந்திரமும் நிலைத்திருக்க வேண்டுமானால், எல்லாக் குடியேற்ற நாடுகளுக்கும் ஜனநாயக உரிமையையும் சுயநிர்ணய உரிமையையும் அளிக்க வேண்டுமென்றும் ஏகாதிபத்தியப் பிடிப்பு இல்லாமற் போக வேண்டுமென்றும் இந்தக் கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

சிறப்பாக இந்தியா ஒரு சுதந்திர நாடென்று அங்கீகரிக்கப்பட வேண்டும். அதனுடைய அரசியல் அந்தஸ்தை இப்பொழுதே நன்றாக நிர்ணயித்துக்கூற வேண்டும். இந்த மாதிரியான ஓர் அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிடுவர் என்று அ. இ. கா. கமிட்டி எதிர்பார்க்கிறது.

ஜனநாயகத்தையும் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டதும், எல்லாச் சிறுபான்மைச் சமூகத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியதுமான ஒரு சுதந்திரமாக இந்தியாவின் சுதந்திரம் இருக்க வேண்டுமென்று இந்தக் கமிட்டி மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறது.

காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, யுத்த அவசரக் கமிட்டியொன்றை நியமித்திருப்பதை இந்தக் கமிட்டி அங்கீகரிப்பதோடு, இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்திலும், யுத்த நெருக்கடி சம்பந்தமாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையின் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதன் சம்பந்தமாகவும், காரியக் கமிட்டியார் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தக் கமிட்டி தீர்மானிக்கிறது.

மந்திரிகளின் ராஜீநாமா

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் 22-10-39ல் வார்தாவில் கூடியது. அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

பிரிட்டிஷாருடைய யுத்த நோக்கங்களைப் பற்றியும் சிறப்பாக அந்த நோக்கங்கள் இந்தியாவுக்கு எவ்விதத்தில் பயன் படுத்தப்படுமென்பதைப் பற்றியும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளுக்குப் பதிலாக ராஜப் பிரதிநிதி (17-10-39ல்) விடுத்திருக்கிற அறிக்கையானது மிகவும் அதிருப்திகரமாயிருக்கிறதென்று காரியக் கமிட்டி அபிப்பிராயப் படுகிறது. மற்றும், இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற வேண்டுமென்று உறுதி பூண்டிருப்பவர்களுக்கும் ஆவலுடன் இருப்பவர்களுக்கும் மிகவும் வெறுப்பை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. கோரிக்கை ரூபமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டி விடுத்த அறிக்கையானது, இந்திய மகா ஜனங்களின் சார்பாக மட்டுமல்ல; யுத்தம், பலாத்காரம், தேசங்களையும் ஜனங்களையும் சுரண்டி அது காரணமாக யுத்தத்திற்கு விதை விதைக்கிற பாசிஸ, ஏகாதிபத்திய முறைகள் முதலியவைகளினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற அகில உலக ஜனங்களின்

சார்பாகவும் வெளியிடப் பெற்றது. இந்த ஜனங்கள் புதிய முறையில் ஏற்படுகிற சமாதானத்தையும் சுதந்திரத்தையுமே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பழைய ஏகாதிபத்திய கொள்கையை வலியுறுத்துவதாகவே ராஜப் பிரதிநிதியின் அறிக்கை இருக்கிறது.

இந்தியாவில் பல கட்சிகள் இருக்கின்றன வென்று மேற்படி அறிக்கையில் கூறப்பட்டிருப்பது, கிரேட் பிரிட்டன் உண்மையான நோக்கத்தை மறைப்பதற்கேயாகும். இந்தியாவில் எத்தனை கட்சிகள், அபிப்பிராய வேற்றுமைகள் முதலியன இருந்த போதிலும், இந்தியாவைப் பற்றி பிரிட்டன் உண்மையான மனப்பான்மை யென்ன வென்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடைய யுத்தக் கோரிக்கைகளைத் தெரிவிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கேட்டது.

சிறுபான்மைச் சமூகத்தினரின் உரிமைகள் போதுமான அளவு பாதுகாக்கப்படுமென்று காங்கிரஸ் எப்பொழுதுமே கூறி வந்திருக்கிறது. காங்கிரஸ் கேட்கும் சுதந்திரமானது, குறிப்பிட்ட ஒரு சமூகத்தாருக்கோ, அல்லது ஒரு வகுப்பினருக்கோ அல்ல. இந்திய ஜன சமுதாயத்தைக் கட்டுக்கோப்பாக அமைத்துக் கொடுக்கிற எல்லா ஜாதியினருக்கும் சேர்ந்தாற் போன்ற தொரு சுதந்திரத்தையே காங்கிரஸ் கேட்கிறது. இந்தச் சுதந்திரத்தை ஸ்தாபிப்பதும், தேச மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதும் ஜனநாயக முறையினால் தான் முடியும்.

ஆதலின், ராஜப்பிரதிநிதியின் அறிக்கை எந்த முகாந்திரத்தைக் கொண்டு பார்த்தாலும் அதிருப்திகரமானது என்பதுதான் கமிட்டியின் அபிப்பிராயம். ஆதலின், கிரேட் பிரிட்டனுக்குக் காங்கிரஸ் எந்தவிதமான உதவியையும் செய்ய முடியாது. அப்படி செய்வது, எந்த ஏகாதிபத்தியக் கொள்கையை ஒழிப்பதற்காகக் காங்கிரஸ் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறதோ அந்த ஏகாதிபத்திய முறையை ஆதரிப்பதாகும். ஆதலின் காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கமிட்டி கோருகிறது.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், எல்லாவித உள் நாட்டுச் சச்சரவுகளையும் ஒழித்துவிட வேண்டுமென்றும் இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஏகோபித்து உழைக்க வேண்டுமென்றும் கமிட்டி, அனைவரையும் கேட்டுக் கொள்கிறது. இனி ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு எல்லாக் காங்கிரஸ் கமிட்டிகளும் எல்லாக் காங்கிரஸ்காரர்களும் தயாராயிருக்குமாறு கமிட்டி கேட்டுக் கொள்கிறது. இந்தியாவின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய விதமாகவோ, எந்தக் கொள்கைகளுக்காகக் காங்கிரஸ் நிற்கிறதோ அந்தக் கொள்கைகளுக்கு விரோதமாகவோ, யாரும் எந்த விதமான வார்த்தையையும் உபயோக்க வேண்டாமென்றும் எந்த விதமான செயலையும் செய்ய வேண்டாமென்றும் காரியக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

சட்ட மறுப்புத் தொடங்குவது அரசியல் சம்பந்தமான வேலை நிறுத்தங்களை நடத்துவது முதலிய காரியங்

களை அவசரப்பட்டுச் செய்ய வேண்டாமென்றும் எல்லாக் காங்கிரஸ்காரர்களையும் கமிட்டி எச்சரிக்கை செய்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதை காரியக் கமிட்டி கவனித்துக் கொண்டுவரும். தக்க சந்தர்ப்பத்தில் தேசத்திற்கு வழிகாட்டி நடத்திச் செல்ல காரியக் கமிட்டி பின்வாங்காது என்பதையும் தெரிவிக்கிறது.

நாம் எதிர்த்துப் போராடுகிற பிரச்னை எவ்வளவு மகத்தானதோ அதற்குத் தகுந்தாற் போல் நம்முடைய எதிர்ப்பும் இருக்க வேண்டும். அதற்கு முக்கியமான தேவையாயிருப்பது ஒழுங்கு. ஆதலின் ஒழுங்கும் கட்டுப்பாடும் எல்லாக் காங்கிரஸ்வாதிகளுக்கும் அவசியமான தென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கமிட்டி வற்புறுத்துகிறது.

இதற்கு முன்னர் காங்கிரஸால் நடத்தி வைக்கப் பட்ட அஹிம்சா தர்மப் போராட்டத்தின் இடையிடையே பலாத்காரமும் கலந்திருந்த தென்பதை காங்கிரஸ் உணர்கிறது. ஆதலின் இனி ஏற்படப் போகிற எதிர்ப்பானது, பலாத்கார மற்றதாக இருக்க வேண்டும். 1921ம் வருஷம் ஆமதாபாத் காங்கரஸிலும் அதற்குப் பின்னரும் எடுத்துக் கொள்ளப்பட்ட உறுதி மொழியை காங்கிரஸ் காரர்களுக்கு, இந்தக் கமிட்டி மீண்டும் நினைவு படுத்துகிறது.

உலக வல்லரசுகளின் படை பலம்

(உத்தேசம்)

பெயர்.	கப்பற்படை டன்	ஆகாய விமானங்கள்	ராணுவம்
பிரிட்டன்	1,604,000	2800—3500	217,000
அமெரிக்கா	1, 00,000	2100—2800	178,000
ஜப்பான்	1,120,000	2000—[illegible]800	1,250,000
பிரான்ஸ்	785,000	2200—2800	708 000
ஜெர்மனி	465,000	3000--4000	1,000,000
இத்தலி	670,000	2800—3500	300,000
ருஷ்யா	315,000	3000—4200	1,300,000

தென்னுப்பிரிக்கா ஏழை இந்தியர்களின் உரிமைகள்

—நமது தென்னுப்பிரிக்கா நிருபர்

ஒரு நாட்டில் வசிக்கும் மனிதர்களில் சிலராவது அல்லது ஒரு சமூகத்தில் உள்ள சிலராவது உரிமைகள் காக்கப்பட்டு சுகமாக வியாபாரத்தாலோ, கைத்தொழிலாலோ சம்பாதித்து இனிது வாழ்ந்து வந்தால் அந்நாட்டில் வசிக்கிறவர்கள் எல்லாருமோ அல்லது அந்தச் சமூகத்தில் வசிக்கிற எல்லாருமோ உரிமைகள் காக்கப்பட்டுசுகமுடன் வாழுகின்றனர் என்று எண்ணி விடக்கூடாது. ஒரு தேசத்தில் வசிக்கிற பெரும் பகுதியான மனிதர்களும் அல்லது ஒரு சமூகத்தில் வசிக்கிற பெரும் பகுதியானவர்களும் தங்கள் உரிமைகள் காக்கப்பட்டு நன்கு சம்பாதித்து இனிது வாழ்தலே மனிதர்கள் கஷ்டமின்றி வாழுகின்றனர் என்று கூறலாம்.

இம்முறையை வைத்துத் தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் உரிமைகள் காக்கப்பட்டு சுகமுடன் சம்பாதித்து இன்பமுடன் வாழுகின்றனரா என்று பார்த்தால் பெரும் பான்மையான இந்தியர்கள் தங்களின் உரிமைகள் காக்கப்படாமல் வேலைகள் கொடுக்கப்படாமல் போதுமான சம்பளங்கள் கொடுக்கப்படாமல் சுகசீவனத்துக்கே போதிய பணமில்லாமல் கஷ்டங்களை அடைகின்றனர். இக்நிலையில் உள்ள பெரும் பகுதியான ஜனங்கள் தலைவரி என்றும், நில வரி என்றும், வீட்டு வரி என்றும் நேமிக்கப்பட்டு கட்ட முடியாமல் கஷ்டத்தையே அடைகின்றனர்.

சென்ற பத்து வருஷங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட இப்போதுள்ள இந்தியர்களின் நிலைமை அதிக கஷ்டமாயிருக்கிறது. அரசாங்கத்தாரின் ஒயிட் பாலசி—வெள்ளையர்களை மட்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் முறையால்—கவர்ன்மெண்ட் ரெயில்வே முதற் கொண்டு இந்தியர்களுக்குப் புதிதாய் வேலை கொடுக்காமலும் போனதால், அவர்களைப் பார்த்த மற்றத் தனி கம்பெனிகள் இந்தியர்களுக்கு வேலை கொடுக்காமலும், சில கம்பெனிகளில் வேலை செய்யும் இந்தியர்களை வேலையிலிருந்து எடுத்தும் வருகிறார்கள். இருபது வருஷங்களுக்கு மேலும் நாணயமாக ரொட்டி, கேக் சுடும் வேலை செய்து வந்த இந்தியரையும், அவரைச் சார்ந்தவர்களையும் சமீபமாக வேலையிலிருந்து நீக்கி விட்டனர். நல்ல கை வேலையும், நாணயமான வேலையும் செய்யும் இந்தியர்களுக்கே வேலை கொடுப்பதில்லை என்றால் மற்ற இந்தியர்களுக்கு

எப்படி கொடுப்பார்கள் என்பதை அறியலாம். நாம் லக்க விடத்துக்கு போய் விசாரித்த போது இந்தியர்களை இனி வேலைக்கு வைப்பதில்லை என்றும், அவர்களுக்குப் பதில் வெள்ளையர்கள் நேமிக்கப்பட்டனர் என்றும் கேள்விப்பட்டோம். இந்தியர்களாலே நலத்தை யடையும் அரசாங்கத்தாரே இந்தியர்களுக்கு வேலை கொடுக்காவிட்டால் மற்றத் தனி கம்பெனிகள் எப்படி கொடுக்கும் என்பதை நாம் கூறத்தேவையில்லை.

இப்படி அநேக இந்தியர்களுக்கு வேலை கிடைக்காமற் போனதாலும், அவர்களுக்குப் பிழைக்க வழியில்லாமலும் போனதால் பலர் 'ரிப்பாட்ரியேஷனில்' இந்தியாவுக்குச் சென்றும் அங்கும் சொல்லொணாத கஷ்டங்களை அடைகின்றனர். இந்த 'ரிப்பாட்ரியேஷன்' முறைக்குத் தப்பினவர்கள் வீடு, நிலம், வைத்துக் கொண்டு பயிர்த் தொழில் செய்து பிழைக்கும் இந்தியர்களே பெருந்தொகையானவர்கள். இவர்கள் டர்பனில் வாடகை கொடுத்துக் கொண்டு வசிக்க நிலைமையில்லாமல் டர்பன் சுற்றுப் பாகங்களில் துண்டு நிலங்களை வாங்கிக் கொண்டு அவைகளில் வீடுகளைக் கட்டிக் கொண்டும், பலர் வாடகை நிலங்கள் பிடித்துப் பயிரிட்டுக் கொண்டும் பிழைத்து வருகின்றனர்.

இப்படிச் சுற்றுப்பாகங்களில் வசிக்கிற இந்தியர்களும், மற்றபடி ரெயில்வே, கார்ப்பொரேஷனில் வேலை செய்கிறவர்களின் சம்பாத்தியங்கள் அவர்களின் மனைவி குழந்தைகளின் சாப்பாட்டிற்கும் துணிக்கும் போதாமல் கஷ்டப் படுகின்றனர். மூன்று நான்கு பிள்ளைகளை உடையவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்போதிய துணிகள், புத்தகங்கள் வாங்க முடியாமலிருக்கின்றனர்.

ஒரு பெரிய இந்தியப் பள்ளிக்கூடத்தில் ஐந்நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள் என்றும், அவர்களில் முக்கால் பகுதி பிள்ளைகள் அரை உடையுடன், அரைச் சாப்பாட்டுடன் பள்ளிக்கூடத்துக்கு வருகின்றனர் என்றும் கூறினார். இதனால் பெரும் பகுதியான இந்தியப் பிள்ளைகள் ஆரம்பப் படிப்பை அடைதற்கே கஷ்ட நிலையிலிருக்கின்றனர். இப்பேர்ப்பட்டவர்கள் மேல் வகுப்புப் படிப்பை எப்போது அடையப்போகின்றனர்? இந்த அத்தாட்சிகளைக் கொண்டே உயர்தரக் கல்விக்குக் கட்டின சாஸ்திரி காலேஜ் ஏழை இந்திய பிள்ளைகளுக்கு எப்படி உபயோகப்படுகிறதென்பதை அறியலாம்.

இப்படிப் பெரும் பகுதியான இந்தியர்கள் கஷ்ட நிலையிலிருக்கையில் தலைவரி என்றும், நிலவரி என்றும், வீட்டு வரி என்றும் ஏற்படுத்தி இந்தியர்கள் வெள்ளையர்களுக்குச் சமமான வரிகளைக் கட்ட வேண்டியிருப்பதால் பலர் வரிகளைக் கட்ட முடியாத நிலையிலிருக்கின்றனர்.

வெள்ளையர்களுக்கு வேலை கிடைப்பது போலவும், அவர்களுக்குக் கிடைக்கிற சம்பளங்கள் போலவும், அவர்களுக்குக் கிடைக்கிற உரிமைகள் போலவும் இந்தியர்களுக்குக் கிடைப்பதில்லை. ரோட்டு, விளக்கு, டிராம், பஸ், கடற்கரை வசதி இன்னும் பல உரிமைகள் வெள்ளையர்களுக்கிருப்பது போல் இந்தியர்களுக்கில்லை.

நவராத்திரி

—எஸ். கே. நாராயணய்யர்
B. A. B. L.

தொன்று தொட்டே நவராத்திரி வைபவம் கொண்டாடப் பெற்று வருகின்றது. பாரத காவியங்களுள் ஒன்றாகிய இராமாயணத்தில் கூட இராமன் நவராத்திரி பூஜை செய்ததாகக் கூறப்பெற்றுள்ளது. இப்பூஜை வருஷா வருஷம் சரத் ருதுவில் முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் பெறுகின்றது. சாதாரணமாக இவ்விழா பத்து தினங்கள் நடைபெறுகிறது. தென்னாட்டில் சற்றேறக் குறைய ஒவ்வோர் இல்லத்திலும் ஸ்திரீ புருஷர்கள் தேவியை பூஜிப்பதோடு ஆடம்பரமான 'கொலு' வென்று சொல்லும் ஏற்பாடொன்று செய்து அதனழகைக் காண ஒவ்வொரு ஸ்திரீயும் ஏனைய தனக்குத் தெரிந்த ஸ்திரீகளையும் அழைத்து பல தாம்பூலாதிகள் கொடுத்துபசரிக்கின்றனர். அக்காலத்தில் பெண்களெல்லாம் தம்தம் உயர்ந்த ஆடையாபரணங்களோடு இலங்குவதோடு ஆடவரைக் குறைந்து அம்மகளிர் இராஜ்யமாகவே ஒவ்வொரு வீடும் தோன்றும்.

இந்நவராத்திரி பூஜை வட இந்தியாவில் வங்காளத்தில் வெகு விமரிசையாகவும் பெருமையாகவும் கொண்டாடப்பெறுகிறது. அந்நாட்டினர் எல்லாம் அநேகமாய் காளியாகிய துர்க்கையை வணங்குவோராதலின் அத்துர்க்கைக்குரியதென கருதப்பெறும். இப்பூஜையை அவர்கள் அன்புடன் பெருமையாய் ஆதரிப்பது ஆச்சரியப்படக்கூடிய தொன்றன்று. வங்காளத்தில் இந்தக் காலத்தை பூஜா காலமென்று கூறுவதோடு எல்லாக் காரியாலயங்களிலும் விடுமுறை நாட்களாகக் கொண்டாடப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் இராம லீலா வென்னும் விசேஷ காலமாகக் கொண்டாடப்பெறுகிறது, பொதுவாக இந்தியா முழுதுமே இப்பருவம் விழாமிகுந்த ஒரு காலம்.

பக்தி சிரத்தையோடு செய்யப் பெறும் ஒவ்வொரு காரியமும் சாதாரணமாய் சாமியமானதே. யாதொரு நன்மையைக் கருதியோ, விடாது தொடரும் தீமையை ஒழிக்க வெண்ணியோ கடவுளைப் பெரும்பாலும் வணங்குகின்றனர். இந்நவராத்திரி பூஜையும் அவ்விதமே எல்லோராலும் இஷ்டகாமிய சித்திக்காகக் கொண்டாடப் பெறுவது. இப்பூஜையில் துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி யாகிய சக்தி மூன் வணங்கப் பெறுகின்றன. இங்கே தெய்வம் ஸ்திரீ ரூபமாகக் கருதப் பெறுவதால் அதிகமாக ஸ்திரீகளே இப்பூஜைகளில் கலந்து கொள்கிறார்களென்றாலும் ஆடவரும் வெகு நியமத்தோடு இப்பூஜையில் சேர்ந்து கொள்வதும் உண்டு. அதாவது இப்பூஜை ஸ்திரீ புருஷர் இருபாலருக்கும் உரியது.

இப்பூஜை உண்டான ஆரம்பத்தை வெகுவாய்த் துருவி நோக்கியும்

ஆராய்ச்சி பலன் தரவில்லை. இப்பூஜை ஒன்பது தினங்களுக்கு நடப்பதென்பது நவராத்திரி என்றழைப்பதனாலேயே தெரியும். இவ்வொன்பது தினங்களில் சர்வலோகங்களுக்கும் ஆதாரவும், துணையும், பலமுமாயுள்ள சக்தி தேவியானவள் கொடிய இராக்ஷஸர் நிசாசரர்களோடு சண்டையிட்டு பத்தாவது தினம் வெற்றி பெற்றமையால் அந்த தினம் விஜய தசமி என்றழைக்கப் பெறுகிறது. இப்பெரிய யுத்தம் தக்ஷிணாயன காலத்தில் நடந்ததாகவும் அவ்விதம் பராக்கிரமத்தோடு தேவி யுத்தம் செய்த தினங்களில் அவளை வணங்கி தேவி வெற்றியடைந்த விஜய தசமியன்று எல்லாரும் பண்டிகை கொண்டாடுகின்றனர் என்று ஊகிக்க வேண்டியதன்றி ஆதாரங்கள் எங்கும் கிடைப்பதாயில்லை. உற்று நோக்கும்போது பாரதப் போர் தக்ஷிணாயனத்தில்தான் நடந்தது. அதனாலேயே பீஷ்மர் உத்திராயணத்தில் பீஷ்ம ஏகாதசி யென்று சொல்லும் முதல் பூர்வ பக்ஷ ஏகாதசி வரையில் தேக வியோகமடையாமல் காத்திருந்தார். இராமாயண யுத்தமும் தக்ஷிணாயனத்தில்தான் நடந்திருக்க வேண்டும். ஏனெனில் இராமன் சரத் காலம் கழிந்ததும் நராதிகளோடு இலங்கை நோக்கிப் புறப்பட்டு சீக்கிரத்தில் யுத்தம் தொடங்கினனன்றோ? அதர்மத்தையே வளர்க்கும் இராக்ஷஸர்களுக்கும் நிசாசரர்களுக்கும் இரவும் தக்ஷிணாயனமுமே மிகவும் பொருத்தமான காலம். அதனால் இந்த யுத்தமும் தக்ஷிணாயனத்திலேயே நடந்திருக்க வேண்டும்.

நவராத்தி யென்று நாம் கொண்டாடுவதற்கேற்ப தேவமானத்தாலும் இக்காலம் இரவாகவே தோன்றும். இத்துர்க்கா பூஜை தக்ஷிணாயனத்தில் சரத்ருதுவில் வருகிறது. தேவமானப்படி தக்ஷிணாயனம் அவர்களுக்கு இராக் காலம். ஆகையால் இப்பூஜை அவர்களுக்கு இரவில் வருவதால் நவராத்திரி யென்று பெயர் வந்திருக்கலாம். தவிர இச்சரத்ருதுவும் தக்ஷிணாயனத்தின் முதலிலேயே வருவதால் இப்பூஜை முன்னிரவில் நடப்பதாகும். உலகில் ஒன்பது தினங்கள் இப்பூஜை நடப்பதால் தேவமானத்தால் சக்தி தேவியானவள் ஒரு இரவின் முற்பகுதியில் சிறிது காலத்திற்குள்ளேயே துஷ்டர்களை சம்ஹரித்து தர்மத்தை நிலை நாட்டியிருக்க வேண்டும்.

இப்போது வெள்ளித் திரையில் 'சாமுண்டேசுவரி' காட்டப் பெறுகிறது. இது நவராத்திரி மகாத்மியத்தை விளக்குவது. சக்தி தேவியானவள் தும்ரலோசனன், சண்டன், முண்டன், ரக்த பீஜன், அம்பன், நிசும்பன், மஹிஷாசுரன் முதலிய அநேக அசுரர்களை வதைத்தனள். தேவியானவள் சண்டனையும் முண்டனையும் சம்ஹரித்ததனாலேயே அவளுக்கு சாமுண்டேசுவரி என்று பெயர் வந்தது. அசுரராஜனும் மிகக் கொடியவனுமாகிய மகிஷாசுரனை தேவியானவள் யுத்த முடிவில் மடித்தாள். அதனால் அவளுக்கு மஹிஷாசுர மர்த்தனி என்று பெயர் வழங்கலாயிற்று.

வெகு காலமாகவே சக்தி பெரிதா சிவம் பெரிதா வென்னும் பிரச்னை உலவி வருகின்றது. அப்பிரச்னைக்கு நேரான விடையல்ல வென்றாலும் ஈசுவர நிலையை ஒரு வகைப்படுத்திக் கூற முடியாதென்கிறபடி இங்கே

கடவுள் ஸ்திரீ ரூபமாகக் கூறப்பெறினும் அபாரமான பராக்கிரமத்தையும் வல்லமையும் குறிக்கின்றது. கடவுளை மூன்று விதமாக சிருஷ்டி, ஸ்திதி, சங்கார கர்த்தாக்களாகக் கருதுவது போல அம்மூவர்க்கும், முறையே சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி யாகிய மூன்று சக்திகளையும் நியமித்துள்ளனர். இந்நவராத்திரியில் இம்மூன்று ரூபமான சக்தியை வணங்குமாத்திரத்தால் திரிமூர்த்திகளை வணங்குவதோடு பரம்பொருளையே வணங்குவதாகும். கடவுள் நிலை பெரிதென்பதற்காக மும்மூன்று தினங்களாகிய ஒன்பது தினங்கள் வணங்கப் பெறுகின்றன. கடவுள் பூரணமானவர் என்பது குறித்து தனித்த எண்களில் மிகப் பெரிதான ஒன்பது தினங்கள் கடவுள் பூஜை நடக்கிறது.

நவ மென்றால் புதிதாகையால் இந்நவராத்திரி காலத்தில் ராத்திரிகளும் புதிது புதிதாகத் தோன்றும். பிரத்யக்ஷப் பிரமாணத்தில இந் நவராத்திரி காலங்களில் ஸ்திரீகள் புதிது புதிதான ஆடை பரணங்களை யன்றி தங்களையும் புது புது மாதிரிகளில் அலங்கரித்துக் கொள்வர். அதிலும் சிறு குழந்தைகளை அதிகயும் ஆச்சரியப் படக்கூடிய முறையில் அலங்கரித் தனுப்புவர். அது மட்டுமல்லாமல் இந்நவராத்திரி வருடா வருடம் புது புது மாதிரிகளை யடைகிறது. கொண்டாடும் தன்மையும் தன்னில் பல வேறுபாடுகளும் சேர்ந்துள்ளன.

இந்நவராத்திரியில் துர்க்காலக்ஷ்மி சரஸ்வதிக்கும் அவரவர்க் குரிய காலமும் தினமும் கூட வரையறுக்கப் பெற்றுள்ளன. துர்க்கைக் குகந்த நாள் அஷ்டமி. காளிக் குரிய நாளானதனாலேயே காளாஷ்டமி என்று அழைக்கப் பெறுகிறது. சரஸ்வதிக் குரிய தினம் நவமி. அத்தினத்திலேயே சரஸ்வதி பூஜை செய்யப் பெறுகிறது. லக்ஷ்மிக் குரிய தினம் முந்திய மூன்று தினங்கள். எல்லா சக்திகளும் ஏகமாய்ச் சேர்ந்து தேவியாகத் தோன்றி மஹிஷா சுரனைக் கொன்று வெற்றி யடைந்த விஜய தசமி. அத்தேவிக்குரியதாய் சக்தியர் அனைவருக்கும் பொருத்தமான நாளாகும். நவராத்திரியில தேவியை பக்தி சிரத்தையோடு தொழுவோர் பரமானந்தத்தையும் இஷ்டசாமிய சித்தியு மடைவர்.

ஆறு ருதுக்கள்

சித்திரை—வைகாசி	—	வசந்தருது அல்லது இளவேனிற் காலம்
ஆனி—ஆடி	—	கிரீஷ்மருது அல்லது முதுவேனிற்காலம்
ஆவணி—புரட்டாசி	—	வருஷருது அல்லது கூதிர்காலம்
ஐப்பசி—கார்த்திகை	—	சரத்ருது அல்லது கார்காலம்
மார்கழி—தை	—	ஹேமந்தருது அல்லது முன் பனிக்காலம்
மாசி—பங்குனி	—	சிசிருது இல்லது பின் பனிக்காலம்

ஞானக்களஞ்சியம்

ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

——ஸ்ரீ ஸ்தானந்த சுவாமிகள்

அறிவாளியாகப் பழகு

ஞானியும் வேம்பின் பழமும்

வேம்பின் காய் மிகவுங் கசப்புள்ளதாகும். அது இளங்காயாக இருக்கும் பொழுது அதை யாதொரு பிராணிகளும் தின்பதில்லை. ஆனால் அது பழுத்துப் பக்குவமாகும் பொழுது இனிய சுவை பெற்று பட்சி முதலான அளவற்ற பிராணிகள் தின்று சந்தோஷிப்பதற்கு ஏற்றதாகின்றது. அதுபோல் ஒருமனிதன் அஞ்ஞானியாயிருக்கும் பொழுது அவனை உலகம் வெறுப்பதும் பசுபாசமுள்ள அவனுடைய செய்கைகள் உலகத்திற்கு யாதொரு உபகாரமில்லாமற் போவதும் சர்வ சாதாரணம். ஆனால் அவன் ஞானியாகுங்கால் உலக முழுவதும் அவனை அன்போடு கொண்டாடுவதும் அவனது முயற்சிகள் அனைத்தும் ஸர்வ ஜீவ கோடிகளுக்கும் பிரயோஜனகரமாவதும், பிரத்தியக்ஷம். ஆதலால் எவன், தன்னுடைய முயற்சிகள், உலகத்திற்கு உபகாரமாக வேண்டுமென உண்மையாக (மனப்பூர்வமாய்) நினைக்கின்றானோ அவன் முதலில் ஞானியாக வேண்டும்.

பேராசை

விரைவில் ஓடிய வேதியச் சிறுவன்.

பள்ளியிற் பயிலும் வேதியச் சிறுவனொருவன் ஒரு திக்கிலிருந்து புறப்பட்டுச் சிறிது தூரத்திலுள்ள மற்றொரு திக்குக்கு வெகு விரைவில் ஓடுகின்றானென வைத்துக் கொள்வோம். அதிவேகமாய் ஓடுகின்ற அவனுக்கு வழிநடுவில் யாதொரு காரியத்தையும் பற்றிச் சிறிதேனும் ஆலோசிப்பதற்குச் சாத்தியமின்று. ஆனால் அவன் உத்தேசித்த திக்கிற்சென்று அங்குச் சொற்ப நேரம் சிரமபரிகாரஞ் செய்து கொள்வானாயின் அவன் எல்லாக் காரியங்களையும் பற்றிக் கிரமமாக ஆலோசிக்கும் சக்தியையும் (சாமர்த்தியத்தையும்) பெறுவான். அதுபோல் வீணே அழிந்து போவதாகிய தனதானிய வஸ்துக்களை எவ்வளவு தூரம் சம்பாதிக்க போதிலும் அதனாற் சிறிதும் சந்தோஷம் உண்டாகாது. மென்மேலும் சம்பாதிக்க

வேண்டுமெனும் மஹா மோஹமாகிய ஓட்டத்திற்கே எப்பொழுதும் உட்பட்டும் தனக்குத் திருப்தியாகத் தோன்றுகின்ற (உத்தேச) விஷயத்தை அடைந்து கிருதார்த்ததையாகிய அமைதி நிலையை யனுபவியாமலும் இருக்கின்ற மானிடர்க்கு, தன்னுடைய ஜீவகாலத்தில் பரமாத்துமாவைச் சாஸ்திர முறைப்படி வழிபடுவதற்கு ஒரு நிமிஷங்கூட இயலுவதில்லை. ஆகா! என்ன பரிதாபம்!

கிட்டாத செயல்

சாதகப் பறவையின் சாதுரிய மொழி

சாதக பக்ஷியானது மழைபெய்யும் பொழுது தலையை உயரத் தூக்கி அதன் வாயை மேற்புறமாகச் சாய்த்துக் கொண்டிருக்குமென்பதும் அப்பொழுது அதன் வாயினுள் விழுகின்ற ஜலத்தைப் பருகி அது தாக சமனம் செய்துகொள்ளுமென்பதும் உலகமறிந்த விஷயம். இதைக் கண்ணுற்ற வேறொரு பக்ஷியானது இவ்வண்ணம் ஒரு கேள்வி போட்டது 'எனது நண்பர் மணியே! பூமியில் எவ்வளவோ கிணறுகளும், குளங்களும், நதிகளும் இருக்க, நீயேன் வீணே இவ்வண்ணந் துன்பமடைகின்றாய்?' இதைக்கேட்ட சாதகம் 'பூமியிலுள்ள ஜலங்களெல்லாம் அசுத்தமுள்ளனவாயும் நிந்திக்கத் ' தக்கனவாயும் இருக்கின்றன. ஆதலால் நான் சுத்தமுள்ள பொருள்களை அங்கீகரிப்பதன்றிப் புத்தியற்றவர்களாகிய உங்களது கூட்டத்தாரைப்போல அசுத்த பதார்த்தங்களை ஓர் காலத்தும் கையாளுபவனல்ல என விடையளித்தது'. இவ்விதஞ் சில மனிதர்கள் தங்களால் ஆதரிப்பதற்கும் அனுஷ்டிப்பதற்கும் அசாத்தியமெனத் தோன்றுகின்ற அருஞ் செயல்களையெல்லாம் பயனற்றதாகத் தள்ளி விடுகின்றனர். எனது கழுத்தில் துவாரங்களிருப்பதால் நான் பூமியிலிருந்தும் ஜலத்தை உறிஞ்சி உங்களைப் போல் குடிப்பதற்குச் சாத்தியமில்லை, என்ற சாதக பக்ஷியானது அப்பறவையினிடம் உண்மையாகக் கூறவேண்டியிருக்க அது அங்ஙனஞ் செய்யாது, பூமியிலுள்ள தண்ணீரினிடத்தில் புளிப்பென்றும் அசுத்தமென்றும் பல குற்றங்களைக் கற்பித்து நான் அதைக் குடிப்பதில்லையென்று சொல்லித் தனக்குப் பெருமை சம்பாதித்துக் கொள்வதற்காக முயன்றது போல அஞ்ஞானிகள் தாங்கள் அறியாததும் முடியாததும் தங்களுக்குக் கிடைக்காததுமாகிய சகல சங்கதிகளையும் கைவிட்டு விட்டுத் தாங்கள் அவ்விதம் விட்டதனால் தங்களுக்கு ஏதோ சில விசேஷமான யோக்கியதை யுண்டாகி விட்டதாக நினைத்துக் கொள்ளுகின்றார்கள். இது அவர்களின் அசத்துத் தன்மையை விளக்குவதற்கு ஓர் காரணமாகு மன்றோ?

தொழிற் பெயர்

தேவதத்தன் எக்ஞதத்தனுக்களித்த ஐந்து பிருதுகள்

தேவதத்தனென்பவன் தனது இன்னுயிர் நேயனாகிய எக்ஞதத்தனை ஏதோ பாக்கிய வசத்தால் ஐந்து முறை பார்க்கும் பொழுது தேவதத்தன் எக்ஞதத்தனைப் பார்த்து 'எனதன்பார்ந்த கர்ஷக! உனது விவசாயத்திற்கும் உனக்கும் யாதொரு குறைவுமின்றிச் சுகமேயிருக்கின்றனையா?' என்றும் இரண்டாவது

முறையில் 'ஓ வைசியனே! சாமான்களெல்லாம் விற்பனையாகி வருகின்றனவா' எனவும், மூன்றாந் தடவையில் 'க்ஷத்திரிய மணியே! பிரஜைகளுக்கெல்லாம் உனது ஆக்ஷி முறையினால் திருப்தி யுண்டாயிருக்கின்றதோ' என்பதாகவும், நான்காவது தருவாயில் 'ஓய் வானப்பிரஸ்தரே! இவ்வனத்தினின்றும் தங்களுக்கு வேண்டிய வண்ணம், கனி கிழங்கு முதலியன கிட்டி வருகின்றனவா?' என்றும் ஐந்தாந்தருணத்தில் உலகினைத் துறந்த உத்தம சந்நியாசியே! தங்களுடைய அனுக்கிரஹம், சாதுவாகிய எனக்குக் கிடைக்குமேல் எனக்கு இவ்விதமான துக்கங்களை யனுபவிக்கும்படிக்குச் சிறிதும் நேர்ந்திராதல்லவா? என்பதாகவும் கேட்கலாயினான். தேவதத்தன், ஐந்தாவது முறையில் அவ்வசனம் புகன்று சென்றவுடனே, எக்ஞதத்தன் தன்னந்தனியே இருந்து மனவமைதியுடன் இவ்வண்ணம் ஆலோசனை செய்யத் தொடங்கினான். 'இஃதென்ன விந்தை! எனது மித்திர ரத்தினமாகிய தேவதத்தன் யக்ஞதத்தனாகிய என்னை கர்ஷகன் (விவசாயி) யென்றும், வைசியனென்றும், க்ஷத்திரியனென்றும், வானப்பிரஸ்தனென்றும் சந்நியாசியென்றுங் கூப்பிட்டானல்லவா? ஆகா! அதன் காரணம் எனக்கு இப்பொழுதல்லவோ மனதில் தோற்றுகின்றது. எல்லோருக்கும் அன்னமளித்தற் கேதுவாகிய கலப்பை, எருதுகள், தானியங்கள், என்னும் இம்மூன்று பொருள்களையும் (சாதனங்களையும்) நான் அங்கீகரித்திருந்தபொழுது என்னை ஒரு கர்ஷகன் என்றும் (2) மானிடர்க்கு தேவையானவைகளை நிறை வேற்றும் பொருட்டு உபயோகப் படுவனவாகிய தராசு, படிக்கல், வியாபாரச் சாமான்கள் எனும் இம்மூன்று வஸ்துக்களையும் நான் கைப்பற்றியிருக்குங்கால் என்னை ஓர் வைசியனென்றும் (3) அரசாங்கத்தினது பாதுகாப்பிற் குரியனவாகிய ஆயுதம், கொடி, சைநியம் எனும் இம்மூன்று குறிகளைத் தரித்திருக்கும் பொழுது என்னை க்ஷத்திரியனெனவும் (4) மரவுரி, நகவளர்ச்சி இத்தகைய தவசியின் அடையாளங்களை வகித்திருக்குங் கால் என்னை வானப்பிரஸ்தனெனவும் (5) பார்த்த மாத்திரத்தால் சகல விதமான பாவங்களையும் போக்கிப் பாவனஞ் செய்கின்ற, காஷாயம், ருத்திராட்சம், கமண்டலு, என்கின்ற இம்மூப் பொருள்களையும் தாங்கியிருக்குங்கால் என்னை ஓர் சந்நியாசியெனவும் கூப்பிடுதற்குக் காரணமாயிற்று. ஆனால் இவ்வைந்து விதங்களாகிய அபிமானப் பெயர்களுக்கும் முக்கிய காரணங்களாயிருந்த கலப்பை முதல் கமண்டலு வரையிலுள்ள பதினைந்து உபாதிக் குறிகளையும் நீக்கிய பொழுது அவ்வபிமானத்தினால் உண்டானவைகளாகிய 'கர்ஷகன், வைசியன், க்ஷத்திரியன், வானப்பிரஸ்தன், சந்நியாசி' என இடையிற் கிடைத்த ஐந்து பெயர்களும் நீங்கி ஆதாரம் நசமுற மேல் ஆதேயமும் நாசமுறும். (காரணாபாவே காரியா பாவ:) என்ற நியாயப்படி நான் இயல்பாகிய எக்ஞதத்தனாகி விட்டேன். அதுபோல் சுத்த சைதன்ய சொரூபியாகிய யான் ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம், விராட், ஹிரணிய கர்ப்பன், மாயை, ஸத்து, சித்து, ஆனந்தம், சுத்தம், சூந்யம், அபாவம் யதார்த்தம், ரஹஸ்யம், அநந்தம், என்பன வாகிய வியக்தாவியக்த சரீ

இந்திய தேசிய இயக்கம்— எப்படி வளர்ந்தது?

—ஜி. டி. காரெட்

இதன் முதற்பகுதி, 'ஜோதி' செப்டம்பர் மாதத்துக் கதிரில் வெளியாயிற்றென்பதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

புரட்சிகரமான நோக்கத்தையுடைய எந்த இயக்கத்தை எதிர்க்கிறவர்களும், யாரோ ஒரு சிலருடைய வேலைத்திறன் காரணமாகவே அந்த இயக்கம் வளர்ச்சியடைந்து வருகிறதென்றுதான் கூறிக் கொண்டிருப்பார்கள். சமுதாய சீர் திருத்தங்களும் மதச் சீர் திருத்தங்களும் ஏற்படுவதற்கு முன்னால் நடைபெறுகிறஎல்லாக் கிளர்ச்சிகளுக்கும் இந்தப் பெயர் ஏற்பட்டிருப்பதை சரித்திர வாயிலாக நாம் காண்கிறோம். இந்த உண்மையையே, இந்திய தேசிய இயக்க வளர்ச்சியிலும் நாம் காண்கிறோம். ஓர் இயக்கம் தோன்றுவதற்கு மூல்காரணமாயிருக்கிற எண்ணமானது, ஆரம்பத்தில் பிறரால் அறியக் கூடாததாகவே இருக்கிறது. அப்படி அது வளர்ச்சி பெருகிற தருணத்தில், அதனைத் தோற்றுவித்தவர்கள், கொஞ்சம் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டுவதும் அவசியமாகிறது

ரங்கள் மூன்றுகளையும், இவைகளை யபிமானிக்குங்கால் முறையே (1) ஜீவன் (2) ஈசுவரன் (3) பரப்பிரமம் (4) ஒழிவு (5) ஒடுக்கம் எனவும் அவைகட்குச் சாக்ஷியாக இருக்கும் பொழுது (1) கூடஸ்தன் (2) பிரம்மம் (3) சர்வசாக்ஷி (4) அதீதம் (5) மௌனம் எனவும் நாமங்களைப் பெறும். ஆனால் ஸ்தூலம் தொடங்கி அந்தம் ஈறாகவுள்ள பதினைந்து சரீரங்களையும் நீக்குங்கால் ஜீவன் முதல் ஒடுக்கம் வரையிலுள்ள ஐந்து அபிமானி நாமங்களும், அவைகளில் இருந்து கொண்டு சாக்ஷித் தன்மையாகத் தோற்றமுறுகின்ற கூடஸ்தன் முதல் மௌனம் இறுதியாகவுள்ள ஐந்து சாக்ஷித் தன்மைகளையும் மௌனத்தையுங் கடந்தவனாகி அவை என்னிடத்தினின்றும் நீக்கப்பட்ட பொழுது நான் முன்னரேபோல கேவலனாகின்றேன். இது தான் சகல வேதங்களுடையவும் முடிவிலே விளங்குகின்ற தத்பதம், துவம்பதம், அசிபதம், அகிபதம், நிஜபதம் என்னும் மஹா வாக்கியங்களுடைய ரஹஸ்யார்த்தம். இத்தத்துவத்தைச் சற்குருவின் வாயிலாகக் கிரமப்படியறிந்து அனுபவித்தவர்களே விதேக மோக்ஷத்தை யடைந்தவர்கள். அவர் தாம் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவராவர்.

ஆனால் இந்த ஆத்ம பரிசோதனையில் இறங்கும் ஆற்றல் ஒரு சிலருக்கே ஏற்படுகிறது. இந்தியாவில் சுகுமாரனர் அதிகம். அதைப் போல், திலகர், அரவிந்தர், வரேந்திர கோஷ், விபின சந்திரபாலர், சித்த ரஞ்சன தாஸர், லஜபதிராய், அலிசகோதரர்கள், மகாத்மா காந்தி முதலியோர் அரசியல் வாழ்வைப் பொறுத்த மட்டில் சிசுக்களைப் போலிருந்து இறந்து விட்டிருந்தால் கூட, இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றித்தான் இருக்கும்; அது வளர்ச்சியும் அடைந்திருக்கும்; அதில் படித்த வகுப்பாரும் சேர்ந்து தான் இருப்பர். இந்த இயக்கத்தின் விளைவாக, சில ஐரோப்பியர்கள் கொலை செய்யப் பட்டிருக்கலாம்; இன்னும் பத்திரிகைகளும், மேடைப் பிரசங்கிகளும், கடுமையான பதப் பிரயோகங்களைப் பிரயோகித்து ஜனங்களுடைய எண்ணத்தில் ஒருவித ஆவேசத்தைக் கிளப்பி விட்டிருப்பர். இந்த இயக்கமானது, தக்காணத்தைப்பொறுத்த மட்டில் அநுபவ பூர்வமானதாக இருக்கும். வங்காளத்தைப் பொறுத்த மட்டில் லட்சியம் வாய்ந்ததாக இருக்கும். வடக்கில் மத சம்பந்தமான உணர்ச்சிகள் கிளப்பி விடப் பட்டிருக்கும். பஞ்சாப், மேற்கிந்தியா முதலிய பிரதேசங்களில், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இந்தியர்கள் குடியேறுவதைப் பற்றி ஏற்படுத்தப் பெற்ற நிர்ப்பந்தங்களைக் குறித்துக் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கும். பருத்தி வியாபார சம்பந்தமாக விதிக்கப் பெற்ற தடைகளைக் குறித்து வியாபாரிகள் கிளர்ச்சி செய்திருப்பார்கள். ஐரோப்பியர்களுக் கொரு விதமாகவும் இந்தியர்களுக் கொரு விதமாகவும் வழங்கப் படுகிற நீதியைக் குறித்து நகரவாசிகள் கிளர்ச்சி செய்திருப்பார்கள். இத்தலியை அபிசீனியாவும், ருஷ்யாவை ஜப்பானும் தோற்கடித்து விட்டதைக் குறித்து, பஜார்களில் பல விதவதந்திகள் எழும்பி ஜனங்களுக்கு ஒருவித உணர்ச்சியைக் கொடுத்திருக்கும். ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, கிலாபத் இயக்கமும் ஆரம்பித்தே இருக்கும்.

மேலே சில தலைவர்களின் பெயரைக் குறிப்பிட்டோமல்லவா? அவர்கள் அரசியல் துறையில் ஓரளவு அடைந்த வெற்றியின் விளைவு என்னவாயிருக்கும் என்பதை இங்கே விவரித்துச் சொல்ல முடியாது. சிவாஜியினால் தோற்றுவிக்கப்பட்ட தேசியக் கிளர்ச்சியும், வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியும், ஒத்துழையாமைக் கிளர்ச்சியும் இந்திய தேசிய இயக்கத்தை வளர்த்தனவா அல்லது, போய்ச் சேருகிற இடம் இன்னது என்று தெரியாத ஒரு பாதையில் இந்திய இளைஞர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களுடைய சக்திகளெல்லாம் சிதற அடிக்கப்பட்டனவா என்ற கேள்விகள் சிக்கலானவை தான். அரசியல் வாழ்வில் ஒரு தலைவர் முக்கிய ஸ்தானம் பெறுவது, மற்றவர்களை முன்னுக்குத் தள்ளிக் கொண்டு போகும் சக்தியையும், தாம் நடத்தும் கிளர்ச்சியில் புதிய முறைகளைக் காலத்திற் கேற்றவாறு கையாள்வதையும் பொறுத்திருக்கிறது. இந்த அளவு கோலைக் கொண்டு நாம் பார்த்தோமானால், பாலகங்காதர திலகருடைய பெயரும், மகாத்மா காந்தியின் பெயருந்தான் முன்னணிக்கு வந்து நிற்கின்றன. இந்த இரண்டு தலைவர்கள் தோன்றியிராவிட்டாலும், இந்தியாவில் தேசிய இயக்கம் என்னவோ

தோன்றி நடைபெற்றுத்தான் இருக்கும். ஆனால் சீர்திருத்த மனப்பான்மையுடன் கூடியதாக இருக்கும். இருபதாவது நூற்றாண்டின் கடைசி வரை, அது முன்னுக்கும் வந்திராது. திலகருடைய மகத்தான செல்வாக்கின் காரணமாக, பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசி பாகத்தில் புரட்சி இயக்கமானது ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாகப் பரிணமித்தது. 1857ம் வருஷத்துச் சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர்த் தோன்றிய வைதிக ஹிந்து தர்மத்தின் புனருத்தாரண இயக்கத்தோடு இந்தக் கிளர்ச்சி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததென்று சொல்லலாம். ஐரோப்பிய மகா யுத்தத்தின் முடிவின் போதுதான்—1918ம் வருஷத்திற்குப் பிறகு—திலகருடைய செல்வாக்கு குறையவும் காந்தியின் தேசிய இயக்கத்தில் சீர்திருத்த சக்திகள் புக ஆரம்பித்தன. வகுப்பு வேற்றுமைகளின்றி, அகில இந்திய இயக்கமாக இஃது வளர்ந்தது. முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் முதலியோரும் இதில் சேர்ந்தனர்.

ஏறக்குறைய 1880ம் வருஷத்தில் திலகர் பொதுவாழ்வில் பிரவேசித்தபோது, புனாவில் தமது சுய ஜாதியைச் சேர்ந்த சித்பாவன் பிராமணர்களுடனேயே போராட வேண்டியிருந்தது. ராஜாராம் மோகனராயின் சீர்திருத்த மனப்பான்மை கொண்டவர்களும் அரசியலில் மிதவாத நோக்கமுடையவர்களுமான பல பிரபலஸ்தர்கள் அந்தக் காலத்தில் புனாவிலிருந்தார்கள். இவர்களில் ரானடே, பண்டார்க்கார், சந்தாவர்க்கார், கோகலே முதலியோர் முக்கியமானவர்கள். இவர்கள், அரசியல், சமூதாயம் முதலிய துறைகளில் கொண்டிருந்த லட்சியங்கள், 'இந்திய ஊழியர் சங்கத்தில்' பிரதிபலிக்கின்றன. இவர்கள்தான் இந்திய தேசிய காங்கிரஸை ஆதியில் ஆரம்பித்தவர்கள். இவர்களுடனேயே திலகர் ஓயாத போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. இந்தப் போராட்டங்களில் இவருக்குத் தோல்விகள் ஏற்பட்ட போதிலும், போராட்ட சக்திகள் இவரிடம் நிரம்பியிருந்தன. இவர் 'கேசரி' என்ற ஒரு வாரப் பத்திரிகையை மஹாராஷ்டிர பாஷையில் ஆரம்பித்து, அதன் மூலமாக தேசிய இயக்கத்திற்கே ஒரு புதியதொனியைக் கொடுத்தார். ஆங்காங்கு தேகப் பயிற்சி ஸ்தாபனங்களை ஆரம்பித்தார். மஹாராஷ்டிரக் கிராமங்களில் மிகப் பிரபலமாயிருக்கும் கணேச பூஜை முதலியவைகளை ஆரம்பித்தார். இங்ஙனம் தேசிய உணர்ச்சியைத் தூண்டி விட்டுக் கொண்டே வந்தார்.

பூனாவில் பிரசித்தமாயிருந்த சர்வஜனிக் சபையைத் திலகர் கைப்பற்றிக் கொண்ட பிறகு, அவருக்கு அதிகமான செல்வாக்கு ஏற்பட்டது. தீவிர வாதிகளின் தலைவரானார். இவருடைய பிரசாரமெல்லாம் பிரிட்டிஷாருக்கு விரோதமானதாகவே இருந்தது. (இவருக்கு உள்ளூர, புராதன இந்தியாவிலிருந்ததைப் போல் மீண்டும் பிராமண ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்கலாமோ என்னவோ, இவருடைய பிரசாரமெல்லாம் அகில இந்திய தேசிய நோக்கங் கொண்டதாகவே இருந்தது. ஆனால் இவர், இந்தியர்களென்ற தொகுதிக்கு,

முஸ்லிமான்களும் ஐரோப்பியர்களும் புறம்பானவர்களென்று கருதியிருந்தார். இவருடைய இயக்கத்தில், மற்ற மாகாணங்களிலுள்ள பிராமணரல்லாதாரும் சேர்ந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்குச் சுயராஜ்யம் அவசியம் தேவை என்பதை திலகர் உண்மையிலேயே நம்பினர். ஓயாத கிளர்ச்சியினாலேயே பிரிட்டிஷாரிடமிருந்து சலுகைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதி வரை திலகருடைய வேலைகள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால் ஓர் அரசியல் கிளர்ச்சியை எப்படி நடத்துவது என்பதைப் பற்றி படித்த வகுப்பாருக்கு அவர் மிகவும் திறமையாக வழி காட்டினர். மதப்பற்று, மாகாணப் பற்று முதலியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினர். தேச பாஷைப் பத்திரிகைகளால் என்னென்ன சாதனங்கள் உண்டாகுமென்பதையும் எடுத்துக் காட்டினர். பத்திரிகைத் தொழிலை நடத்துவதில் இவர் மிகவும் சமர்த்துக் காட்டினர். இவருடைய கிளர்ச்சியினால் சில கலகங்களும் ஏற்பட்டன.

இந்திய தேசிய இயக்கத்தின் ஆரம்ப தசையில், ஒவ்வொரு மாகாணத்திலும் தோன்றிய இயக்கமானது, மாகாண வாரியாகவே இருந்தது. பின்னரே இவை, அகில இந்திய இயக்கமாக மாறியது. இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்பட்ட பிறகுதான், தேசிய இயக்கமே அகில இந்திய இயக்கமாக மாறியது. ஆரம்பத்திலிருந்து காங்கிரஸானது, சுமார் நாற்பது வருஷங்கள் வரை செய்திருக்கும் வேலையை மிகைப்படுத்திச் சொல்வது சுலபந்தான். பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாக ஏற்பட்ட கிளர்ச்சிக்கு அது எப்பொழுதுமே பின்பலமாயிருந்ததில்லை. தீவிர நோக்கமுள்ள பலர், இந்த ஸ்தாபனத்தைச் சில சமயங்களில் கைப்பற்றிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், காங்கிரஸானது எப்பொழுதுமே, தேசியக் கட்சிகள், தங்கள் தங்கள் செல்வாக்கை ஸ்தாபித்துக் கொள்ள நடத்திய போராட்டத்தின் மேடையாகவே இஃது இருந்திருக்கிறது. 1885ம் வருஷம் முதன்முதலாக நடைபெற்ற காங்கிரஸானது, தேசிய வாதிகளால் ஆரம்பிக்கப்படவில்லை. சில மிதவாதிகளும் ஐரோப்பியர்களுமே சேர்ந்து ஆரம்பித்தார்கள். ஏ. ஓ. ஹியூம் என்ற ஒரு மாஜி ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தர்தான் இதன் ஸ்தாபிதத்திற்கு முக்கிய காரணர். முதல் காங்கிரஸுக்கு எழுபது பிரதிநிதிகளே ஆஜராயிருந்தனர். பிரதிநிதிகளை மன்றாடி வரும்படி கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. இந்தப் பிரதிநிதிகளோ பெரும்பாலும் பள்ளிக்கூட வாத்தியார்களும் வக்கீல்களுமாயிருந்தார்கள்.

இந்த முதல் காங்கிரஸோடு 1927ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற ஒரு காங்கிரஸை ஒப்பிட்டுப் பார்ப்போம். இந்தக் காங்கிரஸுக்கு விசிட்டர்களும் டெலிகேட்டுகளுமாக இருபத்தையாயிரம் பேர் வந்திருந்தனர். தலைவர்களுடைய பிரசங்கத்தை 'லவுட் ஸ்பீகர்'கள் மூலமாகப் பிரதிநிதிகள் கேட்டார்கள். பிரசங்கம் செய்த ஒவ்வொருவரும், இங்கிலாந்தைப்பற்றியோ அரசாங்கத்தைப் பற்றியோ பேசுகிற போது, ஏதோ ஓர் அடைமொழி கொடுத்துத்தான் பேசினர்.

காங்கிரஸ் ஆரம்பித்த இரண்டொரு வருஷங்களுக்குள்ளேயே அது செல்வாக்கு மிகுந்ததாகி விட்டது. பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வந்தது. 1892ம் வருஷத்துக் காங்கிரஸிலிருந்தே, கொஞ்சம் தலை நிமிர்ந்து பேச ஆரம்பித்தது. புதிய சட்ட சபைகளைப்பற்றித் தனது அதிருப்தியைத் தெரிவித்தது.

இங்கிலாந்திலும், காங்கிரஸ் கொள்கைகளைப் பரப்பும் பொருட்டு 'இந்தியா' என்ற ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்கப் பட்டது. 1888ம் வருஷத்தில் லார்ட் டப்ரினைக் கவர்னர்,—ஜெனரலாகக் கொண்ட இந்தியா அரசாங்கத்தார், இதனைப்பற்றித் தூஷித்துப்பேச ஆரம்பித்தனர். 1896-97ம் வருஷத்தில் அபிசீனியாவில் இத்தாலியர் அடோவா என்ற யுத்தத்தில் தோல்வியுற்றது, 1897ம் வருஷம் திலகர் நடத்திய கிளர்ச்சிக்கு மூல காரணமாயிருந்த தென்பதையும், 1904ம் வருஷத்தில், ருஷ்யாவை ஜப்பான் தோற்கடித்ததானது, வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சிக்கு மூலகாரண மாயிருந்த தென்பதையும் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்கும். வங்காளத்தை இரண்டு கூறாகப் பிறித்த லார்ட் கர்ஸனுடைய செயல் சரியாதவறா வென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுவது இங்கு அநாவசியம். ஆனால் இந்தப் பிரிவினைக் கிளர்ச்சி, வெறும் ஹிந்து கிளர்ச்சியாக மட்டும் இருந்தது. இது பிராமணர்களால் தூண்டி விடப்பட்ட ஓர் இயக்கம் என்று சொல்வது தவறு. இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்களான விபினசந்திர பாலரும், அரவிந்தகோஷும் பிராமணரல்லாதாரே. இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியின் போது, அந்நியத் துணிகள் பகிஷ்காரஞ் செய்யப் பட்டன. அரசியல் கொள்ளைகள் நடை பெற்றன. ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களையும் இந்திய உத்தியோகஸ்தர்களையும் தாக்குவது சர்வ சகஜமாகி விட்டது.

திலகர் கைதியானது, அச்சுச் சட்டம் போன்ற சில அடக்கு முறைச் சட்டங்கள் இயற்றப் பட்டது முதலியவைகளுடன், அரசியல் கிளர்ச்சியிலேயே ஒரு சகாப்தம் முடிந்து விட்ட தென்று சொல்ல வேண்டும். தேசிய வாதிகள் என்று தங்களை அழைத்துக் கொண்ட தீவிரவாதிகள், ஹிந்து மதத்திற்கு ஒரு புதிய சக்தியைக் கொடுத்தனர். ஆனால் இவர்களால், பிரிட்டிஷ் ஆட்சியை அசைத்துக் கொடுக்க முடியவில்லை. அதற்குமாறாக, இந்திய அரசியல் வாழ்விலேயே, சில ஊறுகளையும் இவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள். வங்காளப் பிரிவினையின் போது ஏற்பட்ட கிளர்ச்சியின்போது அனுசரிக்கப் பட்ட முறைகளினால், முஸ்லீம்கள் ஒதுங்கி விட்டனர். 1890ம் வருஷத்துக் காங்கிரஸில் நான்கில் ஒரு பங்கு பேர் முஸல்மான்களா யிருந்தார்கள். ஆனால் 1905ம் வருஷம் நடைபெற்ற காங்கிரஸில் மொத்தம் ஆஜரா யிருந்த 756 பிரதிநிதிகளில் 17 பேரே முஸ்லீம்களா யிருந்தார்கள். காங்கிரஸுக்குள்ளேயே மிதவாதிகளுக்கும் அபேதவாதிகளுக்கும் தீவிரப்போராட்டம் நடைபெற்றது. கோகலேயைத் தலைவராகக் கொண்ட மிதவாதக் கட்சியினர், திலகரை தலைவராகக்

யுத்தத்தைப் பற்றிய சில விவரங்கள்

நடுநிலைமை நாடுகள்

ஸ்பெயின், போர்த்துகல், ஸ்விட்ஜர்லாந்து, இத்தலி, பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், எஸ்டோனியா, லாட்வியா, லிதுனியா, ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லேவியா, துருக்கி. அமெரிக்கா, தென்னமெரிக்காவிலுள்ள நாடுகள், ஈரான், ஆப்கானிஸ்தானம்.

ருஷ்யா, நடுநிலைமை நாடா இல்லையா?

சேதம் எவ்வளவு?

பிரிட்டிஷ் கடற்படை மந்திரியின் வாசகப்படி, யுத்தம் ஆரம்பித்த

முதல் வாரத்தில் 65,000 டன்
இரண்டாவது வாரத்தில் 46,000 டன்
மூன்றாவது வாரத்தில் 21,000 டன்
நான்காவது வாரத்தில் 9,000 டன்

நிறையுள்ள பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன.

ஜெர்மன் அரசாங்க அறிக்கைப்படி யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து அக்டோபர் மாதம் கடைசி வாரம் வரையில், 475,321 டன் நிறையுள்ள 115 கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டிருக்கின்றன.

கொண்ட அமிதவாதக் கட்சியை சூரத் காங்கிரஸில் தோல்வியுறச் செய்தனர். சூரத் காங்கிரஸ் கலகத்துடனேயே முடிந்தது. இதன்பிறகு தில கர் கைது செய்யப்பட்டதும், புரட்சி இயக்கம் அடக்கப்பட்டதும் சேர்ந்து, கோகலேக்கு என்றுமில்லாத ஒரு செல்வாக்கைக் கொடுத்தது. இவர், எவை எவை செயலில் கொணர முடியுமோ அவற்றை மட்டுமே பேசியும் செய்தும் வந்தார். இவர், முஸ்லிம்களையும் காங்கிரஸில் சேர்க்கவேண்டுமென்று முயற்சி செய்தார். 1907ம் வருஷம் ஸர் சையத் அலி இமாம், முஸ்லிம் லீக்கை ஸ்தாபித்தார். 1900ம் வருஷத்து மிண்டோ மார்லி சீர் திருத்தத்திற்கு காங்கிரஸானது நல்லாதரவு கொடுத்தது. 1915ம் வருஷம் கோகலே இறந்து போகும்வரை, காங்கிரஸானது ஒரு உயிரற்ற ஸ்தாபனமாகவே இருந்தது. ஆனால் நிதானமாகவே இருந்து வந்த தென்று சொல்ல வேண்டும்.

1914-19 யுத்தத்தில்

நடுநிலைமை நாடுகள்

ஸ்பெயின், ஸ்விட்ஜர்லாந்து, ஹாலந்து, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், அல்பேனியா, அபிசீனியா, பர்ஷியா, ஆப்கானிஸ்தானம், மெக்ஸிகோ, ஸால்வடார், கொலம்பியா, வெனிஜூலா, சிலி, பாராகுவே, அர்ஜண்டைன்.

யுத்த சேதம்

தரைப் படையில்

	மரணம்	காயம்
பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம்		
கிரேட் பிரிட்டன்	812,217	1,849,494
கானடா	62,817	166,105
ஆஸ்திரேலியா	(0 456	154,722
நியூஜீலந்து	18,212	45,946
தென்னாப்ரிக்கா	9,032	17,843
நியுபௌண்ட்லாந்து	1,609	3,628
மற்றக் குடியேற்ற நாடுகள்	52,044	78,535
இந்தியா	73,432	84,715
மொத்தம்	1,089,919	2,400,988

மற்ற நாடுகள்

பிரான்ஸ்	1,393,388	1,490,000
பெல்ஜியம்	38 172	44,686
இத்தலி	460,000	9 7,000
போர்த்துகல்	7,22	13,75
ருமேனியா	335,706	—
செர்வியா	127,535	133,1 8
அமெரிக்கா	115,660	205,690

சத்துரு நாடுகள்

ஜெர்மனி	2050,466	4,202,028
ஆஸ்திரியா-ஹங்கேரி	1,200,000	3,620,000
பல்கேரியா	101,224	152,400
துருக்கி	300,000	570,000

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

—எம். வி. வேங்கடராமன்

நான்காவது அத்தியாயம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மனோரமா மாதவியின் தோழி. அவளுக்குக் கடிதம் எழுதி ரொம்ப நாளாகி விட்டது. பதில் வராததால் தோழிக்குக் கோபம். அன்று மத்தியானம் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்து கடுதாசி எழுத உட்கார்ந்தாள். அந்த சமயத்தில், 'அக்கா' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தாள் பிரமீளா.

நிமிர்ந்து மாதவி, 'என்னடீ?' என்றாள்.

'ஸாருடைய மூக்குக் கண்ணாடி கெட்டுப் போயிட்டுது; ஒரு கண்ணாடி தா.'

மாதவி சிரித்து விட்டாள். 'நான் மூக்குக் கண்ணாடிக்கடை வைத்திருக்கிறேனா என்ன?'

பிரமீளா ஓடிப்போக விருந்தாள். மாதவி அவளைக் கூப்பிட்டு, 'எங்கே போகிறாய்?' என்று கேட்டாள்.

'அவர் கிட்டே சொல்ல—'

'வேண்டாம்; அதுக்குப் பதிலாக கணக்குப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வா.'

பிரமீளா குமாஸ்தாவை அழைத்து வந்தாள். அவரிடம், 'ஸாருடைய மூக்குக் கண்ணாடி காணோம். அவருக்காக ஒரு நல்ல கண்ணாடி வாங்கிக் கொடும்' என்று சொன்னாள்.

குமாஸ்தா போனதும் மறுபடியும் கடிதம் எழுதினாள். அதன் கடைசியில் கீழே கண்டபடி சில வரிகளையும் எழுதினாள் :—பிரமீளாவுக்கு அப்பா ஒரு வாத்தியாரை வைத்திருக்கிறார். அவனை 'ஆள்' என்றும் சொல்லலாம்; 'கோந்தை' என்றும் சொல்லலாம். அவன் ஒரு போதும் வீட்டை விட்டு வெளியே போனதில்லை என்று தோன்றுகிறது. உலக விவகாரமே அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவனைச் சரியானபடி கவனிக்கா விட்டால் அவனுடைய வேலை ஒன்றுமே நடக்காது. என்னுடைய நேரத்தில் பாதியை அவனுக்காகவே செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. உனக்குக் கடிதம் எழுதக்கூட நேரம் இருப்பதில்லை. இந்த மாதிரி அசிரத்தையான—மறதியுள்ள மனுஷனை இந்த ஜன்மத்தில் காணமுடியாது. சாப்பிடக்கொடுத்தால் சாப்பிடுகிறான். இல்லாவிட்டால் இல்லை. சாப்பிட்டோமா இல்லையா என்று

கூட அவனுக்கு ஞாபகம் இராது போலிருக்கிறது! ஒரு நாள்கூட அவனால் தனியாக நாள் கழிக்க முடியாது. ஆகையால் இம்மாதிரி ஆள்களை வீட்டை விட்டு ஏன் கிளம்புகிறார்கள் என்று எனக்கு யோசனையாகி விட்டது. பெற்றவர்களும் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் கல் நெஞ்சர்களாக இருக்க வேணும் என்று தோன்றுகிறது; இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அம்மா மடிக்குழந்தையைத் தனியே விடுவார்களா? நானாக இருந்தால் கண்ணிலிருந்து மறையவும் விடமாட்டேன்.'

மனோரமா கேலியாகப் பதில் அளித்தாள். 'உன்னுடைய கடிதத்தின் மற்ற சமாச்சாரங்களோடு, நீ வீட்டில் ஒரு ஹனுமந்தரை போஷிக்கிறாய் என்று தெரிய வருகிறது. நீ அவருடைய ஸீதாதேவி ஆகி இருக்கிறாய் என்றும் தெரிகிறது. ஆனாலும் ரொம்ப ஸாவதானமாக இரு—மனோரமா.'

கடிதம் படித்ததும் மாதவிக்கு வருத்தம் உண்டாகி விட்டது. 'நீ ரொம்ப எரி மூஞ்சி; யாரிடம் எப்படி வேடிக்கை பண்ண வேண்டும் என்று கூட உனக்கு தெரியாது' என்று எழுதி விட்டாள்.

மாதவி பிரமீளாவிடம் கேட்டாள் 'ஸாருடைய கண்ணாடி சரியாக இருக்கதா?'

'ஓ! டக்காக இருக்கது.'

'உனக்கு எப்படித் தெரியும்?'

அதைப் போட்டுக் கொண்டு அவர் ஜோராகப் படிக்கிறார்.'

'அவர் ஒன்றும் சொல்லவில்லையா?'

'இல்லை, ஒண்ணுமே சொல்லவில்லை'.

'ஒன்றுமே சொல்லவில்லையா? சரியாச்சா இல்லையா என்று கூட?'

'ஊ ஹூம்'

ஸதா மலர்ந்திருக்கும் மாதவியின் முகம் ஒரு கணம் வாடிவிட்டது. ஆனால் மீண்டும் பழைய சிரிப்பை வருவித்துக் கொண்டு, 'மறுபடியும் கண்ணாடியைக் கெட்டுப் போக்கி விடாதீர்கள் என்று ஸாரிடம் சொல்லு' என்றாள்.

'சரி, சொல்லுகிறேன்.'

'சீ பைத்தியக்காரி! அப்படி சொல்லலாமோ? அவர் ஏதாவது நினைத்துக் கொள்ள மாட்டாரோ?'

'அப்படியானால் ஒண்ணும் சொல்ல வேண்டாமா?'

'வேண்டாம்.'

சிவசந்திரன் மாதவியின் தமையன். ஒரு நாள் அவனிடம் மாதவி கேட்டாள்:—'ஏன் அண்ணா, பிரமீளாவோட ஸார் இராப்பகலாக என்ன விழுந்து விழுந்து படிக்கிறார்?'

சிவசந்திரன் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தான். கேவலம் பிரமீளாவின் வாத்தியாரைப் போன்ற அற்பர்களை அவன் பெரிசாக நினைப்பதேயில்லை. 'ஏதாவது நாடகம், நாவல் படித்துக் கொண்டிருப்பார்; வேறு என்னத்தைப் படிக்கப் போகிறார்?' என்றான் அலக்ஷியமாக.

ஆனால் மாதவிக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. சுரேந்திரனுடைய புஸ்தகம் ஒன்றை பிரமீளா மூலம் திருட்

டுத்தனமாக வரவழைத்து தன் அண்ணனிடம் கொடுத்து, 'இது நாவலாகவோ நாடகமாகவோ இருக்காது போலிருக்கிறதே!' என்று கேட்டாள்.

சிவசந்திரன் புஸ்தகம் முழுவதையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; ஆனால் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அது ஏதோ கணக்குப் புஸ்தகம் என்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால் தங்கை முன்தாழ அவன் விரும்பவில்லை. 'இது கணக்குப் புஸ்தகம்; ஸ்கூலில் சின்ன கிளாஸ்களுக்கு வேண்டியது' என்று சொன்னான்.

வருத்தமாக மாதவி கேட்டாள், 'இது மேல் வகுப்புப் புஸ்தகம் கூட இல்லையா?'

சிவசந்திரன் வாடின முகத்துடன், 'இல்லை, இல்லவேயில்லை!' என்று கூறிவிட்டான்.

அன்றிருந்து சிவசந்திரன் அதிகமாக சுரேந்திரன் முன் எதிர்ப்படுவதில்லை. அவன் ஏதாவது கேட்டுவிடட்டும்; அதனால் தன் வண்டவாளம் வெளிப்பட்டு பிரமீளாவுடன் காலையில் பென்ஸில் காபி புஸ்தகம் எடுத்துக் கொண்டு உட்காரும்படி நேர்ந்து விடப்போகிறதே என்று சிவசந்திரனுக்கு உள்ளுக்குள் பயம்.

சில நாள் கழித்து மாதவி தன் தகப்பனாரிடம் சொன்னாள்:—'அப்பா, நான் கொஞ்ச நாள் காசிவாசம் செய்யப் போகிறேன்.'

கிரஜ பாபுவுக்குக் கவலை உண்டாகிவிட்டது. 'ஏன் அம்மா, நீ காசிக்குப் போய்விட்டால் இந்தக் குடும்பம் என்ன ஆவது?'

மாதவி சிரித்தாள். 'நான் திரும்பி வந்துவிடுவேன் அப்பா! ஒரேயடியாகப் போய்விட மாட்டேன்.'

அவள் சிரித்தாலும் அப்பாவின் கண்களில் ஜலம் நிறைய வாரம்பித்தது. தான் அப்படிச் சொன்னது தப்பு என்று மாதவிக்குப் பட்டது. ஆகையால் பேச்சை மாற்றி, 'சும்மா கொஞ்ச நாள் சுற்றி விட்டு வருகிறேன் அப்பா' என்றாள்.

'அப்படியானால் போ; ஆனால் இந்தக் குடும்பம் சரிவர நடக்காது.'

'நான் இல்லாமல் குடும்பம் நடக்காதா என்ன?'

'ஏன் நடக்காது? பாய் மரம் இல்லாத படகு போல் நடக்கும்.'

ஆனால் அவள் காசிக்குக் கட்டாயம் போக வேண்டியதாக இருந்தது. வேலைக்காரிக் கிழவியைக் கூப்பிட்டு வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னாள்; முக்கியமாக அப்பா, அண்ணா, பிரமீளா மூவரையும் ரொம்ப கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி உபதேசம் செய்தாள். ஆனால் 'ஸாரை'ப்பற்றி அவள் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. அவள் மறந்து போகவில்லை. வேண்டுமென்றே ஒன்றும் சொல்லவில்லை. அவர்மேல் அவளுக்கு ரொம்ப கோபம். அவள் அவருக்காக எவ்வளவோ வேலைசெய்தும், வாய் திறந்து ஒரு வார்த்தையாவது நன்றிக்காகச் சொன்னாரா? ஆகையால் தான் அசலூருக்குப்போய் அந்தக்கடமை தெரி

யாத, நடப்புத் தெரியாத, உதாஸீன மான 'ஸாருக்கு' தானும் ஒரு 'மனைவி' தான் எனக்காட்ட வேண்டும் என்று அவள் ஆசை. கொஞ்சம் வேடிக்கை செய்து பார்க்கலாமே என்றுகூட அவள் ஆவல். அவள் இல்லாமல் 'ஸாருக்கு எப்படி நாள் போகிறது என்பதையும் பார்க்கலாமே! ஆகையால்தான் அவள் அவரைப் பற்றி யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை.

அப்போது 'ஸார்' ஏதோ 'ப்ராப்ளம்' 'ஸால்வ்' பண்ணிக் கொண்டிருந்தார்.

'நேத்தைக்கு ராத்திரி அக்கா காசிக்குப் போய் விட்டாள்' என்று சொன்னாள் பிரமீளா.

அவள் பேச்சு அவன் காதுக்கு எட்டவேயில்லை; அவன் அதைக் கவனிக்கவுமில்லை. ஆனால் வீட்டில் மாறுதல் ஏற்பட்டு விட்டது என்று அவனுக்குத் தானாகவே தெரிந்து விட்டது. முன் போல பத்து மணிக்கு சாப்பிடச் சொல்லி அவனை யாரும் தொந்திரவு செய்யவில்லை. சில சமயம் ஒரு மணி, ரெண்டு மணி கூட ஆய்விடும். குளித்துவிட்டு 'தோதி'யைப் பார்த்தால் அது அழுக்குப் பிடித்ததாக இருக்கும். ஜலபானத்திற்காக வரும் 'காபி' ஸ்வாரஸ்யமாக இல்லை; ராத்திரி 'ஸ்விச்சை' அமுக்க யாரும் வரவில்லை; அவன் பாட்டில் ரெண்டு, மூணு மணி வரை படித்துக் கொண்டே இருப்பான்; அப்புறம் படுத்தால் காலையில் எழுந்திருக்க நேரமாகி விடும்; நாள் முழுவதும் கொட்டாவி விட்டபடியே இருப்பான்; உடம்பு முழுக்க ஓரே வலியாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால், அவனுடைய தினசரி வேலைகளில் ஒரு புரட்சி உண்டாகி விட்டது. அப்போதுதான், 'சரிதான், குடும்பத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது போலும்' என்று அவனுக்குப்பட்டது. ஆம், புழுக்க காலத்தில் தானே, விசிறி ஞாபகம் வரும்?

சுரேந்திரன் புஸ்தகத்தின் மீதிருந்த பார்வையை விலக்கிக் கேட்டான், 'ஏன் பிரமீளா, அக்கா இங்கே இல்லையா?'

'காசிக்குப் போயிருக்கிறாள்'

'அப்படியா!'

இரண்டு நாளுக்குப் பிறகு அவன் திடீரென்று கேட்டான், 'அக்கா எப்போது வருவாள்?'

'ஒரு மாசம் ஆகும்.'

சுரேந்திரன் மறுபடியும் புஸ்தகத்தில் ஆழ்ந்து விட்டான். இன்னும் ஐந்து நாட்கள் கழிந்தன. அவன் புஸ்தகத்தின்மேல் பென்ஸிலை வைத்துக் கொண்டு கூறினான். 'பிரமீளா, ஒரு மாசம் ஆக இன்னும் எத்தனை நாள் பாக்கி?'

'ரொம்ப நாள் இருக்கு.'

பென்ஸிலை அகற்றி சுரேந்திரன் மூக்குக்கண்ணாடியை எடுத்து இரண்டு கண்ணாடிகளையும் துடைத்தான். பிறகு வெறும் கண்களால் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் கேட்டான், 'பிரமீளா நீ அக்காவுக்குக் கடிதாசி போடுவதில்லையா?'

'போடாமே என்ன!'

'சீக்கிரம் வரச்சொல்லி எழுத வில்லையா?'

'இல்லை!'

ஒரு சின்ன நெடு மூச்சு விட்டு சுரேந்திரன் சொன்னான், 'அப்படியா!'

'ஸார், அக்கா வந்து விட்டால் தேவலை; இல்லியா?'

'ஆமாம்.'

'வரும்படி எழுதி விடட்டுமா?'

அவன் சந்தோஷமாக, 'எழுது' என்றான்.

'உங்களைப்பற்றிக் கூட எழுதட்டுமா?'

'எழுது'.

'எழுது' என்று சொல்ல அவனுக்குக் கஷ்டம் உண்டாகவில்லை. காரணம், உலகத்தின் நீதி நியமம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அக்காவை வரும்படி வேண்டிக் கொள்ளுவது தனக்கு அழகல்ல என்று அவனுக்குத் தெரியவில்லை. அக்கா இல்லாமல் அவனுக்குச் சிரமமாக இருக்கிறது; அவளை வரச்சொல்லி வேண்டுவதில் என்ன தப்பு என்றுதான் அவன் நினைப்பு.

இந்த உலகில் குறைகலக்குறைவுள்ள மனிதர்கள் மற்றவர்களைப் போலில்லாமல் ஒரு மாதிரியாகத்தான் இருப்பார்கள். சாதாரண மனிதர்கள் புழங்கும் கூட்டத்துக்கும் அவர்களுக்கும் ஒன்றும் ஒத்துவராது. சாதாரண மனிதர்களுடைய அபிப்பிராயத்துக்கும் அவர்களுடைய கருத்துக்கும் ஒன்றும் சரிக்கட்டி வராது. சுரேந்திரன் இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவன். தனக்கு வேண்டிய மட்டும் தெரிந்து கொண்டால் அவனுக்குப் போதும்; அதை மீறி ஒரு அடி எடுத்து வைக்கக்கூட அவனுக்கு இஷ்டமில்லை; சோழுமில்லை. ஆகையால்தான் அவன் அக்காவைப்பற்றி அசிரத்தையாக இருந்தான். அந்தக் குடும்பத்தில் அவன் வந்து மூன்று மாதமாகி விட்டது; இவ்வளவு காலமாக தன் பாரம் எல்லாம் 'அக்கா' மீது சுமத்திவிட்டு அவன் சௌக்யமாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு அந்த ஜீவன் எப்படி இருக்கிறது, எத்தனை பெரிசு, எத்தனை வயசு, பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது, அதுக்கு என்ன என்ன குணங்கள் இருக்கின்றன என்று அறிய அவனுக்கு ஆவல் உண்டானதேயில்லை; தெரியவும் தெரியாது; அறிய வேண்டும் என்று அவன் நினைத்ததுமில்லை. எல்லோரும் அவளை 'அக்கா' என்கிறார்கள்; அவனும் 'அக்கா' என்கிறான். எல்லோரும் அவளிடமிருந்து அன்பும் ஆதரவும் அடைகிறார்கள்; அவனும் அடைகிறான். அவளிடம் வேண்டியவர்க்கு வேண்டியபடி கிடைக்கிறது; அவனுக்கும் கிடைக்கிறது. அப்படியிருக்க, அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

மேகத்தின் வேலை நீர் பொழிவது; 'அக்கா'வின் வேலை அன்பு பொழிவது. மழைபெய்யும் போது கைநீட்டுகிறவனுக்கு ஜலம் கிடைக்கிறது.

'அக்கா' முன்னிலையில் கை நீட்டினால் தேவையான சாமான் கிடைக்கி

றது. மூஸிலைப் போலவே அவளும் ஆசையும் பற்றும் இல்லாதவள் போலும்! 'அக்கா' வைப்பற்றி அவனுக்கு இந்த நினைவுதான். முன்பும் அந்த நினைவுதான். இப்போதும் அது தான். ஆனால் இப்போது 'அக்கா' காசிக்குப் போனதிலிருந்து, அவள் இல்லாமல் தான் ஒரு க்ஷணம் கூட உயிர் வாழமுடியாது என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

வீட்டிலிருந்த சமயம் அவனுக்குத் தன் தகப்பனாரைத் தெரியும்; சித்தியைத் தெரியும்; அவர்களுடைய கடமை என்ன என்றும் தெரியும். ஆனால் அவன் எந்த 'அக்கா' வோடும் பழகினதில்லை; பழக நேர்ந்த போது அவன் அப்படித்தான் எண்ணிக் கொண்டான். ஆனால் அவன் மனிதனைத் தெரிந்து கொள்ளவுமில்லை, புரிந்து கொள்ளவுமில்லை. அவனுக்குப் பெயர் மட்டில் தான் தெரியும், புரியும். மனிதனைப்பற்றி அவனுக்கு அக்கறை ஒன்றும் இல்லை; அவனுக்குப் பெயர் தான் ஸர்வமும்.

ஜனங்கள் தங்கள் இஷ்ட தேவதையைக் கண் முன் காணப் பெறுவதில்லை; அதன் பெயரை மாத்திரம் எழுதி வைத்துக் கொள்ளுகிறார்கள்; அக்காலத்தில் அந்தப்பெயருக்கு முன்னால் தான் தங்கள் துக்கங்களைத்தாராளமாக வெளியிடுகிறார்கள்; அதன் முன் பணிந்து, இரங்கும்படி வேண்டுகிறார்கள்; கண்களில் ஜலம்வந்து விடுகிறது; அதைத் துடைத்துக் கொண்டு வெற்றுப் பார்வை செலுத்தி எதையோ காண விரும்புகிறார்கள்; ஆனால் ஒன்றும் தெரியா விட்டாலும் வாயிலிருந்து இரண்டு, மூன்று வார்த்தைகள் தடங்கலுடன் வெளிவருகின்றன. அதைப் போலவே சுரேந்திரனுக்கும் கஷ்ட காலத்தில் அவள் ஞாபகம் வந்தது; 'அக்கா!' என்று அவன் வாய் தடங்கி உச்சரித்தது!

(தொடரும்)

எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு போவதில்தான் மனிதன் வெற்றிபெறுகிறான். காற்றாடி, காற்றை எதிர்த்துக் கொண்டுதான் மேலே மேலே பறந்து செல்கிறது.

—மாபி

: கம்பர் :

—நா. லக்ஷ்மீநரசிம்மம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

4. இராமனுடைய அருள் வீரம்

வீரச்சுவையை வெளிப்படக் கூறுவது எளிதே. மடித்த வாயும் வெடித்த சொல்லும் பிடித்த வாளும் தீயெழச் சிவந்த கண்ணும் உடையவனாக வருணிப்பது சிரமமன்று. ஆனால் அஃது உண்மை வீரமாகுமா? வீரத்திற்கு மாறுபட்ட அச்சத்தையும் கோபத்தையுமே குறிப்பதாகும். உண்மை வீரம் அத்தகையதன்று. கல்வியும், அஞ்சாமையும், புகழும், கொடையும் உண்மை வீரத்தைத் தாங்கும் நான்கு தூண்கள். தவம் முதலாகிய கல்வி அடக்கத்தையும் அன்பையும் தருகின்றன. அஞ்சுவது ஒன்றுமில்லையாதலின் பகைமையும் இல்லை. என்ன பெற்றாலும் பழியொடுபடரும் செயல்களைச் செய்யாமையே புகழ். கொடை யென்பது அருள் வெள்ளம். இத்தகைய நான்கியல்பினையுடைய வீரமே உண்மை வீரம். இதற்கு இலக்கியமாய் நிற்கத்தக்கார் வேறுயாருமிலர். எல்லாம்வல்ல யாவும் தானாகி நின்ற ஒருவனே இவ்வீரத்தியல்பை விளக்க முடியும். மற்றையோர்க்கு இவ்வீரமே தாங்குதற்கரிய பாரமாய் விடும். வள்ளல் இராகவன், அருள் வீரத்தின் முழுப்பொருளாய் விளங்குவதைக் கம்பர் காட்டுகின்றார்.

சாதாரணமாக வீரர்கள் வீரச் செயல் விளைக்கும் பொழுது அவர்கட்குக் கோபமே அடையாளம். ஆனால் இராமனது அருள் வீரத்திற்குப் பேரடையாளம் புன்முறுவலாகும். போர்முகத்தும் புன்முறுவல் பொழிவதே இராமன் இயற்கை. அப்புன்முறுவலில் விளங்கும் வீரத்தியல்பை நன்கறிந்தவர்கள் சீதையும் இராவணனுமே. சீதாதேவியானவள் இராமனைக் கண்டவுடனேயே முறுவலின் பொருளை அறிந்து அதன் வசமானவள். இராவணனோ எனில் இராமனது வீரச் செயலைக் கண்ட பின்னரே முறுவலை உணர்ந்தவன். உணர்ந்தும் தன் வழியே சென்றவன்.

இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமேயல
முந்தி என்னுயிரை அம்முறுவ லுண்
[டவே.

இந்திர நீலம் போன்று இருண்ட குஞ்சி. சந்திரன் போன்ற அழகும் ஒளியுமுள்ள முகம். முழந்தாள் வரை நீண்ட கைகள்—அழகிய நீலமலைபோன்ற தோள்கள். இவைகள்

கூட என்னை மயக்கவில்லை. அந்தப் புன் முறுவல் என் உயிரை உண்டது. முதலிலேயே புன் முறுவலுக்கு என் உயிரைக் கொடுத்து விட்டதால் மற்றவற்றிற்குக் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற கருத்தில் மூர்த்தி என்னுயிரை அம்முறுவல் உண்டவே எனக் கூறுகிறான்.

இனி இராவணன் முதல் நாட்போரில் அடிபட்டு வருகின்றான். மாலியவான் எதிர்ப்பட்டு என்ன செய்தி என்று கேட்கப் போர் முகத்தே கண்ட இராமனது அருள் வீரம் தன் உள்ளத்தே பொங்க அதனை அவனுக்குக்கூறுகின்றான் இராவணன்.

எறித்தபோர் அரக்கராவி
  எண்ணிலாவுயிர்களெஞ்சப்
பறித்த போதென்னையந்தப்
  பரிபவம் முதுகிற்பற்றப்
பொறித்த போதன்னனைத்தக்
  கூனிகூன்போக வுண்டை
தெறித்தபோ தொத்த தன்றிச்
  சினவுண்மை தெரிந்ததில்லை.

இராமனுடைய பாணங்கள் கணக்கற்ற அரக்கர் உயிரைக் காலனுக்கு அளிக்கின்றன. என்னையும் புறமிடச் செய்கின்றன. இந்த நிலையிலும் அவன் இளமையில் கூனியின் கூனைக் குறி வைத்து மண் உருண்டையை எய்து விளையாடியது போன்று அலட்சியமாக விற்போர் செய்தானே யொழியக் கோபம் சிறிதேனும் கொண்டு போர் செய்ததாகத் தெரியவேயில்லை.

இவ்வாறு பகைவனாலும் பாராட்டப்படும் குணம் இராமனிடத்துள்ளது. பகைவனையும் பாராட்டும் அருங்குணம் இராவணனிடம் உள்ளது. அவனும் உண்மை வீரனன்றோ? வீரனை வீரனே அறிவான். அவன் இராமனையும் இராம பாணத்தையும் பலபடியாகப் புகழ்கின்றான். அவ்வாறு புகழ்வதற்கும் உபதேசமும் அருளும் வேண்டுமன்றோ? உபதேசம் பெறுவதற்கு முன் அகங்காரம் ஒழிய வேண்டும். கம்பர் இராவணனது அகங்கார நிலையையும் தேவியின் உபதேசத்தையும் அதன் பின் அவன் இராமன் அருளைப்பெறுவதையும் எவ்வாறு விளக்குகின்றார் பாருங்கள். பஞ்சவடியில் சீதையைக் கவர்ந்து செல்ல வந்த இராவணன் செருக்குடன் தன்னைப்பற்றிக் கூறிக் கொள்கின்றான்.

மேருவைப்பறிக்க வேண்டின்
  விண்ணினை இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின்
  நெருப்பினை அவிக்க வேண்டின்
பாரினை எடுக்க வேண்டின்
  பலவினை சில சொல்லேழாய்
யாரெனக் கருதிச்சொன்னாய்
  இராவணற்கரிதென் றென்றான்.

மேருவைப் பறிக்கவும் விண்ணை இடிக்கவும் கடல்களைக் கலக்கவும் தீயை அவிக்கவும் பூமியை எடுக்கவும் நினைத்தால் இராவணன் செய்ய வல்லவன். செயற்கரிய செயல் என்பது இராவணற் குண்டோ என்று தன்னைத்தானே கூறிக் கொள்கின்றான். மேருவைப் பறிக்க முயன்றது வாயு. ஆகவேதான் வாயு, ஆகாயம், அப்பு தேயு, பிருதிவி எனப் பஞ்ச பூதங்களையும் முறை மாற்றியும் செயல் புரிய வல்லவன் எனக்கூறிக் கொள்கின்றான்.

பின்னர் அசோகவனத்தில் சீதை சிறையிலிருக்கும் பொழுது இராவ

ணன் செருக்கொழியும் வண்ணம் அவனைத் துரும்பெனமதித்துப் பேசுகையில்

மேருவையுருவல் வேண்டின்
விண்பிளக்கேகல் வேண்டின்
ஈரேழுபுவனம் யாவும் முற்றுவித்
திடுதல் வேண்டின்
ஆரியன் பகழிவல்லதறித்
திருக்கறிவிலா தாய்
சீரியவல்ல சொல்லித்தலை
பத்தும் சிந்துவாயோ

எனக் கூறுகின்றான். இராவணன் தன்னால் இயற்றக்கூடியவை என்று கூறிய யாவற்றையும் எனது நாயகன் பாணம் ஒன்றே செய்யும் எனக்கூறுகின்றாள். இவ்வாறு கூறி அவன் அகங்காரத்தைப் போக்கி இராமன் புகழை உபதேசம் செய்கின்றாள். இந்த உபதேசமும் இராம பாணமாகிய அக்கினியும் அவன் அஞ்ஞான இருளை ஓட்டுகின்றன. ஞான ஒளி பெற்று இராமனது உண்மையை உணர்கின்றான். அப்பொழுது அவன் இதே விஷயத்தை எவ்வாறு கூறுகின்றான் பாருங்கள்!

மேருவையுருவு மென்றால்
விண்கடக்கேகு மென்றால்
பாரினைப் பிளக்குமென்றால்
கடல்களைப்பருகுமென்றால்
ஆருமேயவற்றி னாற்றல்
ஆற்றுமேலனந்த கோடி
மேருவும் விண்ணும் மண்ணும்
கடல்களும் வேண்டுமன்றே

இராம பாணத்தால் பஞ்ச பூதங்களையும் மாற்ற முடியும் என்று சீதை கூறினாள். ஆனால் உபதேசம் பெற்ற இராவணன் இராமபாணம் செயலாற்றத் துணிந்து புறப்பட்டு விட்டதானால் ஆயிரம் கோடி மேருவும் விண்ணும் மண்ணும் கடல்களும் வேண்டும்; ஒரு மேருவும் விண்ணும் மண்ணும் அதன் ஆற்றலைத் தாங்க முடியாது எனக்கூறுகின்றான். இது மட்டுமா!

போயபின் அவன் கை வாளி
யுலகெலாம் புகுவதல்லால்
ஓயு மென்றுரைக்கலாமோ
ஊழி சென்றாலும் ஊழித்
தீயையும் தீக்கும் செல்லும்
திசையையும் தீக்கும் சொல்லும்
வாயையும் தீக்கும் உன்னின்
மனத்தையும் தீக்கும் மன்னோ.

வில்லினின்று புறப்பட்டு விட்டதானால் உலக மெல்லாம் சுற்றினாலும் ஓயுமா? ஊழிக்காலம் போனாலும் ஓயாது. ஊழித்தீயையும் செல்லும் திசைகளையும் சொல்லும் வாயையும் எண்ணும் மனத்தையும் தீக்கவல்லது.

கல்வியற் கவிஞர் நாவிற்பொருள்
குறித்தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட
தொடையெனத்தொடையைநீக்கி
எல்லையில் செல்வம் தீர
இசையெனப் பழுதிலாத
பல்லலங்காரப் பண்பே
காகுத்தன் பகழிமாதோ.

கல்வியற் கவிஞர் சாபானுக்ரஹ சக்தியுடையோர். அவர் வாய்ப்பட்ட பொருள் பொதிந்த இன் சொல் சொல்லப் பட்டார் நன்கு வாழச் செய்யும். கொடுஞ் சொல்லாயின் அழிவு நிச்சயம் வந்தெய்தும். கவிஞர் கருதிய பொருளை அவர் கூறும் சொல் பயத்தல் நிச்சயம். 'வில்லம்பு பட்டதடா என் மார்பில் பார்வேந்தே நின் குலத்தைச் சுட்டதடா என் வாயிற் சொல்' என்று கம்பர் தான்

இறக்கும் பொழுது தான் இறப்பதற்குக் காரணமாய் நின்ற சோழனைச் சபிப்பதாகக் கூறும் கன்ன பரம்பரைக் கதை இதற்குத் தக்கதோர் உதாரணமாகும். இவ்வாறு கருதியது பயக்கும் கவிஞர் சொல்லும் சொற்களாகிய செய்யுளும் செய்யுட்களையுடைய நூலும் நூலாற் பெருகிய செல்வமும் புகழும் போன்ற பல்லலங்காரப் பண்பினையுடையது இராமபாணம். மேலும்

உற்பத்திய யனையொக்கும்
ஓடும் போதரியே யொக்கும்
கற்பத்தினரனே யொக்கும்
பகைஞரைக் கலந்தகாலைச்
சிற்பத்தின் நம்மாற் பேசச்
சிறியவோ என்னைத்தீரத்
தற்பத்தைத் துடைத்தவென்றால்
பிறிதொருசான்று முண்டோ.

அயனும் அரியும் அரனும் ஒருவரேயாயினும் எவ்வாறு செய்தொழிலால் வேறு வேறாகக் கூறப்படுகின்றார்களோ அவ்வாறே இராமனம்பும் செய்தொழிலால் அம் மூவருக்கும் இணையாகக் கூறப்படுகின்றது. புறப்படும் தோற்றம் அயனை ஒக்கின்றது. தோன்றும் பொழுதே ஒன்று பத்து நூறு ஆயிரமாக விரிகின்றதன்றோ? ஓடும் பொழுது திருமாலைப் போன்றிருக்கின்றது. பாணம் ஓடும்பொழுது ஒளியுமிழ்வது திருமால் அருள் சொரிவது போன்றுள்ளது. முடிவில் பரமனை ஒக்கின்றது. சங்கரன் சங்கார மூர்த்தியல்லவா? பாணம் முடிவில் அதன் வேலையைச் செய்கின்றது. தீரத எனது அஞ்ஞானத்தையும் துடைத்ததென்றால் வேறு சாட்சி எதற்கு என்று இராவணனே கேட்கிறான்.

குடக்கதோ குணக்கதேயோ
கோணத்தின் பாலதேயோ
தடத்த பேருலகத்தேயோ
விசும்பதோ எங்குந்தானோ
வடக்கதோ தெற்கதோ
வென்றுணர்ந்திலேன் மனிசன் [வல்வில்
இடத்ததோ வலத்ததோ
வென்றுணர்ந்திலேன் யானும் [இன்னும்.

இராமபாணம் எந்தத் திசையிலிருந்து வருகிறது என்பது இருபது கண்களையுடைய எனக்கே தெரியவில்லை. யாருக்கும் தெரியாது. மேற்கிலா கிழக்கிலா கோணத் திசைகளிலா பூமியில் மட்டும் தானா ஆகாயம் முழுவதிலுமா வடக்கிலா தெற்கிலா என்று என்னால் அறிய முடியவில்லை. அவனுடைய வில் இடது புறத்திலா வலது புறத்திலா உள்ளதென்று இன்னும் என்னால் உணர முடியவில்லை. இவ்வாறெல்லாம் இராவணன் புகழ்வதற்குக் காரணமென்ன? இராமனது வீரத்தில் அருள் நிறைந்த தன்மையே.

முதல் நாட் போரில் இராவணன் அடிபட்டுக் கலங்கி நிற்கின்றான். அவனது கலக்கம் தன்னுயிர்க்கு அஞ்சியதால் வந்ததன்று. இராமனது உண்மை நிலையை அது வரை மாறாக நினைத்ததால் வந்தது. தேரும் ஆயுதங்களும் முடியும் துணையும் இழந்து தனியனாய் நிற்கின்றான். இந்த நிலையில் இவனைக் கொல்லல் யார்க்கும் எளிது. அறத்தின் நிலையமாகிய இராமன் அது செய்வனோ? உலக கண்டகனாகிய இராவணனுக்கும் அருள் செய்கின்றான்.

ஆளையா உனக்கமைந்தன
  மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை
  இன்று போய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினன்
  நாகிளங்கமுகின்
வாளையாய் குதிகோசல
  நாடுடை வள்ளல்.

வீரனே! உனக்குரிய படைகள் யாவும் பெருங்காற்று மோதி யழிந்த பூளைப் பூவாகச் சிதறிவிட்டன. ஆதலால் இன்று போய் நாளைக்குவா என்றருள் செய்தான் கோசல நாடுடை வள்ளல். இவ்வருள் தான் வீரத்தின் எல்லையாகும். வீர ரென்றழைக்கப் படுவோர் எல்லாரும் இதனைத் தாங்குதல் அரிது. இராமனின் மற்றோர் அமிசமான இலக்குவனும் இதைத் தாங்க முடியவில்லை. அவன் பன்முறை இராமன் அருளையும் அவன் அறத்தைச் செய்யும் திறத்தையும் ஐயுற்றும் பழித்தும் இருக்கின்றான். 'அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் நினதருளுக் கஞ்சினேனே' என்று பீமன் தருமனைப் பார்த்துக் கூறுவதே போல்' இலக்குவனும் கூறுகின்றான்.

இராவணன் வஞ்சனையாற் சீதையைக் கவர்ந்து சென்ற பின் இராமனும் இலக்குவனும் பல இடங்களிலும் தேடிச் சவரியால் சுக்ரீவனை நட்புக்கொண்டு அவனது வானர சேனையின் உதவியால் ஒருவாறு சீதையின் இருப்பிடத்தை அறிகின்றனர். அதன் பின் கடலைச் சேதுகட்டி இலங்கை வந்தபின் இராமன் அங்கதனைத் தூதாக அனுப்ப விரும்புகின்றான். அப்பொழுது இலக்குவன் தாங்கமுடியாத சினத்துடன் அச்செயலைத் தடுக்கின்றான்.

தேசியைச் சிறையில் வைத்தான்
  தேவருக்கிடுக்கண் செய்தான்
பூசுரர்க் கலக்கண் ஈந்தான்
  மன்னுயிர் புடைத்துத்தின்றான்
ஆசையின் அளவு மெல்லா
  வுலகமுந் தானே ஆள்வான்
வாசவன் திருவுங் கொண்டான்
  வழியலா வழிமேற் செல்வான்.
அன்னவன் தனக்குமாதை
  விடி லுயிர் அருளுவாயேல்
என்னுடைய நாமம் நிற்கும்
  அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே யென்று
  வந்தடைந்தவர்க்கு வாயால்
சொன்ன சொல் என்னும்
  [முன்னம்
  குறை வென்னும் தோன்றல்.

இராமன் கோபமூண்டு தூதனுப்புவதைக் கைவிட வேண்டும் என்பதற்காகத் தன் சொல்வன்மையெல்லாம் காட்டுகின்றான் இலக்குவன். இராவணன் செய்த கொடுமைகளை ஒன்றின் மேலொன்று அடுக்கிக் கூறுகின்றான். இராமனது அருளால் விளையும் மாண்பாட்டைக் கூறுகின்றான். சபதத்தை நினைப் பூட்டுகின்றான். கடமையை இடித்துரைக்கின்றான். கூறுவன யாவை! இராவணன் தேவியைச் சிறையில் வைத்தான். தேவருக்குத் துன்பம் செய்தான்! வேதியர்க்குத் துயர் விளைத்தான். சனங்களைக் கொன்று நாசம் செய்தான். உலக முழுவதும் தன்னுடைய செல்ல ஆட்சிபுரிந்தும் இந்திரன் செல்வத்தையும் அபகரித்தான். நல்வழியல்லாத தீயவழியிற் செல்வதே தொழிலாக உடையான். இத்தகைய தீயோனைச் சீதையை விட்டுவிட்

டாலும் நீ மன்னிப்பதானால் விபீஷணற்கு முன் சொல்லிய வாக்கு எவ்வாறு நிறைவேறும்? இராவணன் உயிருடன் இருப்பின் விபீஷணன் இலங்கையை எவ்வாறு ஆட்சி புரிய முடியும்? முனிவர்களிடம் அரக்கரை ஒழிப்பேன் என்று சொல்லிய சபதம் என்னவாகும் எனக் கேட்கின்றான். இவ்வளவையும் கேட்டும் இராமன் என்ன செய்தான்? வழக்கம் போற் புன் முறுவல் பூத்தான். இயற்கையருள் காரண காரியங்களைக் கண்டு கலங்குமா? ஆனால் இலக்குவன் சொன்னவை யாவும் உண்மையன்றோ? இப்பொழுது இராமன் கூறும் விடை என்ன?

அயர்த்திலன் முடிவுமஃதே
ஆயினும் அறிஞராய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம்
துறந்தமைதல் நன்றோ
புறத்துறை வலியரேனும் பொறை
யொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை அறனுமஃதே
என்றிவை சமயச் சொன்னான்.

என் கடமையையும் நான் செய்த சபதத்தையும் இராவணன் செய்த கொடுமைகளையும் மறக்க வில்லை. முடிவும் நீ நினைப்பது போலத்தான். அதற்காக நாம் நீதி வழியைத் துறத்தல் முறையாகுமா? தீயவை செய்தானென்று ஒரு தீயோனைத் தண்டிப்பதற்கு நாம் நீதி முறை துறந்தோமாயின் நாம் அவனிலும் எவ்வகையால் வேறுபட்டவராவோம்? அறத்திற்கு மட்டுமா அன்பு சார்பாகும். மறம் நீங்குதற்கும் அவ்வன்பே சார்பல்லவா? எவ்வளவு பலிஷ்டர்களாயிருந்தாலும் பொறுமையை இழந்தார் வெற்றியடையார். பொறுமையே வெற்றி தரும்." அதுவே அறமுமாகும் என்று அருள் நிறைந்த வாக்கால் பொருள் பொதிந்த சொற்களைச் சொன்னான் இராமன். மேலும் முனிவர்கள் 'அருளுடைவீர! நின்ன பயம் யாம்' என்றடைக்கலம் புக்க பொழுது இராமன் அவர்களிடம் எவ்வாறு கூறிச் சபதம் செய்திருந்தான்.

புகல்புகுந்திலரேல்
புறத்தண்டத்தின்
அகல்வரேனும் என்
னம் பொடும் வீழ்வரால்

என்று கூறியிருந்தான். அரக்கர்கள் தங்கள் கொடுமை யொழிந்து அடைக்கலம் புகவில்லையாயின் வேறு அண்டங்களிற் சென்று மறைந்தாலும் என்னம்பு அவர்களை என்றும் விடாது அழிப்பது நிச்சயம் எனக் கூறுகின்றான். தன் வீரத்திற் கேற்பத் தான் செய்யப் போவதைச் சொல்லுகையிலும் தன் அருட்டிறத்தையே வெளிப்படுத்துகின்றான். அரக்கரை அழிப்பேன் - என்று சொல்ல வேண்டி வந்த நிலையிலும் முதலில் தன் அருளையே காட்டுகின்றான். புகல் புகுந்திலரேல் என்று தொடங்குகின்றான். ஆகவே அருளை விடாது நிற்பதே உண்மை வீரம் என்று முன்னர்க் கூறியதை இராமன் ஒவ்வோரிடத்தும் விளக்கி நிற்பதைக் கம்பர் திருவாக்கால் நன்கறியலாம்.

உண்மை வீரத்திற்கு ஒவ்வாத கோபத்தை இராமன் யாண்டும் கொள்ளவேயில்லையா எனக் கேட்கலாம். ஆம்; இராமன் கோபம் கொள்கின்றான். ஆனால் அக்கோபமும் அவன் அருளை விளக்குவதுதான்

வேடிக்கை. இராமனது திருமுகம் புன்முறுவல் நீங்கிச் சினக் குறிப்பைக் காட்டியதாக மூன்றே இடங்களில் கூறுகின்றார் கம்பர். அம்மூன்றிடங்களிலும் இராமனால் கோபிக்கப்பட்டவர்கள் பகைவரல்லர்.

இராவணன் மாயம் செய்து சீதையைக் கவர்கின்றான். இடையில் தடுக்க வந்த சடாயுவை வெட்டி வீழ்த்தி விட்டுச் செல்கின்றான். அவன் சென்ற பின் வந்து சேர்ந்த இராமலக்குவர் குற்றுயிராய்க் கிடந்த சடாயுவால் நடந்ததை அறிகின்றனர். உடனே இராமன் கடுஞ்சினம் கொண்டான். யார்மேல்? சீதையை எடுத்துச் சென்ற இராவணன் மேலன்று. இராவணன் செய்த தீமையைக் கண்டும் காணாது போன்றிருந்த உலகங்கள் மேலும் அவ்வுலகங்களைக் காப்பதற்கிருந்த தேவர்கள் மேலும் கோபம் கொண்டான். இவ்வாறு செய்தவனை விட்டு விட்டுச் செயலற்ற உலகத்தையும் தேவரையும் சினங்கொண்டு இதோ ஒழித்து விடுகின்றேன் எனக் கூறுவதாலேயே இக்கோபம் இயற்கை வீரத்திற்கு இழுக்கு விளைக்கும் வகையில் வந்ததன்று என்பது புலனாகும். இராமன் சுக்ரீவனோடு நட்புக் கொள்கையில் மாருதி வாலியின் வரலாற்றைக் கூறி வருகின்றான். அப்பொழுது வாலி, சுக்ரீவனது மனைவியாகிய தாரையையும் கவர்ந்து கொண்டான் என்று கூறியதைக் கேட்டதும் கடுஞ்சினம் கொள்கின்றான் இராமன். தன் மனைவியைக் கவர்ந்து சென்ற இராவணனைச் சினந்து ஒரு வார்த்தை கூறாத இராமன் சுக்ரீவன் மனைவியை வாலி கவர்ந்தான் எனக் கேட்டதும் கோபம் கொள்கின்றான். இதுவும் வேடிக்கையே. தத்துவப் பொருளாகிய இராமன் சினமும் தத்துவத்தையே விளக்குகின்றது. ஸீதா பஹரணத்தில் அபகரித்தவன் கெடுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வாறே தாரா பஹரணத்தில் அபகரிக்கப்பட்டவள் கெடுவது நிச்சயம். அதனைப் போக்கி வாலி கெடுமாறு செய்ய வேண்டியது சுக்ரீவன் பொறுப்பாகும். சுக்ரீவன் எல்லாவற்றாலும் வாலிக்குத் தாழ்ந்தவனே. அத்தாழ்வினைப் போக்கி வாழ்வை அளிக்கத் தோன்றியது இராமன் சினம். தன் ஆக்கம் கருதி அதற்கிடையூறு நேர்ந்தபொழுது கொள்ளும் சினமே வீரத்திற்கு இழிவு தருவதாகும். ஆகவே இங்குக் கொண்ட கோபமும் தனக்குப் பேருதவியாக இருக்கும் வன்மை படைத்த வாலியைப் பகைத்தலால் இராமனது வீரச் சிறப்பையே விளக்குவதாகும்.

இனிச் சேது கட்டுதற்குத் துணை செய்யுமாறு வருணனை இராமன் வேண்டியபொழுது ஏழு நாளளவும் அவன் வாராமை கண்டு, கொண்ட சினம் மூன்றாவதாகும். இதுவும் தெய்வச் சிறப்பை விளக்குவதால் வீரத்தை இழிவு செய்யும் வெஞ்சினமாகாது. பெரு நெருப்பிற்கு ஈரம் ஏது! அஞ்சாமையும் அருளும் உடையது வீரம் என்று முன்னரே கூறியுள்ளோம். அஞ்சுவது நெஞ்சிற் புகுந்த பிறகல்லவோ கோபம் உளதாகும். அருள் செய்யும் நிலையில் இல்லாமல் பிறர் அருளை எதிர்பார்த்து நிற்கும் பொழுதல்லவா அதற்கு ஏதும் குறைவு ஏற்படின் கோபம் தோன்றும். ஆதலால் உண்மை வீரனான இராமன் போர்க்களத்தும் புன்முறுவல் காட்டுவது இயல்புதானே.

சுதந்திரத்தின் தேவை யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

——வெ. சா.

பிரசங்கம்—3

தேசீய உணர்ச்சி

ஒரு ராஜ்யம் முன்னுக்கு வருவதற்கும், அந்த ராஜ்யம் தனது வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் தேசிய உணர்ச்சி அவசியமானதாகும். அந்த உணர்ச்சி இருப்பது ஒரு பொக்கிஷம் இருப்பது போலாகும். இன்று, சீனு அந்த அரிய பொக்கிஷத்தை இழந்து விட்டது. ஏன்? இன்றைய பிரசங்கத்தில், இந்தக் கேள்விக்கே நான் விடையளிக்க விரும்புகிறேன்.

இந்தத் தேசிய உணர்ச்சியை ஒரு நாளில் நாம் இழந்து விடவில்லை. அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே இழந்து விட்டோம். (1911ம் வருஷ) புரட்சிக்கு முன்னர், தேசியத்தை எதிர்த்துப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளையெல்லாம் பாருங்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாகச் சீனுவில் தேசிய உணர்ச்சி இறந்துபோய்விட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் தோன்றின நூல்களில் எவ்விதமான தேசீய உணர்ச்சியும் காணப்படவில்லை; மஞ்சு அரச பாரம்பரையின் புகழையே பாடி நிற்கின்றன. மஞ்சு அரச பரம்பரையினருக்கு விரோதமாக ஒரு வரிகூட எழுத யாருக்கும் தைரியம் பிறக்கவில்லை. சமீப காலத்தில் புரட்சி எண்ணங்கள் எழுந்த சமயத்தில்கூட, தாங்களே புலவர்களென்று பெருமைப் படுத்திக்கொள்ளும் பலர், தினந்தோறும் மஞ்சுக்களின் புகழைப் பாடிய வண்ணமாயிருக்கிறார்கள். தேசியத்தை ஆதரித்து டோக்கியோ நகரத்தில் 'ஜனப் பத்திரிகை' என்ற பெயருடன் ஒரு தினசரி நடத்திக் கொண்டு வந்தபோழ்து மஞ்சுக்கள் சீனுவை ஆண்டு வந்ததால், நாம் அடிமைப் பிரஜைகளாக வில்லையென்று சிலர் கூறிக்கொண்டு வந்தார்கள். பிரிட்டிஷ் சுங்க வரி உத்தியோகஸ்தர் ஒருவர் சீனுவை வெற்றி கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்து அதனை ஆக்ரமித்துக் கொள்வாரானால், அப்பொழுதுகூட, நாம் அடிமைப் பிரஜைகளாகவில்லையென்றுதான் சொல்லிக் கொண்டிருப்போம். இங்ஙனம் கூறிக் கொண்டிருப்போர், மஞ்சு அரச பரம்பரையின் ஆதிக்கத்தை நிலை பெறுத்துவதற்காக ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர். அது மட்டுமல்ல; சீனுவின் தேசிய உணர்ச்சியை நசுக்கவும் இவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றனர். இவர்

கள் சீனாவில் வசிப்பவர்களல்ல, சீனாவுக்குப் புறம்பான நாடுகளில் வசிக்கும் சீனர்கள். ஆனால் சீனாவில் புரட்சி ஏற்பட்ட பிறகு, இவர்கள் புரட்சியை ஆதரித்தனர்.

சீனாவில் தேசிய உணர்ச்சி இறந்து போனதற்குரிய சில காரணங்களைக் கூற விரும்புகிறேன். இந்தக் காரணங்கள் பல. இவற்றில் முக்கியமானது, நாம் அந்நிய ஜாதியினருடைய ஆதிக்கத்திற்குட் பட்டிருப்பதுதான். ஒரு ஜாதி, மற்றொரு ஜாதியை ஆதிக்கங் கொண்டு விட்டதேயானால், ஆதிக்கப் படுத்தப்பட்ட ஜாதி, சுதந்திர எண்ணத்தோடுவாழும்படி அது விடுவதில்லை. ஜப்பான் இப்பொழுது கொரியா தேசத்தின் மீது ஆதிக்கங் கொண்டிருப்பதனால், கொரியர்களுடைய மனதை மாற்ற அது முயற்சி செய்து கொண்டிருக்கிறது. கொரியாவின் பள்ளிக்கூட பாட புத்தகங்களிலிருந்து எல்லாத் தேசிய எண்ணங்களையும் அகற்றிவிட அது முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இதனால் இன்றிலிருந்து முப்பது வருஷங் கழித்துப் பார்ப்போமானால், கொரியர்களுக்கே கொரியா என்ற ஒன்று இருக்கிறதென்று தெரியாமற் போய்விடும்; அல்லது தாங்கள் கொரியர்கள் என்ற எண்ணமும் அவர்களுக்கு இல்லாமற் போய்விடும். மஞ்சூரியாவுக்கும், சீனா விஷயத்தில் இதே எண்ணந்தான் இருந்தது. வெற்றி கொண்ட ஜாதியார், எப்பொழுதுமே ஆளப்படுகிற ஜாதியாரின் தேசிய உணர்ச்சியை நசுக்கப் பார்க்கின்றனர். இந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான், மஞ்சுக்கள் அநேக விதமான தந்திரங்களைக் கையாண்டனர். காங்ஸி என்ற மன்னன், சில சீனப் புத்தகங்களின் மீது தடையுத்திரவு போட்டான். ஆனால் சின்—லுங் என்ற மன்னனோ, தேசிய உணர்ச்சியை நசுக்க இன்னும் சில தந்திர முறைகளைக் கையாண்டான்.

காங்ஸி, தான் தெய்வலோகத்திலிருந்து பிறந்ததாகவும், சீனாவின் சக்ரவர்த்தியாக ஆள்வதற்காகவே தான் ஜன்மமெடுத்ததாகவும், ஆகையால் தெய்வ இச்சையை யாரும் தடுக்க முடியாதென்றும் கூறி வந்தான். ஆனால் சின்-லுங் மன்னனோ, மஞ்சுக்களுக்கும் சீனர்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லாமற் செய்து விட்டான். இதனால், படித்த வகுப்பாருக்கு எவ்வித தேசிய உணர்ச்சியும் இல்லாமற் போய் விட்டது. இந்த எண்ணம்—அதாவது தேசிய உணர்ச்சி—கீழ் வகுப்பாரிடையிலும் பரவியது. தார்த்தாரியர்களைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டதே தவிர, அவர்களை ஏன் கொலை செய்ய வேண்டுமென்ற காரணம் இவர்களுக்குப் புலனாகவில்லை. இதனால்-அதாவது மஞ்சுக்கள் கையாண்ட தந்திரத்தினால்-சீனாவின் தேசிய எண்ணங்கள் நூற்றுக் கணக்கான வருஷங்களாகவே மறைந்து போய் விட்டன.

அந்நியர்களுடைய ஆதிக்கத்தினால், சீனாவின் தேசியம் நசுக்கப்பட்டு விட்டது. ஆனால் சீனர்களைவிட அடிமைப் பட்டுப் போன ஜாதியார் இன்னும் பலர் இருக்கின்றனர். யூதர்கள், இயேசுவின் [illegible] முன்பே, தங்கள் நாட்டை இழந்து, பிறரால் வெற்றி கொள்ளப்பட்ட

ஜாதியாராகி விட்டனர். இயேசுநாதர், பிரசங்கம் செய்து கொண்டிருந்த காலத்தில், அவருடைய சிஷ்யர்கள் அவரை ஒரு புரட்சிக்காரர் என்றே கருதினார்கள். அவர் 'யூதர்களின் அரசன்' என்று கருதப்பட்டார். அவருடைய இரண்டு சிஷ்யர்களின் பெற்றோர்கள் அவரைப் பார்த்து 'ஆண்டவரே! எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றி வைப்பீர்களாயின், எனது மூத்த மகன் தங்களது வலது புறத்திலும், இளைய மகன் இடது புறத்திலும் அமரட்டும்' என்று கூறினார்கள். அதாவது, இயேசுவின் சிஷ்யர்கள், அவரை ஒரு புரட்சிக்காரர் என்றே கருதினார்கள் என்று தெரிகிறது. அரசியல் புரட்சி சம்பந்தமான சில எண்ணங்கள், இயேசுவின் மனத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய சிஷ்யர்களில் ஒருவர், அரசியல் புரட்சி தவறி விட்டதென்று கருதி, தனது குருநாதரை—இயேசுவை—காட்டிக்கொடுத்து விட்டார். இவர், இயேசு ஒரு மதப்புரட்சிக்காரர் என்பதையும், அவர் தமது நாட்டை ஒரு தெய்வநாடு என்று சொல்லிக் கொண்டு வந்தாரென்பதையும் மறந்து விட்டார். எனவே, யூதர்களுடைய ராஜ்யம் அழிந்து போன போதிலும், அவர்களுடைய ஜாதி, இயேசுவின் காலம் வரையில் இருந்து கொண்டு வந்தது. இந்தியாவை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். அது ஜெயிக்கப்பட்ட நாடுதான். ஆனாலும், அங்கு அந்நிய ஆதிக்கம் ஏற்பட்ட வுடனேயே, அதன் தேசிய உணர்ச்சி அழிந்து போகவில்லை. போலந்தைப் பாருங்கள். சென்ற நூறு வருஷ காலமாக, அதுவும் அந்நிய ஆதிக்கத்திலிருந்த போதிலும், குன்றாத தேசிய உணர்ச்சி அதனிடம் இருக்கிறது. இதனாலேயே, சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, போலிஷ்காரர்கள், தங்களுடைய நாட்டை மீண்டும் பெற்று, இப்பொழுது ஐரோப்பாவில் மற்ற வல்லரசுகளுக்குச் சமதையான அந்தஸ்தில் இருக்கிறார்கள்.

எனவே, ஜூடியா, இந்தியா, போலந்து முதலிய நாடுகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்ததுபோல் சீனாவும் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கிறது. அப்படியிருக்க, முந்திய நாடுகளில் தேசிய உணர்ச்சி குன்றாமலிருக்க, சீனாவில் மட்டும் இந்த உணர்ச்சி குன்றிப் போவானேன்? இது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். இதன் காரணங்களென்ன? சீனா அந்நிய ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு முன்னர், அது ஒரு செல்வாக்குள்ள நாடாகவும் அறிவுள்ள ஜனங்களைக் கொண்டதாகவும் இருந்தது. அப்பொழுது இந்த நாட்டை எல்லாரும் புகழ்ந்தார்கள். இந்தக் காலத்தில் தேசிய உணர்ச்சி போய், ஏகாதிபத்திய எண்ணம் சீனாவில் துளிர்க்க ஆரம்பித்தது. ஹான் வம்சத்தைச் சேர்ந்த பாங்-போ-வாங் என்ற மன்னனும், பான்-டிங்-யுவான் என்ற மன்னனும், சுமார் முப்பது சிறிய ராஜ்யங்களை அழித்தார்கள். எப்படி இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் மானேஜரான கிளைவ், சுதேச சமஸ்தானங்களை ஒன்று சேர்ப்பித்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தானோ, அப்படிப்போல மேற்படி இரண்டு சீன மன்னர்களும், பல நாடுகளைச்

சீனாவின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். ஆயிரக் கணக்கான வருஷங்களாக, சீனாவானது, உலகத்தை வெற்றி கொள்ள முயற்சி செய்து கொண்டு வந்திருக்கிறது. ஆசியாவிலுள்ள எல்லாச் சிறிய நாடுகளையும் தன் சுவாதீனத்திற்குள் வைத்துக் கொள்ளப் பார்த்தது. ஆனால், சீனா, மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல் கொடுமையான முறைகளைக் கையாளவில்லை. சீனா, தன்னைவிடச் சிறியதும் பலஹீனமுள்ளதுமான நாடுகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்காக, சமாதான முறைகளைக் கையாண்டது. இந்தக் கண்கொண்டு நீங்கள் ஆராய்ச்சி செய்து பார்த்தீர்களானால், இரண்டாயிரம் வருஷகாலமாக நாடில்லாமலிருக்கும் யூதர்கள் ஏன் தங்கள் தேசிய உணர்ச்சியை இழக்காமல் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்களென்பதும், ஆனால் முன்னூறு வருஷ காலமாக அடிமைப்பட்டிருக்கிற சீனாவில் ஏன் தேசிய உணர்ச்சி அழிந்து போய்விட்டதென்பதும் நன்கு தெரிய வரும்.

இந்தக் காரணங்களை ஆராய்வது ஒரு நோயாளின் வியாதியைக் கண்டு பிடிப்பது போலாகும். ஒரு மனிதனுக்கு எந்த விதமான வியாதி வந்தாலும், அதற்கு அவனுடைய பலஹீனமான சரீரம் ஒரு காரணமாயிருக்கலாம்; அல்லது அவன் நோயாகப் படுப்பதற்கு முன்னர் அவனிடத்தில் அதிகமான பலஹீனம் இருந்திருக்க வேண்டும். சீனா, தனது சுயராஜ்யத்தை இழப்பதற்கு முன்னரேயே, அந்த அரசாங்க அமைப்பின் அடிவேரிலேயே அநேக வியாதிகள் மண்டிக் கிடந்தன. எனவே, அஃது அந்நியரால் ஆதிக்கங் கொள்ளப்பட்டவுடனேயே, அதன் தேசிய எண்ணமானது அழுக ஆரம்பித்தது. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்னவென்றால், சீனா ஓர் ஏகாதிபத்தியமாக ஒரு காலத்தில் இருந்து வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும், ருஷ்ய ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும், சீன ஏகாதிபத்தியம் ஒரு காலத்தில் வலுவுள்ளதாயிருந்தது.

இங்கிலாந்திலும் ருஷ்யாவிலும் சில அறிஞர்கள் சேர்ந்து, தேசியமானது குறுகிய மனப்பான்மை கொண்டதாகுமென்றும், நவீன நாகரிக உலகத்திற்கு இது பொருந்தாதென்றும் கூறுகிறார்கள். இவர்களோடு சில சீன இளைஞர்களும் சேர்ந்து கூச்சல் போடுகிறார்கள். 'ஓ! ஸன்—யின் கொள்கைகளா! தற்காலத்திற்குப் பொருந்தா தலைவகளல்லவா? சகோதரத்துவந்தான் இப்பொழுது சிறந்தது' என்று சில இளைஞர்கள் கூறுவதை அடிக்கடி நான் கேள்விப் படுகிறேன். இஃது உண்மைதானா? அப்படியானால், சீனா, ஏன் பிறரால் ஆதிக்கங் கொள்ளப் பட்டவுடனேயே, தேசிய உணர்ச்சியை இழந்து விட்டது? சீனா எப்படி இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர்; உலக ஏகாதிபத்தியக்கனவைக் கண்டுவந்ததோ, அதைத்தான் இப்பொழுது உலக சகோதரத்துவம் என்று சொல்கிறார்கள். இந்த உலக சகோதரத்துவம் நல்லதா? கெட்டதா? பேச்சளவில் இது நல்ல தத்துவந்தான். ஒரு நாட்டை ஆதிக்கங்கொள்ள விரும்புவோர், இந்த உலக சகோதர தத்துவத்தைச்சொல்

யிக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் ஓர் எண்ணம் அல்லது தத்துவம் நல்லதா கெட்டதா என்று தீர்மானிப்பதற்கு முன்னர், அநுபவ சாத்தியத்தில் அஃது எப்படி யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். அந்த எண்ணம் அல்லது தத்துவம் நமக்கும் உலகத்திற்கும் செயலளவில் நன்மையைப் பயந்துகொண்டிருக்கிறதென்று தெரிந்தால் அது நல்லதுதான். அஃது அநுபவ சாத்தியத்திற்குக் கொண்டு வரப்படக் கூடாமல் போனால், அது நல்லதில்லை.

மற்றவர்களை வென்று கொள்ள, ஏகாதிபத்திய முறையைக் கையாளும் தேசத்தினர் தான், சலுகையோடு கூடிய தங்கள் பதவியையும் செல்வாக்கையும் ஸ்திரப்படுத்திக்கொள்ள, இந்த உலக சகோதரத்துவ முறையைக் கையாள்கிறார்கள். ஒரு காலத்தில், சீனாவுக்கு உலகத்தை யெல்லாம கட்டியாள வேண்டு மென்ற ஆசை இருந்தது. இந்த எண்ணம் பரவி விட்டதால், மஞ்சூ ஜாதியினர் சீனாவுக்குள் சுலபமாக நுழைந்து ஆதிக்கங் கொண்டு விட்டனர். ஆரம்பத்தில் மஞ்சூக்கள் ஒரு லட்சம்பேர்தான் வந்தார்கள். இவர்கள் எப்படி கோடிக் கணக்கான பேரை ஆதிக்கங் கொண்டார்கள்? எப்படி யென்றால் சீனர்கள் உலக சகோதரத்துவத்திலே நம்பிக்கை கொண்டார்கள்; யாரையும் தங்கள் சக்ரவர்த்தியாக வரவேற்றார்கள்.

இன்று உலகில் மிகவும் பலம் பொருந்திய நாடுகள் பிரேட்பிரிட்டனும் அமெரிக்காவும். இவை தவிர, உலகத்தில் இன்னும் பல நாடுகளின் தன்மையும் கொள்கையும் எவ்வித அதிகமான மாற்றத்தையும் அடைய வில்லை. ஆனால் வருங்காலத்தில், கிரேட்பிரிட்டனும் அமெரிக்காவும், உலகத்திலே மிகப் பெரிய வல்லரசுகளாகலாம். அந்தமாதிரி முக்கிய வல்லரசான சமயம் பார்த்து கிரேட்பிரிட்டனானது, சீனாவை ஆக்ரமித்துக் கொண்டு, நம் மெல்லோரையும் ஆங்கிலேயர்களாக்கி விட்டதென்று வைத்துக் கொண்டால், அப்பொழுது நமக்கு நன்மை ஏற்படுமா? சீனர்களெல்லோரும் பிரிட்டிஷ் பிரஜைகளாகவோ, அமெரிக்கப் பிரஜைகளாகவோ ஆகி, சீனாவை அழிக்குந் தொண்டில் பிரிட்டனுக்கோ, அமெரிக்காவுக்கோ உதவி செய்யுமானால்—அதாவது யார் ஆண்டாலென்ன, யார் பிரஜைகளா யிருந்தா லென்ன என்ற உலக சகோதரத்துவ எண்ணத்தில் உதவிசெய்யுமானால் —நமது மனச்சாட்சி சும்மா யிருக்குமா வென்று உங்களைக் கேட்கின்றேன். அப்படிச் சும்மா யிராமல், நமது மனச்சாட்சிக்கு ஏதோ பங்கம் ஏற்பட்டு விட்டதாக நாம் கருதுவோமானால், நமக்குத் தேசிய உணர்ச்சி இருக்கிறதென்று அர்த்தம். இதனால் தான், மனிதசமூகத்தின் அரியபொக்கிஷமா யிருப்பது இந்தத் தேசிய உணர்ச்சி என்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன். எப்படி ஒரு நூலாசிரியன், தனது ஜீவனோபாயத்திற்குத் தனது எழுதுகோலை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்கிறானோ, அதைப் போலவே, மானிட சமூகமானது, தான் உயிர்வாழும் பொருட்டு தேசியத்தை ஒரு கருவியாக உபயோகிக்கிறது. தேசியம் அழிந்து போய் அதனுடைய ஸ்தானத்தில் உலக சகோதரத்துவம் என்பது ஏற்பட்டு விடுமானால், நாம் உயிர் வாழ முடி

யாது. இயற்கைச் சக்திகளின் துணை கொண்டு, மற்ற ஜாதியினர் நம்மை அடக்கி விடுவர்.

இயற்கை விதிகளின் நியதிப்படி, பலசாலிகள்தான் வாழ்கிறார்கள். பலஹீனர்கள் இறந்து போகிறார்கள்: பலசாலிகள்தான் வெற்றியடைகிறார்கள். பலஹீனர்கள்தான் தோல்வியடைகிறார்கள். நாம் பலமுள்ள ஜாதியா, பலஹீனமான ஜாதியா என்பதைப்பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் வாழ்க்கைக்குத் தகுதியுள்ளவர்களா, தகுதியில்லாதவர்களா வென்பதைப்பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஜாதி அழிந்து போகவேண்டுமென்று நம்மிலே யாரும் விரும்ப மாட்டார்கள். ஒவ்வொருவரும், தத்தமது ஜாதிதான் வாழவேண்டுமென்று பார்ப்பார்கள். இப்படி நினைப்பது சர்வ சகஜந்தான். நமது நாடு இன்று மிக ஆபத்தான நிலையில் இருக்கிறது. அழிவுக்குரிய மூன்று காரணங்களினால் நமது ஜாதி அழிந்து விடும்போலிருக்கிறது. முதலாவது மற்ற ஜாதியினர் மற்றநாடுகளிலே அதிகமாகப் பெருகிக் கொண்டு வருகிறார்கள்; இரண்டாவது அந்நியர்களுடைய அரசியல் ஆதிக்கம்; மூன்றாவது அந்நியர்களுடைய பொருளாதார ஆதிக்கம். அந்நியர்களுடைய அரசியல் ஆதிக்கமும் பொருளாதார ஆதிக்கமும், நம்மை இறக்கு முகத்தில் தள்ளிக்கொண்டிருக்கின்றன. நமது நாடு மிகவும் விசாலமுடையதாதலால், உலகத்தின் மற்றப்பாகங்களில் ஜனப் பெருக்கம் அதிகமாகிக் கொண்டுவருவது நம்மை அதிகமாகப் பாதிக்கவில்லை. ஆனால் இன்னும் நூறு வருஷங்கள் கழிந்து, இந்த ஜனப் பெருக்க விஷயம் நம்மைக் கட்டாயம் பாதிக்கும். தேசிய உணர்ச்சியை நாம் இழந்துவிட்ட காரணத்தினாலேயே, அந்நியர்களுடைய அரசியல் சக்திகளும் பொருளாதார சக்திகளும் நமது நாட்டிலேயே பிரவேசிக்க நாம் தாராளமாக இடங்கொடுத்து விட்டோம். நமது தேசியத்தை நாம் காப்பாற்றிக் கொண்டிருந்தோமானால் இவைகளுக்கெல்லாம் நாம் இடமே கொடுத்திருக்க மாட்டோம்.

நமது தேசியத்தை நாம் எப்படி இழந்து விட்டோம் என்பதை விவரித்து கூறுவது கஷ்ட சாத்தியமானதாகும். ஆனால் இங்கு ஒரு கதையை உதாரணமாகக் கூறுகிறேன். இந்தச் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். ஹாங்காங்கில் ஒரு கூலி இருந்தான். இவன், கப்பல் பிரயாணிகளின் மாண்களைத் தூக்கிச் சென்று கூலி சம்பாதித்து அதன் மூலமாகத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். சாமான்களைத் தூக்கிச் செல்லும் பொருட்டு, ஒரு மூங்கில் தடியும் இரண்டு கயிறுகளும் இவன் உபயோகித்து வந்தான். இவைகளே இவனுடைய ஆஸ்தி. இவனுடைய அன்றாட சம்பாத்தியத்திற்கு இவைதான் மூலகாரணங்களாயிருந்தன. இவன் எப்படியோ தனது சம்பாத்தியத்திலிருந்து பத்து டாலர் மிகுத்தி வைத்தான். அப்பொழுது ஹூஸான் நகரத்தில் லாட்டரி சீட்டு போடப்பட்டு வந்தது. இந்தக் கூலியும் ஒரு லாட்டரி சீட்டு வாங்கினான். இவனுக்கு வீடு வாசல் ஒன்றுமில்லை

யாதலினால், இந்த லாட்டரி டிக்கெட்டை வைத்துக் கொள்ள இடமில்லை. எனவே, தன்னுடைய மூங்கில் தடிக்குள்ளேயே இந்த லாட்டரி சீட்டை இவன் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். தனது லாட்டரி நம்பரை அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பதற்காக இவன் மேற்படி சீட்டை அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்க முடியாததலால், அந்த நம்பரை இவன் மனத்தில் பதித்துக் கொண்டான். லாட்டரி குலுக்கப்பட்டது. இவனுக்கு முதல் பரிசு கிடைத்தது. அதாவது ஒரு லட்சம் டாலர் இவனுக்கு ஆஸ்தியாக வந்து சேர்ந்தது. உடனே இவனுக்குச் சந்தோஷம் பொங்கியது. கூலிப் பிழைப்பு இனி நமக்கு அநாவசியமென்று சொல்லிக்கொண்டே இவன், தன்னுடைய மூங்கில் தடியையும் கயிற்றையும் தூர எறிந்துவிட்டான்!

மேற்படி கூலியின் மூங்கில் தடியை தேசியத்திற்கு ஒப்பிடலாம். அதாவது நமது உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமா யிருப்பது இந்தத் தேசியந்தான். லாட்டரியில் முதற் பரிசு கிடைத்தது, புராதன சீனா, ஏகாதிபத்தியமாக வாழ்ந்தபோது உலக சகோதரத்துவ உணர்ச்சி பெற்று, எல்லாரும் சீனாவிடம் மரியாதை செலுத்துவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்ததை யொக்கும். இப்படி எண்ணிக்கொண்டிருந்த காலத்தில்தான், நமது முன்னோர், அந்தக் கூலி தனது உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமான மூங்கில் தடியையும் கயிற்றையும் சமுத்திரத்தில் எறிந்து விட்டது போல, தேசியத்தை நழுவ விட்டனர். பின்னர், சீனாவை மஞ்சு ஜாதியினர் ஆக்ரமித்துக் கொண்ட காலத்தில், அது-சீனா-உலக ஆதிக்கத்தை வகிக்க முடியவில்லை. சீனாவின் தேசிய உணர்ச்சியும் அழிக்கப் பட்டுவிட்டது.

இனியாவது வருங்காலத்தில் நமது தேசிய உணர்ச்சியைப் புதுப்பிக்க ஏதேனும் ஒரு மார்க்கத்தைக் கண்டு பிடித்துக் கொண்டோமானால்தான், நம்மை வேறுவிதமான அரசியல் சக்திகளோ பொருளாதார சக்திகளோ அழுத்தினாலுங் கூட நாம் வாழ்ந்து கொண்டிருக்க முடியும். நாம் இன்னும் நாற்பது கோடி மக்களாக வாழ்ந்து கொண்டிருப்ப தொன்றே, கடவுள் நம்மை அழித்துவிட விரும்பவில்லை யென்பதை வலியுறுத்துகிறது. சீனா அழிந்து போகுமானால், அதற்குக் குற்றவாளிகள் நாம்தான். நாம்தான் உலகத்திலே பெரிய பாவத்தைச் செய்தவர்களாவோம். சீனர்களாகிய நம்மீது கடவுள் பெரிய பொறுப்பைச் சுமத்தி யிருக்கிறார். நம்மை நாமே நேசிக்கவில்லையானால் நாம் கடவுளுக்கு விரோதிகளாவோம். நம்மிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பொறுப்பை வகித்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு இன்று சீனா வந்திருக்கிறது. நம்மை அழித்துவிட கடவுளுக்கு மனமில்லையானால், உலக முன்னேற்றத்திற்கு நாமும் துணை செய்ய வேண்டுமென்பதற்காக நம்மை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறார் என்பதுதான் அர்த்தம். சீனா அழியுமானால் அது வல்லரசுகளின் கையினாலேயே அழியும். எனவே இந்த உல்க வல்லரசுகள் உலக முன்னேற்றத்தைத் தடை செய்து கொண்

டிருக்கும். நேற்று ஒரு ருஷ்யன் என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது பின்வருமாறு கூறினன்:—

"எல்லா வல்லரசுகளும் ஏன் லெனினை எதிர்க்கின்றன தெரியுமா? அவர், உலகம் இரண்டு பிரிவினதாகப் பிரிக்கப்பட்டிருக்கிற தென்றும், ஒரு பக்கம் 125 கோடி மக்களும் இன்னொரு பக்கத்தில் 25 கோடி மக்களும் இருக்கிறார்களென்றும், பின்னவர் முன்னவரை அடக்கியாண்டு, அது மூலமாக இயற்கைக்கு மாறுபட்டுச் செல்கிறார்களென்றும், இந்த அடக்கு முறையை அடக்குவதே இயற்கை யியல்பிப்படி நடப்பதாகும் என்றும் சொல்லிக் கொண்டு வந்தார்."

எனவே, சீனர்களாகிய நாம், உலக அடக்கு முறையை எதிர்த்து நிற்க வேண்டுமானுல், மேலே கூறப்பட்ட 125 கோடி மக்களுடனும் சேர்ந்து கொள்ள வேண்டும். முதலில் நாம் தேசியத்தை வலியுறுத்தி, நமக்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பிறகு, மற்றவர்களுக்கு உதவி செய்வதைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம். சுயநல சக்திகளை உலகத்திலின்று விரட்டியடித்து விட்டபிறகு நாம், உலக சகோதரத்துவத்தைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம்.

போலந்திலுள்ள முக்கிய நகரங்களின் ஜனத்தொகை

(ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் இரையாவதற்கு முன்னர்)

வார்ஸா	....	1,265,700
லோட்ஸ்	....	665,200
ல்வோவ்	....	317,700
போஸ்னன்	....	268,800
க்ராகோ	....	254,600
வில்னு	....	208,500
பைட்கோஸ்க்ஸ்	....	137,100

இலங்கையில்—இந்தியர்கள்

—நாராயணசிவன்

II

சென்ற வியாசத்தில் இலங்கையர் இந்தியர்களுக்கு இழைத்து வரும் இன்னல்களைப்பற்றி வரைந்திருந்தேன். கல்விக்கும் நாகரிகத்துக்குமட்டுமல்லாமல் பொருளாதாரத்துக்கும் இலங்கை இந்தியாவுக்குக் கடமைப் பட்டுள்ளதென்றால் அவர்களிழைத்த இன்னல்களின் அநீதத்தின் பிரமாணத்தை அளவிடவும் முடியுமோ? இத்தீவின் அபிவிருத்திக்கு முக்கிய காரணம் தேயிலை. இதன் விளைவும் இதற்குக் கிடைக்கும் விலையுமே இத்தேச பொருளாதாரநிலைக்கு மூல ஆதாரம். இதன் மூலம் இத்தேசத்தின் வருட வருமானம் பதினைந்து கோடி ரூபாயாகும். இப்பொருளின் விளைவையோ விலையையோ பாதிக்கும்படியாக ஏதேனும் ஏற்படுமாயின் தேசத்தின் பொருளாதாரம் சீர்குலைந்து போகுமென்பதில் சந்தேகமில்லை.

இந்தியத் தொழிலாளர்களில்லாவிடில் இலங்கைத் தேயிலைத் தொழில் இன்றைய நிலையை அடைந்திராதென்பதும் இன்னும் தொடர்ந்திருக்க முடியாதென்பதும் உலகறிந்த விஷயம். ஒருகாலத்தில் சிங்களவர்கள் இத்தொழிலில் ஈடுபடச் செய்யப்பட்டு இத்தொழிலுக்கு அதிக சம்பந்தமுள்ள மலேரியா காய்ச்சலைத் தாங்கக் கூடியவர்களல்லவென்று கண்டார்கள். இலங்கை ஏற்றுமதியில் நூற்றுக்கு 57½ விகிதம் தேயிலையேயாகும். அடுத்தபடியான இரண்டு முக்கிய பொருள்கள் கொப்பரையும் ரப்பருமாகும். இலங்கைக் கொப்பரையையும் தேங்காய் எண்ணெயையும் வாங்குபவர்களில் இந்தியாவே முதன்மையானதென்று இலங்கையறியாமலில்லை. தேயிலைத் தொழிலுக்கு இந்தியத் தொழிலே முக்கியமானதென்பதோடல்லாமல் இதில் இந்தியரின் பெரும் மூலதனம் முடக்கப்பட்டு தொழில் விருத்திக்குக் காரணமாயிருந்து வருகிறது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் இதர இந்திய வியாபாரிகளும் இல்லையேல், இலங்கையின் பொருளாதார சரித்திரம் வேறு விதமாகவே இருந்திருக்கும். இது இங்ஙனமிருக்க சிங்கள அரசியல் வாதிகள் சிங்களவர் மட்டிலுமே இலங்கையர்களாவார்களென்று சொல்லுகிறார்கள். அத்தீவின் ஜனசங்கியையில் 100-க்கு அறுபத்திநாலு பேர்தான் சிங்களவரென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். நூற்றுக்கு இருபது பேர் இந்தியர்களாயிருப்பதோடல்லாமல் எஞ்சி நிற்பவர்களும் பல நூற்றாண்டுகளாகவே அங்கு குடியேறிய தமிழ் நாட்டு மக்களுமாவார்கள். ஐரோப்பியர்களின் தொகை மிகச் சொற்பமே. பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் சிறுபான்மையோருக்கு—சிறப்பாக இந்தியர்களுக்கு—சிங்களவரைக் காட்டிலும் தேசத்தில் அதிக

உரிமை பெற்றிருக்கிறார்களென்பது எல்லோருமறிந்ததே.

இந்தியத் தலைவரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் சார்பில் இந்திய மக்களின் நிலைமையை நேரில் அறியவும், இரு தேசத்தினிடையே நேசப்பான்மையை வளர்ப்பதற்கான மார்க்கத்தைத் தேடுவதற்காகவும் இலங்கைக்கனுப்பப் பெற்றார். அவர் தேசப் பொது மக்களின் அபிமானத்தைப் பெற்றாரெனினும் அரசியல் வாதியென்ற வகுப்பாரின் மனப்பான்மை மாறுதலடைய வில்லை. பொதுவாக அவர் போன நோக்கம் வெற்றி பெறவில்லை. சில மாதங்களுக்கு முன்னிருந்தே இந்திய அரசாங்கம் அங்குப் போகும் தொழிலாளர்களுக்குத் தடை ஏற்படுத்தியிருந்து இப்பொழுது தொழிலாளிகள் அங்குச் செல்லுவதையே தடுத்து விட்டது. தோட்டக்காரர்கள் வெகு சீக்கிரத்தில் இதன் பலனை உணரக் கூடும். இலங்கையின் இந்த அநியாய முறைகளைப் பொறுத்து இந்தியப் பொருளாதார நிபுணர்களும், அரசியல் வாதிகளும் பலவிதமான முறைகளில் வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாமென்று பேசி வருகிறார்கள். இம்முறைகள் கடை முறையில் கொண்டு வந்து வெற்றி பெறலாமென்பதில் சற்றும் சந்தேகிப்பதற்கில்லை. தோட்டக்காரர்களுக்கு அத்தியாவசியமாயிருந்து அதன் மூலம் அத்தீவின் பொருளாதாரத்தைப் பெருக்கி வரும் அங்குள்ள இந்தியத் தொழிலாளர்களை உடனே அங்கிருந்து கிளப்ப வேண்டும். இந்தியர்களின் மூலதனம் 60 கோடிக்கு மேல் அங்கிருந்து வருகிறது. அதற்குப்போதுமான பாதுகாப்பு கலோனியல் ஆபீஸ் மூலம் பெற வேண்டியது அத்தியாவசியமாகும். தவிர இலங்கையர்கள் பலபேர் இந்திய சிவில் ஸர்வீஸிலிருந்து வருகிறார்கள். நிலைமையைக் கருதி அவர்களுடைய உத்யோகத்தை நிறுத்திக் கொள்ளலாம். இதற்கான சட்டம் கொண்டு வர வேண்டுமென்று பொது ஜனங்களிடையே கிளர்ச்சி யில்லாமலில்லை. கலோனியல் ஆபீஸ் ஏற்படுத்தி அதன் மூலம் இந்தியா சமுத்திரக் கரையோரத்தைப் பாதுகாத்து வருவதற்காக இந்திய சர்க்கார் ஒரு தகுந்த தொகை வசூலிக்கலாம்.

விவசாயம், வாணிபம், கைத்தொழில் முதலிய எல்லா வகைகளிலும் இந்தியா தாராள நோக்குடனேயே இருந்து வருகிறது. இதனால் அதற்கு ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களைக்கூட அது பொருட் படுத்துகிறதில்லை. இது வரை இருந்து வந்தது போலல்லாது இவ்விஷயங்களில் சற்று கண்டிப்பாகவே நடக்க வேண்டும். இவைகளெல்லாம் சற்று கடினமானவைகளே யல்லாது நடவடிக்கையில் கொண்டு வர அசாத்தியமானவைகளல்ல.

இலங்கை இந்தியக் கடல் வியாபாரத்தினால் இந்தியா லாபமடைகிறதென்பதில் சந்தேகமில்லை. 1936-37, 1937-38, 1938-39 வருடங்களில் முறையே 286 லட்சம், 362 லட்சம், 392 லட்சம் ரூபாய்களுக்கு இறக்குமதியைவிட இலங்கைக்கு அதிகமாக ஏற்றுமதி செய்திருக்கிறது. இதிலிருந்து இந்தியா பதிலுக்குப் பதிலேதேனும் செய்யும் பட்சத்தில் அதற்கே கெடுதல் விளை

விக்குமென்று தெளிவாகிறது. இந்தியாவின் இதர வியாபாரங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இலங்கை இந்திய வியாபாரம் மிகமிகச் சொல்பமானதே. இந்தியாவில் இலங்கை இறக்குமதி இதர இறக்குமதிகளில் 100-க்கு 1 விகிதம்தான். ஏற்றுமதியோ வெனில், இந்தியாவினின்று இலங்கைக்கு ஏற்றுமதியாவது இதர நாடுகளுக்கு ஏற்றுமதியாவதில் 100-க்கு 3 விகிதமே.

வியாபாரக் கட்டுப்பாடு மூலமாக பழி தீர்த்துக் கொள்ள நினைப்பது இந்தியாவுக்கு நஷ்டத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் அதனை ஈடு செய்து கொள்ளுவதற்கு வேறு வழியில்லாமலில்லை. இலங்கை இந்தியச்சரக்குகளை வாங்குவதற்கு அவைகளின்குறைந்த விலையே காரணமாகும். ஏனென்றால் இருதேசங்களும் அடுத்தடுத்திருந்து வருவதோடு கேழ்வைகளிலும் சலுகை காட்டுப்பட்டு வருகிறது. இந்தியா நினைக்கும் பட்சத்தில் இலங்கையின் கொப்பரைத் தொழிலை மிகவும் பாதிக்கச் செய்யலாம். முன் பலமுறைகளில் இந்தியத் தேங்காய்த் தொழிலுக்கு ஆதரவு காட்டவேண்டுமென்று ஏற்பட்ட கிளர்ச்சிக்கு இலங்கைக்கு இந்தத் துறையில் இந்திய உதவவேண்டுமெனக்கருதி தேசத் தொழிலுக்கு ஆதரவளிக்கவில்லை. இந்தியர்கள் இலங்கையில் அவதிக் காளாவார்களாகில் இந்தியத் தேங்காய்த் தொழிலுக்கு ஆதரவளித்து அதன் மூலம் தேச வருமானத்தையும் அதிகரிக்கச் செய்யலாம்.

இலங்கை இந்திய வியாபார ஒப்பந்தப் பேச்சு அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. இலங்கையிலுள்ள இந்திய மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்ப்பந்தங்களை நீக்கி, இனிமேலும் பாகுபாடான சட்டங்கள் ஏற்படுத்தப்பட மாட்டாதென இலங்கை அரசாங்கத்தார் உறுதி சொன்னாலொழிய இந்தியர்கள் இதில் பங்கு கொள்ளுவது ஆகாது. வியாபார ஒப்பந்தத்தில் ஒரு தேசம் இறக்குமதிச் சாமானின் விலையையோ விகிதத்தையோ கூட்டுவதற்கு முன் மற்ற தேசத்தைக் கலந்து கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை யிருக்க வேண்டும்.

1—8—39ல் இலங்கை அரசாங்கத்தார் இந்தியர்களை வெளியேற்றும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார். அதே தினத்தில் இந்திய சர்க்கார், சென்னை திருவிதாங்கூர், கொச்சி ஆகிய ஸர்க்காரைக் கலந்து கொண்டு திறமையற்ற (Unskilled) கூலி யாட்கள் இலங்கைக்கு ஏகுவதைத் தடை செய்து விட்டனர். அதே தினத்தில் இலங்கை கவர்னர் ஒரு பொதுக்கூட்டத்தில் செய்த பிரசங்கத்தில் ஜனங்கள், விஷயத்தைச் சரிவர உணர்ந்து கொள்ளுவதற்காகவும், தப்பெண்ணம் கொள்ளாதிருப்பதற்காகவும் விபரமாக எடுத்துச் சொன்னாராம். முக்கிய அதிகாரி இதில் தப்பெண்ணம் கொள்ள இடமிருக்கிறதென்று உணர்ந்திருக்கிறாரென்பதை யறிந்தாவது நாம் திருப்திப்படுவோம்.

ஜோன் ஆப் ஆர்க்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரான்சு தேசத்தில் கட்சிப்பிளவுகள் வலுத்து நின்ற காலத்தில் அந்நாட்டரசன் விண்ணுலகடையவே, அவருடைய குமாரனை இளவரசன் பட்டத்திற்கு வருவதை ஒரு கட்சியார் எதிர்த்தனர். அன்னிய னொருவனுக்கு அரசுரிமையை வழங்கவும் பிரயத்தனப்பட்டனர். அன்னியனுக் குதவி கொடுத்துத் தம் தாய் நாட்டை அவனுக்கு அடிமைப்படுத்துவது தமக்கே இழிவாகும்; இது தேச பக்தியாகாது; இதன் பயனாகப் பின்னால் மாளாத தொல்லைகள் நிகழும் என்னும் விஷயங்களைப்பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை. இவ்வாறு தம் தாய் நாட்டை அன்னியனுக் கடிமைப் படுத்தவே போர் புரியவும் மார்தட்டி முன் வந்த வீரர்களின் கட்சிக்கு பர்கண்டியர்கள் என்று பெயர்.

இங்கிலாந்து தேசத்துப் படைகள் பிரான்சு தேசத்திற்கு வரலாயின. பர்கண்டியர்களின் உதவியைக் கொண்டு பிரான்சை அடிமைப்படுத்தத் தீவிரப்போர் முயற்சிகள் நடைபெற்றன. பிரான்சின் பெரும் பாகத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டதும் இளவரசன் தன் நாட்டின் நிலைமையை அகக்கண்ணால் கவனித்தான். என்ன மோசம்! நம் நாட்டவர்களே பிற நாட்டவர்களுக்கு உதவி புரிகின்றனரே! பர்கண்டியர்களின் உதவியன்றியில் ஆங்கிலேயர்கள் பிரான்சில் காலடி வைக்கமுடியுமா? ஐயோ! என் தேசத்தின் மானத்தைக் காக்க என்னால் முடியவில்லையே! நாட்டின் பெரும் பாகம் அன்னியர்க்கடிமையாயிற்றே! தோல்வி மேல் தோல்வியுண்டாகவே நமது வீரர்களுக்குத் தைரியமும், நம்பிக்கையும், ஊக்கமும் அகலப்போகின்றதே! என் செய்வேன்! நாடு அடிமையானால் நாமும் இத்துடன் நிர்மூலமாய் விடுவோமே!' என்று நினைக்க நினைக்க இளவரசனுக்கு மாளாத் துயரங் குடிகொண்டது. படைகளோ ஊக்கங் குன்றி, வீரம் வறண்டு, தைரியம் விட்டு இவன் பேச்சைக் கேட்கவில்லை. இளவரசனும் தைரியம் விட்டான். இவனுடைய படைகளும், 'ஐயோ! அந்த ஆங்கிலேயரை வெல்ல முடியாது! அப்பப்பா! போர் வேண்டாம்' என்று மூலையிற் பதுங்கினர். இளவரசனின் நெஞ்சம் படபடத்தது; துடி துடித்தது. என்

செய்வான் பாவம்! எல்லா நம்பிக்கையுமிழந்து பரிதவித்தான்.

திடீரென்று வானம் இடித்தது; அரசியல் வானம் மின்னிற்று. இளவரசன் முன்னே ஓர் இளஞ் சிறுமி வந்து நின்றாள். இளவரசனைக் கண்டதும் 'அரசே! அஞ்சாதே! நான் ஒருத்தி, இந்த ஆங்கிலேயரை நாட்டைவிட்டு ஒரு நொடியில் விரட்டியடிக்கிறேன். நான் யார் தெரியுமா? அன்பின் தாயகமும் கடவுள் மைந்தனாகிய இயேசு நாதரின் தூதுவள். தாய் நாட்டை அடிமைப்படுத்தும் சிறுமையைக்கண்டு நாதர் சகிக்கவில்லை. இந்த தேசத் துரோகிகளாகிய பர்கண்டியர்களின் பாதகச் செயல்களைக் கண்டு இயேசு நாதர் மனப் புண்ணடைந்தார். என்னையழைத்து 'உடனே நீ போய் பிரான்ஸைக் காப்பாற்றி வருக!' வென்று ஆக்ஞாபித்திருக்கிறார். என் வினையை இதோ முடித்துக் காட்டுகிறேன். உன்னிடமுள்ள படையைக் கொடு. உனக்காக நான் போர்புரிந்து வெற்றி தருகிறேன். இது சத்யம்!' என்று கர்ஜிக்கவே இளவரசன் பார்த்தான். எந்த பதிலும் சொல்லக் கூடவில்லை.

அப்போது ஓர் தூதன் வந்து 'அரசே! விரோதிகள் ஆர்லியன்ஸ் கோட்டையை முற்றுகை போட்டு விட்டனர். அந்தக் கோட்டை போனால் தென் பிரான்சு முழுமையும் போச்சு!' என்று அறிவிக்கவே, இளவரசனின் கண்களில் மளமள வென்று நீர் பெருகியது. எதிரே வீர மாதைக் கண்டான். உடனே சிரித்தான். 'இள நங்கையே! எதிரிகள் வலியராவர். நாட்டின் வட பாகம் ஏற்கனவே அவர்களுக்கு அடிமையாய் விட்டது. தென் பாகத்தின் உயிர் நாடியைக் கையிற் பிடித்துள்ளார்கள். என் வீரர்களோ நடை பிணமாயினர். பெண்ணே! உன்னால் என்ன முடியும்?' என்று அவனது சிரிப்பு கூறிற்று. வீர மாது பார்த்தாள். 'அரசே! இவ்வுலகைக் காக்கும் வீர மாதே உன் முன் நிற்பதாக அறிந்து கொள். என்னால் முடியாதது முண்டோ? போனது போகட்டும். கடைசி முறை யென்றெண்ணி என்னுடன் படையை யேவு! நாளைய தினம் உனக்கு வெற்றியென அறிவிக்கிறேன்' என்று போட்ட சங்கத் தொனி அரசனைத் தட்டி யெழுப்பிற்று. தனது படையை மாதின் பின் அனுப்பினான்.

வீர மாதோ படையைப் பார்த்து, 'சோதரரே! அஞ்ச வேண்டாம். இதோ நான் உங்கள் கண்ணெதிரில் வெட்டி வீழ்த்துகிறேன். உலகமே புரண்டு வந்தாலும் என் சக்தியை வெல்ல முடியாது. கடவுள் மைந்தனாகிய இயேசுவின் ஆக்ஞையின் பேரில் உங்கள் நாட்டின் மானத்தைக்காக்க வந்தவள் நான். நான் வீரர்க்கே தெய்வம். தேச பக்தர்களுக்குத் துணையாக நிற்பவள் நானே! இதோ பாருங்கள். உங்கள் எதிரிகள் என்னைப் ஓநாயைக் கண்ட ஆட்டு மந்தையைப் போல் பறந்தோட வேண்டும். அவர்களை விரட்டி விட்டு, தேசத் துரோகிகளாகிய பர்கண்டியர்களை நிர்மூல மாக்குகிறேன். குழந்தைகளே! வாருங்கள். வாழ்ந்தால் சுதந்தர நாட்டில் வாழுங்கள். இன்றேல் வீர சுவர்க்கம் பெற அருகதை யடையுங்கள். புறங்காட்டி யோடுவோர் பேதையரன்றோ? அடிமைகள் சாவி

னுங் கடையரன்றோ! இத்தகி வாழ்ந்திட நாம் ஒருப்படுவதும் ஆண்மைத் தனமாகுமா? வீரமாகுமா? தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் பாதகரைக் கடவுள் மன்னிப்பாரா? தேசமென்பது நம்மையீன்ற தாயன்றோ? தாயின் மானம் போகும் போது நாம் கை கட்டி மௌனம் சாதிப்பதும் நீதியோ? தாயைக் காக்க உயிரிழக்கவும் தயாரென முன் வரலன்றோ உண்மைத் தியாகம்! உண்மை வீரம்! உண்மை ஆண்மை! இப்பேர்ப்பட்ட நெருக்கடியில் தேசத்தின் மானங் காக்கும் மானமுள்ள மக்களின் பெயர் உலக சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும். உங்கள் ஆண்மையை தற்கால உலகமும், பிற்கால உலகமும் போற்றி வணங்கும். தேசத்தைக் கைவிட்டால் உங்களைவிட பேடிகள் உலகிலில்லையென்று உலகுளோர் இகழ்வர்; தேவர்கள் சபிப்பர். மக்காள்! எவ்வழி பின்பற்றுவீர்கள்? வீரமும், ஆண்மையுங் கொண்டு தியாகம் செய்யப் போகிறீர்களா? அல்லது அச்சமும் பேடிமையுங் கொண்டு படுநரகில் விழத்துணிவீர்களா? சொல்லுங்கள். நீங்கள் என் பின்னோடு வராவிட்டாலும் நான் ஒருத்தியே போர்க்களம் சென்று வெற்றி கொள்ளுகிறேன்' என்று கேட்கவே படைவீரர்களுக்கு வீரவுணர்ச்சி பிறந்தது. அவர்களுடைய நரம்புகளிலோடும் ரத்தம் கொதித்தது. பெண்மணி சொன்ன ஒவ்வோர் வார்த்தையும் அவர்களின் ஆவியுள் புகுந்தது. திக் பிரமை கொண்டனர். என்றுங் காணா வீரத் துடிப்பு அவர்கள் முகத்தில் இப்போது காணப்பட்டது. வீரத் தெய்வமே அவர்களது மனதில் புகுந்தாள். தேச வெறி அவர்களின் ரத்தத்தில் கலந்தது. காலனே யாயினும் அவனையும் வெட்டி வீழ்த்தும் மகா சக்தி அவர்களிடம் திருநடனமாடியது. சோர்வுற்ற வீரர் மகா சக்தி பெற்றனர்.

புத்துயிர் பெற்ற வீரர் வீர வாழ்வு வாழக் கிளர்ந்தனர். 'உலக அன்னையே நாமுன் நிற்கையில் அச்சமேன்? போர் புரிவோம். சுதந்திரம் அல்லது வீர சுவர்க்கம் பெறுவோம்' என்று குதூகலத்துடன் ஆர்ப்பரித்தனர். எல்லோரும் ஒரு மனிதனைப் போல போருக் கெழுந்தனர். வீரத்துடிப்புடன் போர்க்களஞ் சேர்ந்தனர். நாலாயிரம் வீரரை உடனிருத்திச் சென்ற வீரப்பெண், கையில் வாளும் கொடியுமேந்தி வீரமா சக்தியன்னையைப் போல் பகைவரைக் கொளுத்தச் சென்றாள். அவளுடைய வாளுக்கிரையானோர் பலபேர்; அவள் தன் வீரப் பார்வையைக் கண்டு நடுநடுங்கி மெய் சோர்ந்தோர் அனேகர்; 'ஓர் பெண்ணே ஆண்மை கொண்டால் ஆண்மையை எதிர்க்க நம்மாலியலுமோ' என்று பகைவர் சோர்ந்து வீழ்ந்தனர். முற்றுகை யிடப்பட்ட ஆர்லியன்ஸ் கோட்டையை வீர மாதும் வீரப்படையும் அணுகினர். வீர சக்தி படைத்த சேனையைக் கண்டு ஆங்கிலேயர் வெருண்டோடினர். கோட்டை மீட்கப்பட்டது. வெற்றியே அணியாகக் கொண்டு தோல்வியை என்றுங் கண்டிராத ஆங்கிலேயர் என்றழைக்கப்பட்டவர்கள் ஒரு இளஞ் சிறுமியின் முன் பதறியோடினர். இச்செய்தி,பிரென்சு உலகெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. நம்பிக்கையையும் தைரியத்தை

யும் இழந்து மெலிந்து வாடின பிரெஞ்சுக்காரர் வீரத் தோடெழுந்தனர். 'நம்மைப் பிடித்த பிசாசுகள் தொலைந்தன' என்னுங் கொடி தாங்கி நாட்டைக் காக்க முன் வந்தனர்.

ஆர்லியன்ஸ் கோட்டையை விடுவித்து, நாட்டின் தென் பிரதேசத்தை யுங்காத்து, எதிரிகளை விரட்டியடித்து நாட்டினர்க்கோர் புத்துயிரும், புத்துணர்வு மளித்த வீர நங்கையின் முயற்சியால் இளவரசனுக்கு ரீமன் என்னும் நகரத்தில் முடிசூட்டப்பட்டது. அடிமையான வட பிரதேசத்தை விடுவிக்க வீரக்கன்னி படை திரட்டினாள்; வீர முயற்சிகள் செய்தாள். திடீரென்று அவள் தேசத் துரோகிகளாகிய பர்கண்டியர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டாள். தங்கள் நாட்டைக் காத்த தெய்வத்தை அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? விழுங்க வந்த ஆங்கிலேயரிடம் ஓர் விலை பெற்று விற்று விட்டார்கள். தங்களை ஆடுகள் போல் ஓட வைத்த நங்கையைக் கண்டு சிரித்தனர். நிராயுதபாணியாய் நிற்கும் வீர நங்கையைக் கண்டு இவர்கள் 'ஓ இவள் ஓர் சூன்யக்காரி! உலகைக் கெடுக்க வந்த பாதகி! இவளை உயிருடன் விடலாகாது. சுட்டெரித்து விடுவோம்' என்றனர். அப்போது வீரப் பெண், 'அன்னியர்களே! நீங்கள் என் தாய் நாட்டை அடிமைப்படுத்த முயற்சித்தீர்கள். எங்கள் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் ஓர் கட்சியினரைக் கைவசம் போட்டுக் கொண்டீர்கள். என் நாட்டினர் தளர்வுற்ற சமயத்தில் என்னுள் வீரத்துடிப்பு மேலிட்டது. இந்நெருக்கடியினின்று நாட்டின் மானத்தைக் காப்பதே என் வாழ்வின் பயன் என்று என் ஆவி கூவியது. உடனே எழுந்தேன். தெய்வீக அருள் பெற்றேன். தெய்வீக சக்தியே உங்களை வென்றது. நான் வென்றதல்ல. நான் மந்திரவாதியல்ல; பேய்பிசாசல்ல; தேச பக்தி நிறைந்த பைத்தியக்காரி. நான் எங்கிருந்தும் புதிதாக வந்துவிடவில்லை. என் வரலாறு வேண்டுமா? நான் பிறந்து வளர்ந்தது டாம்ரம் என்னும் குக்கிராமம், என் தகப்பனார் ஓர் ஏழை விவசாயி. இயேசு நாதரே என் வழிபடுதெய்வம். நாட்டினர் சீர்கெட்டு நாடும் அன்னியர் கையிற் படும் விஷயம் என் காதுக் கெட்டியதும், ஆர்க் மரபிலுதித்த ஜோன் என்னும் பெண்ணே, நாட்டைக் காக்க வீரமுடன் விரைந்து செல் என்று என் ஆவி கூவியது. உடனே வந்தேன். என் வினை முடித்தேன்' என்று தன் வீர உரைகளை முடிக்கவே, ஆங்கில வீரர்கள் இவளைக் கட்டி துணிகளால் சுற்றி நெருப்பிட வந்தனர். வீரப் பொறுமையுடன் சகித்த ஜோன் கூறுகிறாள்:—ஆங்கிலேயர்களே கேளுங்கள்! என்னைத் தீயிட்டெரித்தாலும் பயமில்லை. நெருக்கடியில் தேசத்தைக் காத்து வெற்றியடைந்தேன். அதுவே போதுமானது. தேசமே தெய்வமெனக் கருதி என் ஆவியை அன்பின் தாயகமாகிய இயேசு கூவி யழைக்கிறார். தீயிடுங்கள்! இக்கட்டையைப் பொசுக்கிச் சாம்பலாக்குங்கள். என் ஆவியோ தேச பக்தர்களைத் தட்டி யெழுப்பி வரும்' என்று கர்ஜித்தாள். ஆங்கிலேயரும் நெருப்பிட்டு அவ்வீர மங்கையின் தேகத்தை அக்னிக்கு அர்ப்பித்தனர்.

அப்பெண் கல்லானின் ஆவியோ மேலெழுந்தது. பிரெஞ்சுக்காரரே! உலகத்தாரே! வீர நினைவு கொண்டு வாழுங்கள்! தேசத்தைக் காத்தலே சீரிய பணியாகும். அடிமைத் தனத்தை எக்காலும் வரவேற்க ஒருப்படாதீர்கள்! தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கும், தாயைக் காட்டிக் கொடுப்பதற்கும் வித்தியாசமில்லை. நாட்டுப் பணியே தெய்வப் பணியாகும். நாட்டுப் பணியாற்றுவோர் அனைவர்க்கும் அருளளிப்பேன்' என்று அம்மாதின் ஆவி உலகிற்கு அறிவிக்கிறது. பிரெஞ்சுக்காரர் இன்றைக்கும் நாளைக்கும் இம் மாதை தெய்வமென்றே கொண்டாடுகிறார்கள். உலக சரித்திரமும் இவளுடைய வீரத்தைப் புகழ்ந்து பேசுகின்றது. உலகுளோர் இவளின் வரலாற்றை வியந்துரைக்கின்றனர். ஜோன் ஆப் ஆர்க் என்னும் பெயரைக் கேட்டவளவில் நெஞ்சில் வீரத் துடிப்பு படபடக்கிறதன்றோ! வீரர் வாழ்க! வீரத் தொண்டர் வாழ்க! வீரங் கொண்டு உலகம் தழைக்க!

ஜெர்மன் ஏகாதிபத்தியத்திலுள்ள முக்கிய நகரங்களின் ஜனத்தொகை

பெர்லின்	....	4,242,501
வியன்னா	....	1,874,130
ஹாம்பர்க்	....	1,129,307
ப்ரேக்	....	848,823
கோலோன்	....	756,605
ம்யூனிக்	....	735,388
லைப்ஸிக்	....	713,479
எஸ்ஸென்	....	654,461
ட்ரெஸ்டன்	....	642,143
ப்ரெஸ்லா	....	625,198
ப்ராங் புர்ட்	....	555,857
டுஸெல்டார்ப்	....	498,606
ஸ்டுட்கார்ட்	....	415,028
நியூரென்பெர்க்	....	410,438
ப்ரெமென்	....	323,331
மான்ஹீம்	....	275,162
ப்ருன்	....	264,925
கீல்	....	218,335
ப்ராடிஸ்லாவா	....	123,852
க்லீவிட்ஸ்	....	111,062
லின்ஸ்	....	108,470
மெமெல்	....	38[illegible],927



அன்னி பெஸண்ட்

ஜனனம் 1847

மரணம் 1933

—"ஒரு காங்கிரஸ்வாதி"

உலகத்திலே நாவன்மைபடைத்த நாவலர்கள் ஒரு சிலர்தான். அவரில் ஸ்ரீமதி அன்னி பெசண்டம்மையாரும் ஒருவர். எவ்வளவு பெரிய கூட்டத்திலும் அன்னிபெசண்டம்மையாருடைய தனித்துவத்தை யாருமே கண்டு பிடித்து, அந்தத் தனித்துவத்துக்கு மதிப்பும் கொடுத்து விட முடியும். இந்தியர்களுக்கு, சட்டரீதியாகக் கிளர்ச்சி செய்வதெப்படி என்று கற்றுக்கொடுத்து, மேனாட்டு மோகத்தில் அழுந்திக் கிடந்து அது காரணமாக தங்களுடைய தேசிய உணர்ச்சியையும் மத உணர்ச்சியையும் மறந்து கிடந்த இந்திய இளைஞர்களைத் தட்டி யெழுப்பிய பெருமையில் பெரும்பாகம் அன்னி பெசண்டம்மையாரையே சாரும்.

அன்னிபெசண்டம்மையார் 1847ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி லண்டனிலுள்ள ஒரு சாதாரண குடும்பத்தில் ஜனித்தார். இவருடைய தகப்பனார் டாக்டர் வில்லியம் பேஜ்வுட் என்பவர் ஐரிஷ்வாசி. ஆனால் லண்டனில்தான் இவருடைய உத்தியோக காலம் கழிந்தது. அன்னி பெசண்டின் குமாரிப் பருவத்தில் உட் என்ற நாமத்துடனேயே விளங்கினாள். சிறு வயதிலிருந்தே இவளுக்குப்படிப்பில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஞாபக சக்தி அதிகம். விஞ்ஞான சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆராய்வதில் அதிக அக்கரை கொண்டாள். மற்றும் பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளிலும் இவளுக்கு அதிக பாண்டித்தியம் சிறு வயதிலேயே ஏற்பட்டது. இப்படியிருக்கையில் 1867ம் வருஷம் பிராங்க் பெசண்ட் என்ற ஒரு பாதிரிக்கும் குமாரி உட்டுக்கும் விவாகம் நடைபெற்றது. இது முதற்கொண்டு குமாரி உட் அன்னிபெசண்டானாள். ஆனால் இந்த விவாக சம்பந்தத்தினால் இருவருக்கும் ஏற்பட்ட பாசமானது நீடித்து நிலைக்கவில்லை. ஏனென்றால் அன்னிபெசண்ட் எப்பொழுதுமே சுதந்திர உணர்ச்சி உள்ளவள். ஒரு குடும்பத்திலே கட்டுப்பட்டு இருக்க விரும்பவில்லை.

தவிர, கணவனூர் ஒரு பாதிரியா யிருந்தபடியால், அவர் கிறிஸ்தவதர் மத்தின் வைதிக மார்க்கத்தைக்கடைப் பிடிப்பவராக இருந்தார். ஆனால் அம் மையாருக்கு வைதிக கிறிஸ்தவதர்மத் தில் அவ்வளவு பற்றில்லை. இதனால் இருவருக்கும் மத சம்பந்தமாக அடிக் கடி வாதங்கள் நிகழும். குடும்பப்பிணக் குகளும் பல ஏற்பட்டன. அன்னி பெசண்டுக்கு மனோ வியாகூலம் அதிக மாகி விட்டது. இந்தச் சமயத்தில் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. ஒரு பெண் குழந்தைக்கு அதிக நோய் உண்டாயிற்று. இதனால் அன்னி பெசண்டுக்குக் கடவுளுண்மை யில் சந்தேகம் ஏற்பட்டது. 'என்ன, சர்வ சக்திமானான கடவுளின் விளை யாட்டுப் பொம்மைகளா மனிதர்கள்' கடவுள், மனிதர்களின் துக்கங்களைக் கண்டு சந்தோஷப் படுகிறாரா என்ன? என்றெல்லாம் யோசித்தாள். கடைசி யில் நாஸ்திகக் கொள்கையை அவலம் பித்து, அதனைப் பிரசாரமும் செய்யத் தொடங்கினாள். இதனால் புருஷனுக்கும் மனைவிக்கும் அதிகமான மனப்பிணக்கு ஏற்பட்டது. கடைசியில் 1864ம் வரு ஷம் புருஷனுக்கும் மனைவிக்கும் விவாகரத்து ஏற்பட்டது.

இந்தக் காலத்திலிருந்து, குடும்ப விவகாரத்தினின்று பிரிந்த அன்னி பெசண்ட் பொது ஜன விவகாரத்தில் தலையிட்டாள். இந்தப் பொது நலத் தொண்டிலும், யாருக்கும் பணியாத ஒரு சுதந்திர சுபாவமே இவளிடம் குடி கொண்டிருந்தது. எது சத்தியம் என்று தமக்குப் படுகிறதோ அந்த இடமொன்றில்தான் தலை வணங்கி னின்றாள். இந்தக்காலத்தில் இவருக்கு சார்லஸ் பிராட்லாவின் கூட்டுறவு கிடைத்தது. 1864ம் வருஷத்தி லிருந்து 1888ம் வருஷம் வரைக்கும் அவருடன் சேர்ந்து கொண்டு, நாஸ் திகக் கொள்கையை நாடெங்கும் பரப்பி வந்தாள். அநேக துண்டுப் பிர சுரங்களை வெளியிட்டாள். இதற்காக எத்தனை நாட்கள் சுற்றுப் பிரயாணம்! எவ்வளவு இடங்களில் கல்லடிகள்! அவமானங்கள்! ஆனால் இவைகளி னால் இவள் சிறிது கூட மனஞ்சலிக்க வில்லை. இவருடைய நாஸ்திகப்பிரசா ரம் ஒன்றுக்கு இரண்டு மடங்கு அதிக மாயிற்று. இந்த நாஸ்திகப் பிரசாரத் தோடு இவர் கர்ப்பத்தடைப் பிரசார மும் செய்து வந்தார். இதனால் இவ ருக்கு அநேக சங்கடங்கள் ஏற்பட் டன. இவருடைய புத்திரி மின் வுட், இதுகாறும் இவருடைய சம்ரட்சணை யிலிருந்தவள் இப்பொழுது இவரு டைய கட்டுப் பாட்டினின்று விடுபட் டாள்.

இந்தக்காலத்தில், சார்லஸ் பிராட்லா பார்லிமெண்டரி அங்கத்தினராயி ருக்க முயற்சி செய்தார். ஆனால், ஒரு நாஸ்திகரைப் பார்லிமெண்டில் சேர்க்கக் கூடாதென்று அந்தக்காலத் துச் சட்டம் கூறியது. ஆனால் அன்னி பெசண்ட் இதற்குச் சம்மதிக்க வில்லை. பல பட்ட கிளர்ச்சிகளைச் செய்து பிராட்லாவை பார்லிமெண் டில் அமரும்படி செய்தார்.

இப்படி யிருக்கிறபோது, 1886ம் வருஷம், இவருக்கும் ஸ்ரீமதி பிளா வட்ஸ்கிக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. இந்தச் சந்திப்பானது, அன்னி பெசண்டம்மையாரின் உள்ளத்தில் ஆழ்ந்த முத்திரையை இட்டுவிட்டது. உலகாயதமே வாழ்க்கையின் லட்சிய மாகாதென்றும், அத்யாத்ம வாழ்க்

லகையாடி ஒவ்வொரு மனிதப் பிறவியும் செல்ல வேண்டுமென்றும் கண்டு கொண்டாள். நாஸ்திகையாயிருந்த இவள், ஆஸ்திகத்தை மிகுந்த உற்சாகத்தோடு தழுவினாள். பிளாவட்ஸ்கியின் தொடர்பு ஏற்பட்ட சில காலம் வரையிலேயே இவள் இங்கிலாந்திலிருந்தாள்.

பிளாவட்ஸ்கி அம்மையாரும் தளபதி ஆல்காட்டும் சேர்ந்து 1875ம் வருஷம் அமெரிக்காவில் பிரமஞான சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இதனை இந்தியாவிலும் ஏற்படுத்த இவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிற போது, அன்னிபெசண்டின் கூட்டுறவு அவர்களுக்கு அதிகம் தேவையாயிருந்தது. பிளாவட்ஸ்கி அம்மையார் காலமான பிறகு, மேற்படி பிரமஞான சங்கத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு, இவர் ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா முதலிய எல்லாக் கண்டங்களிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்தார். பின்னர் இந்தியாவுக்கு வந்து, அதனையே தமது தாய் நாடாகக் கொண்டு, ஹிந்து தர்மத்தைப்பற்றியும், ஹிந்து கல்வி முறையைப்பற்றியும் பிரசாரம் செய்யத் தொடங்கினார். காசியில் 'செண்டிரல் ஹிந்து காலேஜ்' என்ற ஒரு கல்வி ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். இதுவே பிற்காலத்தில் 'ஹிந்து சர்வ கலாசாலை' யாகப் பரிணமித்தது.

பின்னர், 1913ம் வருஷம் இந்திய அரசியல் வாழ்விலும் இவர் பரிபூர்ணமாகக் கலந்து கொண்டார். தமது அரசியல் கொள்கைகளை நிர்த்தாரணம் செய்யும் பொருட்டு, இவர் மேற்படி வருஷத்தில் 'காமன் வீல்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினார். இது தொடங்கிய ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு, அப்பொழுது 'மதராஸ் ஸ்டாண்டர்ட்' என்ற பெயருடன் நடந்து வந்த தினப் பத்திரிகையை வாங்கி அதற்கு 'நியு இந்தியா' என்ற புதுப்பெயர் கொடுத்து அதனைத் திறம்பட நடத்தி வந்தார். இந்த 'நியு இந்தியா' பத்திரிகைக்கு அப்பொழுது இருந்த செல்வாக்கு அபரிமிதமானது. இந்திய தேசிய வாழ்வுக்கு ஒரு பண்பட்ட பாதையைக் காட்டிக் கொடுத்தது இந்தப் பத்திரிகை யொன்றுதான் என்று பலரும் வியந்து பாராட்டும் வண்ணம் அன்னிபெசண்டம்மையார் இதனைத் திறம்பட நடத்தி வந்தார். பத்திரிகைத் தொண்டோடு மட்டும் அன்னிபெசண்டம்மையார் நிற்கவில்லை. காங்கிரஸில் தீவிரமாக ஈடுபட்டார். 1907ம் வருஷம் சூரத் காங்கிரஸில் மிதவாதிகளென்றும் அமிதவாதிகளென்றும் பிரிவினை ஏற்பட்டு, அமிதவாதிகளால் பகிஷ்கரிக்கப் பட்ட காங்கிரஸ் நடைபெற்றுக் கொண்டு வந்தது. அமிதவாத கோஷ்டிக்குத் தலைவராக திலகர் இருந்தார். அன்னிபெசண்டம்மையார், இந்த இரண்டு கட்சியினரையும் காங்கிரஸில் ஒன்று சேர்ப்பித்தார். இதற்காக 'ஹோம் ரூல்' கிளர்ச்சி என்கிற சுய ஆட்சிக் கிளர்ச்சியைத் தொடங்கி, அதற்காக நாடெங்கும் காற்றாடி போல் சுற்றித் திரிந்தார். 1916—1917ம் வருஷங்களில் இவருடைய தலைமையில் இந்தியாவில் நடைபெற்ற அரசியல் கிளர்ச்சியானது, இதற்கு முன் எப்பொழுதும் நடைபெற்றதில்லை யென்று சொல்லலாம். அரசியல் இயக்கத்தில் இவர் ஈடுபட்டதன் காரணமாக இவர் பட்ட

துன்பங்கள் பல; அடைந்த கஷ்டங்கள் எண்ணில. லார்ட் பெண்ட்லண்ட் சென்னை மாகாண கவர்னராக இருந்த காலத்தில் 1917ம் வருஷம் இவரும், இவருடைய சகபாடிகளான அருண்டேல், வாடியா என்கிற இருவரும், உதக மண்டலத்தில் 'குலிஸ்தான்' என்ற கட்டிடத்தில் காப்பில் வைக்கப்பட்டனர். சுமார் மூன்று மாதங் கழித்த பின்னரே விடுதலை செய்யப்பட்டனர். இவரால் நடத்தப்பட்டு வந்த 'நியூ இந்தியா' பத்திரிகை பல முறை ஜாமீன் இழக்கப் பெற்றது. இவருடைய தீவிர தேசிய வாதத்தைப் பின் பற்றுவோர் நாட்டில் லட்சக்கணக்காயினர். இவருடைய தீவிரப் பிரசாரத்தினால் காங்கிரஸுக்கு ஒரு புத்துயிர் ஏற்பட்டது. புதிய காங்கிரஸ் கமிட்டிகள் ஆங்காங்குப் பல ஏற்படுத்தப்பட்டன. இவை, எப்பொழுதும் போலில்லாமல் புதிய உணர்ச்சியுடன் வேலை செய்தன. இதனால் ஜனங்கள் இவரை, 1917ம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸுக்குத் தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள். இவர் தலைவராயிருந்த வருஷத்திலிருந்துதான் காங்கிரஸ் தலைவர் பதவி ஒரு கௌரவமான ஸ்தானமாயில்லாமல், அந்த ஒரு வருஷம் பூராவும் அவர் வேலை செய்ய வேண்டுமென்ற அவசியத்தை ஏற்படுத்தினர். 1919ம் வருஷத்து இந்திய அரசியல் சீர்திருத்தச் சட்டம், இப்பொழுது நமக்கு எவ்வளவு குறைவுள்ளதாகக் காணப்பட்டாலும், அந்தச் சீர்திருத்தம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி வைத்தவர் அன்னி பெசண்டம்மையார்தான் என்பதில் யாதொரு அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது.

1919ம் வருஷம் ஏப்ரல் மாதம் பஞ்சாப் மாகாணத்தில் ஜலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்றதன் விளைவாக நாட்டில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டதல்லவா? இதற்குப் பரிகாரமாக மகாத்மா காந்தி தோற்றுவித்த சத்தியாக்கிரக இயக்கத்தில் அன்னி பெசண்ட் கலந்து கொள்ளவில்லை. இதிலிருந்தே அன்னி பெசண்டம்மையார், காங்கிரஸின் தீவிரப் போக்கில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாமல் ஒதுங்கியேயிருந்தார். ஆனால் அரசியல் வாழ்வினின்று ஒதுங்கிவிடவில்லை. ஆனால் இந்தக் காலத்திலிருந்தே, அரசியல் உலகத்தில் இவருக்கிருந்த செல்வாக்கு வரவரக் குறையத் தொடங்கிவிட்டது. தவிர இவருடைய மூப்பும் வளர்ந்துவிட்டது. கடைசியில் 1933ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30ந் தேதி சென்னை அடையாறில் காலமானார்.

சளியாத உழைப்பு, கொண்ட கருத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பிடிவாத குணம், உலகத்தினரால் போற்றத்தகும் நாவன்மை, எந்தத் துறையிலும் பூரண ஆராய்ச்சித் திறன் முதலியவற்றிற்கெல்லாம் உதாரணமாயிருந்தார் அன்னி பெசண்ட். அந்தக் காலத்தில் இவருடைய அரசியல் பக்தர்கள் இவரை 'அன்னை வசந்தை' என்று அழைத்தது எவ்வளவு பொருத்தமாயிருந்தது?

தமயனின் கடிதம்-7

(சிட்டு)

—தேவிதாசன்

சிட்டுப் பறக்குதடா!—வானினிடை
சிட்டுப் பறக்குதடா!
கட்டுகள் இல்லையடா—நெஞ்சக்
கவலையு மில்லையடா. 1.

காலைக் கதிரெழுமுன்—கடுந்
துயிலை விலக்குதடா.
வேலையை நோக்கியடா—வான
வெளியிற் றிரியுதடா. 2.

பகுத்தறி வும்முடைய—இந்தப்
பார்வாழ் மக்கள் செய்யும்
வகுப்பு வாதமில்லை—கெட்ட
வழக்க பழக்கமில்லை. 3.

கூடிப்பறக்குமடா—காணும்
உணவைப் பகுக்குமடா
வாடித் தவிப்பதில்லை—அவைகள்
வாதிட்டு நிற்பதில்லை. 4.

வஞ்சப் பருந்தினங்கள்—வானில்
வட்டமிட் டேயலையும்
கொஞ்சமு மிரக்கமற்ற—கொடும்
வேடர்கள் புவியலைவார். 5.

இரண்டிற் கிடையினிலே—அவற்றின்
இன்ப வாழ்வினைப் பார்.
அரண்டு திரிவதுண்டோ—வாழ்வில்
அயர்ச்சி காண்பதுண்டோ. 6.

காவினிற் கூடுகட்டி—அவைகள்
களிவீறு கொள்ளுதடா
யாவுமே ஓர் தலமாய்—சரிகர்
வாழ்க்கையும் செய்யுதடா. 7.

துன்பினில் துயருமில்லை—பார்க்கும்
தொழிலில் தளர்வுமில்லை
இன்பினிற் களிப்புமில்லை—புரியும்
இல்லறத் தேக்கமில்லை. 8.

ஆவல் பெருக் கெடுத்து—அவைகள்
அலைந்து திரிவதில்லை
காவல் இயற்கையடா!—அவைதம்
களிப்பை என்ன சொல்வேன்! 9.

கால மறிந் தொழுகும்—தம்
கருமத்தில் வீறு கொள்ளும்
காலன் வருவனென்று—அவைகள்
கலக்கமுங் கொள்வதில்லை. 10.

எனது சகோதரர் - ஜவஹர்

—ஸ்ரீமதி கிருஷ்ணா ஹத்தி சிங்

நேரு குடும்பத்தில் ஜவஹர் மூத்தவர்; ஸ்ரீமதி விஜயலட்சுமி அவருக்கு இளையவள்; ஸ்ரீமதி கிருஷ்ணா ஹத்தி சிங் கடைசி சகோதரி.

"ஆகாயத்தில் பறக்கும் பிராணியே! நீ பறக்கிற போது என் மனமும் உன்னைப்பின் பற்றியே வருகிறது" என்று சரோஜினி தேவி பாடியிருக்கிறாள். அதே மாதிரிதான் 20—8—39 காலையில் என் மன நிலையும் இருந்தது. ஜவஹர்லாலை ஏற்றிக் கொண்டு சீனாவுக்குச் செல்கிற ஆகாய விமானம் என் பார்வையினின்று மறைகிற வரை என் மனமும் அதனோடு வேகமாகப் பின்பற்றிச் சென்றது, ஆகாய விமானமும் மறைந்து விட்டது. என் இருதயத்தை துக்கப் போர்வை மூடிக்கொண்டு விட்டது. 'சீனாவுக்கு நீங்கள் இப்பொழுது போக வேண்டாம். அங்கே சண்டை நடக்கிறது' என்று நானும் என் சகோதரி விஜயலட்சுமியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். எங்களுக்கு மிகவும் கவலையாயிருக்கும் என்று இன்னும் என்னென்னவோ சொன்னோம். அவர் எங்களைப் பார்த்துச் சிரித்தார். 'நீங்கள் எல்லாரும் கிழமாகப் போய் விட்டீர்கள்' என்றார். நாங்கள் என்ன பதில் கூறுவது! கடைசியாக அவருடைய பிரயாணம் நிச்சயமாயிற்று. அவரும் மேற் குறிப்பிட்ட தேதியில் (20—8—39) பிரயாணமாகி விட்டார். அந்தச் சமயத்தில் நாங்கள் இருவரும் சிறு வயதிலிருந்து பழகின அநேக ஞாபகங்கள் என் மனதிற்கு வந்தன.

எனது தமையன் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது நாங்கள் மஸூரியில் இருந்தோம். நான் பிறந்தது அங்குதான். நான் பிறந்த சிறிது காலத்திற்குப் பிறகு தான் அவரை முதன் முதலாக நான் பார்த்தேன். என்னுடைய பெற்றோர்கள் தங்களுடைய ஒரே பிள்ளையைப்பற்றி அடிக்கடி நிரம்பப்பெருமையாய்ப் பேசிக் கொள்வார்கள். அதனால் எனக்கும் அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. 1912ம் வருஷம். அப்பொழுது நாங்கள் மசூரியில் இருந்தோம். ஒரு நாள் திடீரென்று எங்கள் வீட்டில் பிரமாதமான ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றன. எல்லோர் முகத்திலும் ஒரு சந்தோஷம். யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோன்ற ஆவல் நிறைந்த பார்வை. என்னுடைய தாடார் சரீர மென்

மையையும் கவனியாமல் மாடிக்கும் கீழுக்கும் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தார். ஆனால் அன்று அவள் முகத்தில் எவ்வளவு சந்தோஷமிருந்தது. ஆம்! மகனைப் பெற்ற தாயல்லவா?

இவ்வளவு பரபரப்புக்கும் என்ன காரணம்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் சிறு குழந்தை.' என்னோடு எப்பொழுதுமிருந்த தாதிகூட என்னை அன்று கவனியாமலிருந்து விட்டாள். அதனால் நான் தோட்டத்தில் தனியாக விளையாடிக் கொண்டிருந்தேன். திடீரென்று குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஓர் இளைஞர், குதிரை மீது ஏறிக்கொண்டு வந்தார். அவர் பக்கத்தில் என் தகப்பனார், இன்னும் பல நண்பர்களும்கூட வந்தார்கள். உடனே வீட்டில் ஒரே பரபரப்பு. பேச்சு; சிரிப்பு; எல்லாம். எனக்கு என்னமோ மாதிரியிருந்தது. உடனே வீட்டிற்குள் ஓடிப்போய் விட்டேன். என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. இப்படித் திகைத்துக் கொண்டே நான்கு புறத்திலும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென்று ஓர் இளைஞர் வந்து என்னைத் தூக்கி எடுத்து முத்தம் கொடுத்தார். எனக்குக் கோபம் வந்தது. என் கன்னங்களைத் துடைத்துக் கொண்டேன். அப்படி நான் துடைத்துக் கொண்டது என் தாயாருக்குக் கோபம் வந்து விட்டது. அந்த இளைஞர் யார்? அவர் தான் என் தலைவன் ஜவஹர். முதன் முதலாக அப்பொழுதுதான் அவரைப் பார்த்தேன்.

எங்களுடைய ஆரம்பப் பழக்கம் அவ்வளவு சந்தோஷகரமாயில்லை. ஜவஹர் என்னைக் குதிரை மேல் ஏற்றி வைத்து குதிக்கச் சொல்வார். அதனை விரட்டிவிடுவார். இந்த மாதிரியெல்லாம் நீ பழக்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்வார். அவர் சொன்னபடியெல்லாம் நான் செய்தேன். அப்படி செய்யாவிட்டால் ஒரு பயங்கொள்ளி என்று நினைப்பாரோ என்ற எண்ணம். என்னவோ இவரைக் கண்டால் ஏதோ ஒருவிதமான வெறுப்புத்தான் எனக்கிருந்தது. இவ்வளவுக்கும் அவர் எனக்காக இங்கிலாந்திலிருந்து எவ்வளவோ விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கிக்கொண்டு வந்திருந்தார். ஒரு கால் அவர் மீது எனக்கு பொறாமை எண்ணம் ஏற்பட்டதோ என்னவோ? ஏனென்றால் வருகிறவர் போகிறவர் எல்லோரும் அவரைத் தான் பார்த்துப் பேசிவிட்டுப்போனார்களே தவிர என்னைப்பற்றி ஒருவருமே கவனிக்கவில்லை. அதனால் நான் ஒதுங்கியே இருந்தேன். ஜவஹரும் எனக்கு அன்னியராகவே இருந்தார்.

இப்படியாகச் சிலவருஷங்கள் கழிந்தன. எனக்கு 12 அல்லது 13 வயதிருக்கும். ஒரு நாள் ஜவஹர் எனக்கு கணக்குச் சொல்லிக் கொடுப்பதாக அழைத்துப் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டார். அவரிடத்தில் பாடம் சொல்லிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. ஆனாலும் என்ன செய்வது? கணக்கு கற்றுக் கொண்டேன். அவரும் நன்றாகவே சொல்லிக் கொடுத்தார். இப்படி இருக்கும்போது ஒரு நாள் நான் ஏதோ ஒரு கணக்கை தப்பாகச் செய்து விட்டேன். அவருக்

குக் கோபம் வந்து விட்டது. என் புஸ்தகங்களை யெல்லாம் விசிறி எறிந்தார். செயலற்று மௌனமாயிருந்தேன். இரண்டு நிமிஷம் கழித்து, தான் கோபித்துக் கொண்டது தவறு என்று என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனாலும் அவரிடம் பாடம் சொல்லிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. அன்றோடு எங்களுடைய குரு சிஷ்ய சம்பந்தம் நின்று விட்டது.

நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் தான் வசித்துக் கொண்டிருந்தோம். ஆயினும் நாங்கள் நெருங்கிப் பழகவில்லை. எனக்கு அவர் பதினெட்டு வயது மூத்தவர். அவர் எப்பொழுதும் தமது வேலையிலேயே சுறு சுறுப்பாயிருந்தார். இதனால் அவருடன் அடிக்கடி பழகி அவரைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

1921ம் வருஷத்தில் அவரை நான் ஒரு வாறு தெரிந்து கொள்ள முடிந்தது. அப்பொழுது ஒத்துழையா இயக்கம் உச்ச நிலையிலிருந்த காலம். ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் பகிஷ்காரம் செய்யப் பட்டிருந்தன. அதனால், என் பள்ளிக் கூடப்படிப்பை நிறுத்திக் கொண்டு வீட்டிலேயே படித்துக் கொண்டிருந்தேன். சதா வீட்டிலேயே நான் இருந்த படியால், ஜவஹரை நான் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஒத்துழையாக்காலம்வரை, எங்களுடைய குடும்ப வாழ்க்கை, ஒரு கட்டுப் பாட்டுக்கும் ஒழுங்குக்கும் உட்பட்டிருந்தது. இதற்குப் பிறகு, நிச்சயமில்லாத ஒரு வாழ்க்கையாகவே ஆகிவிட்டது எங்கள் குடும்பவாழ்க்கை. என் தகப்பனாரும் தமையனாரும் அடிக்கடி சிறைக்குச் சென்று கொண்டிருந்த படியால், வீட்டில் நாங்கள் சரியான படியோ, ஒழுங்காகவோ வாழ்க்கையை நடத்த முடியவில்லை. என் தந்தையும் சகோதரரையும் சிறைச்சாலைகளில் சந்தித்துப் பேச, நானும் என் தாயாரும் அடிக்கடி போவோம். அந்தச் சந்திப்பு தினத்தை நான் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். எங்களுடைய சம்பாஷணை முடிந்து நாங்கள் சிறையிலிருந்து வெளிவந்ததும், என் முகம் வாட்டமடைந்து விடும். ஆனால் என் தகப்பனாரும் சகோதரரும் எப்பொழுதும் போல் சந்தோஷகரமாகவே இருப்பார்கள். இந்தச் சந்திப்புகளின் போது தான், ஜவஹரிடத்தில் எனக்கு ஒரு வித பக்தி ஏற்பட்டது. ஆனால் அதே சமயத்தில் அவரிடத்தில் ஒரு வித அச்சமும் எனக்குத் தோன்றியது. நாளாக நாளாக இந்த அச்சம் குறைந்து பக்தி அதிகரித்தது.

1926ம் வருஷத்தில்தான் என் தமையனாரைப் பற்றி நான் சரியாகத் தெரிந்து கொண்டேன் என்று சொல்ல வேண்டும். அவர் அப்பொழுது தமது மனைவியுடனும் பெண்ணுடனும் ஜினீவா நகரத்தில் ஒரு வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். ஒரே இடத்தில் நெருங்கிப் பழகினோமாதலால் ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்து கொள்ள சந்தர்ப்ப மேற்பட்டது. சிறந்த நண்பராயிருப்பதற்கு ஜவஹர் முற்றிலும் தகுதியுடையவர். எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் வேடிக்கையாகவும் இருப்பார். நாங்கள் இருவரும் ஒன்றாக உலவப் போவோம். அப்பொழுது அந்த ஊரில் கோடை காலப் பள்ளிக்கூடமொன்று நடைபெற்றுக் கொண்

டிருந்தது. அதற்குச் செல்வோம். இப்படியாகப் பல சந்தர்ப்பங்களிலும் நாங்கள் நெருங்கிப் பழகினோம். இங்ஙனமே, ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்தோம்.

இங்ஙனம் நாங்கள் ஐரோப்பாவில் தங்கின காலத்தில், ஜவஹர் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க முடியவில்லையென்பதைக் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் அவர் மனைவி கமலா நேரு, நோயாய்ப் படுத்திருந்து, அவளுக்குச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்ததால், ஜவஹர், அடிக்கடி மனக் கவலைக்குட் பட்டுவந்தார். இந்தக் காலங்களில் இவர்முகம் சோபை இழந்து நிற்கும். ஜவஹர், ஒரு சிறந்த தாதியாயிருந்து நோயாளியை உபசரிப்பதற்கு மிகவும் தகுதியுடையவர். இந்த விஷயத்தில் அவருக்கு ரொம்பப் பொறுமை இருக்கிறது. நோயாளியின் மனப்பான்மையை அறிந்துகொள்ளும் சக்தியும் இருக்கிறது. நாள் தோறும் தமது மனைவியையும் தாயாரையும் சிகிச்சை செய்து வருங் காலத்தில் இவர் காட்டி வந்த பொறுமையைக் கண்டு நான் பெரிதும் ஆச்சரியமடைந்திருக்கிறேன். இந்தக் காலத்தில் இவர் சிறிது கூடப் பொறுமை இழந்தது கிடையாது.

வெளியில் சுற்றிப் பார்ப்பதற்கு ஜவஹருக்கு எப்பொழுதும் ஆசையுண்டு. தேகப் பயிற்சி விளையாட்டுகளில் அதிகப் பற்றுதலுடையவர். சிறப்பாக குளிர் காலத்தில் நடைபெறும் விளையாட்டுகளில் அதிக பிரியமுள்ளவர். சக்கரம் பூட்டிய பாதக் குறடின் மீது நின்று பனிக் கட்டியில் நடந்து செல்வது ஒரு வகை விளையாட்டு. இந்த விளையாட்டில் ஜவஹர் அதிக பற்றுக் கொண்டவர். ஆனால் ஜவஹரிடத்தில் ஒரே ஒரு குறை மட்டும் உண்டு என்று சொல்லலாம். அதாவது, தம்மைப் போலவே, மற்றவர்களும் வேகமாகவும் ஒழுங்காகவும் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர் எதிர் பார்க்கிறார். அப்படிச் செய்யாவிட்டால் அவருக்குக் கோபம் வருகிறது. அவருடைய இந்தக் கோபத்தை, அவர் ஸ்விட்ஜர்லாந்திலே இருந்த போது, நான் ஒரு முறை சுவைத்தேன். மேற்படி பாதக் குறடைப் போட்டுக் கொண்டு நடப்பதற்கு அவர் பாடங் கற்றுக் கொடுத்தார். அப்பொழுது பனிக் கட்டி மிகவும் கெட்டியாக இறுகிப் போயிருந்தது. அதனால் சறுக்கிச் சறுக்கி விழுந்தேன். எனவே அவருக்குக் கோபம் வந்தது. இனி எனக்குக் கற்றுக் கொடுக்க முடியாதென்று கோபித்துக் கொண்டார். அதோடு மட்டுமல்ல; இன்னும் நூறு வருஷமானாலும் இந்த விளையாட்டு எனக்கு வராது என்று சாபங் கொடுத்தார். பின்னர் ஒரு ஸ்விஸ் நண்பரைக் கற்றுக் கொடுக்கச் சொல்லி அந்த விளையாட்டைக் கற்றுக் கொண்டேன்.

ஜவஹருக்குத் திடீரென்று கோபம் வந்து விடுவதால், அவரைப் பற்றிப் பலரும் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவருடைய கோபம் குழந்தையின் கோபத்தைப் போன்றது; திடீரென்று தோன்றி மறைவது. ஆனால், தாம் கோபித்துக் கொண்டு விட்டதனால், யாருக்கேனும் மனம் புண்பட்டிருக்குமானால் அதற்காக

அவர் உடனே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுவார்.

ஜவஹருக்கு, அரசியலில் அதிகமான அக்கறை இருக்கிறதென்றும் மற்ற விஷயங்களைப் பற்றி அவர் அதிகமான கவலை கொள்வதில்லையென்றும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறவர்கள் அவரை அறியாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவருக்கு வாழ்க்கையின் பல அம்சங்களிலும் ருசியுண்டு. ஆனால் தமது ருசியை வெளியில் காட்டிக்கொள்ள அவருக்குச் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருக்கிற போதுதான் அவர் அதிக சந்தோஷத்தை யடைகிறார். அவர் வீட்டிற்குள் வந்து விட்டால், குழந்தைகள் பாடு ஒரே கொண்டாட்டம்.

ஜவஹர் சிறையிலேயே யிருந்தாலும் அல்லது அந்நிய நாடு ஏதேனுமொன்றிலிருந்தாலும், குடும்பத்தாருடையவோ அல்லது நண்பர்களுடையவோ பிறந்த நாள் முதலிய எதையும் மறப்பதில்லை. அன்று அவருக்கு ஏதேனும் ஒரு பெரிய பரிசோ அல்லது வாழ்த்துத் தந்தியோ கிடைக்கும். இந்த மாதிரியான சிறிய காரியங்களினால், அவர் தம்மை பிறருக்கு அரிய நண்பராக்கிக் கொள்கிறார்.

ஜவஹர் எங்களுடைய மூத்த சகோதரர். ஆனாலும் என் சகோதரிக்கும், எனக்கும் எவ்வித சட்டமும் போட்டு, இன்னின்ன மாதிரி தான் நடக்க வேண்டுமென்று விதிப்பதில்லை. அவர் எப்பொழுதும் எங்களுடைய அரிய தோழராக இருந்தார். தம்முடைய அபிப்பிராயங்களை அவர் யாரிடமும் திணிப்பதில்லை. யாரேனும் ஏதேனும் யோசனை கேட்டால் அவைகளுக்குத் தக்க யோசனைகளைக் கூறி ஆறுதல் சொல்வார். அவரிடத்தில் எந்தவிதமான ரகசியத்தையும் சொல்லலாம். அவற்றைப் பொக்கிஷம் போல் போற்றி வைப்பார். அவர் பிறரைப் பரிகசித்து ஏளனமாகப் பேசமாட்டார். மற்றவர்களுடைய சுபாவத்தையும் மனப் போக்கையும் நன்றாக அறிந்து கொள்ளும் ஆற்றல் அவரிடம் நிரம்ப உண்டு.

அவர் ஆகாய விமானத்தில் சீனாவுக்குப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தபோது, இந்த மாதிரியான எண்ணங்கள் என் உள்ளத்தில் தோன்றின. (ஸ-ஸ்)

யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்கிற போட்டியில் இந்தியா இறங்கி விடுமானால், அது தன்னைத்தானே தற்கொலை செய்து கொள்வது போலாகும். இந்தியா அஹிம்சா தர்மத்தைக் கைவிட்டு விடுமேயானால், உலகத்தின் கடைசி நம்பிக்கையும் போய்விட்டதென்று தான் சொல்ல வேண்டும். சென்ற அரை நூற்றாண்டாக நான் எந்தக் கொள்கையைப் பின்பற்றி வந்தேனோ அதற்காகவே நான் உயிர் வாழ வேண்டும். இந்தியா, தனது கடைசி மூச்சு இருக்கிற வரையில் அஹிம்சா தர்மத்தையே தனது தர்மமாகக் கொண்டு, மனிதனுடைய கௌரவத்தைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன்.

மகாத்மா காந்தி



1939

செப்டம்பர்

27 பிரிட்டிஷ் லார்ட்ஸ் சபையில், லார்ட் ஸ்னெல், லார்ட் ஜெட்லண்ட் ஆகியோர் காங்கிரஸ் காரியக்கமிட்டி விடுத்துள்ள அறிக்கையைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிற போது, இந்த நெருக்கடியான சமயத்தில், இந்தியர்கள் தங்களுடைய அரசியல் உரிமைகளை வற்புறுத்தக் கூடாதென்று குறிப்பிட்டார்கள்.

ஜெர்மனியின் அந்நியநாட்டு மந்திரியான ரிப்பென்ட்ராப்,' இன்று மாஸ்கோ நகரம் வந்து சேர்ந்து, சோவியத் அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தார்.

28 போலந்தில் மோட்லின் என்ற நகரம் ஜெர்மானியர்கள் வசம் சரணடைந்து விட்டது.

நாலரை லட்சம் போலிஷ்காரர்களை ஜெர்மானியர்கள் கைது செய்திருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

போலந்தில் ஜெர்மானியர்களால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்டிருக்கும் பிரதேசங்களில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

லார்ட்ஸ் சபையில் லார்ட் ஜெட்லண்ட் பேசியதை மறுத்து மகாத்மா காந்தி இன்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

காலஞ்சென்ற வி.ஜே. படேல் எழுதிவைத்துப் போன உயில் சம்பந்தமாக சுபாஷ் சந்திரபோஸ் பம்பாய் ஹைகோர்ட்டில் போட்டிருந்த அப்பீல் வழக்கு தோல்வியடைந்து விட்டது.

29 ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் நடந்து வந்த நேச ஒப்பந்தப் பேச்சுகள் இன்று ஒருவாறு முடிந்தன. போலந்தில் இரண்டு நாடுகளுக்குமுள்ள எல்லை நிர்ணயிக்கப்பட்டது.

ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கா கலந்து கொள்ளாதென்று இன்று பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

வார்ஸா நகரத்தை, ஜெர்மானிய ஆக்ரமிப்பிலிருந்து பாதுகாப்பது என்ற முயற்சியை, போலிஷ் ராணுவ தளகர்த்தர்கள் கைவிட்டு விட்டார்கள்.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை, பிரிட்டிஷ்—பிரெஞ்சு கடற்படை அதிகாரிகள், பன்னிரெண்டு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

30 மேற் ரங்கத்தில் ஐம்பது கிராமங்களை ஜெர்மானியர்களிடமிருந்து பிரெஞ்சுக்காரர் கைப்பற்றிக் கொண்டனர் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

ஜெர்மன்-சோவியத் ஒப்பந்தத்தின் விளைவாக, பிரிட்டிஷ் பிரெஞ்சு கொள்கைகள் எவ்விதத்திலும் மாறாது என்று ஒரு செய்தி கூறுகிறது.

ருஷ்யாவினால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்ட போலந்தில், ஒவ்வொரு விவசாயிக்

ளும் சேர்ந்து ஏக்ர பூமியும் ஒரு பசுவும் கொடுக்கப் பட்டிருக்கிறதாக ஒரு செய்தி கூறுகிறது.

யுத்தத்தினுல் ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சமாளிக்க, திருவாங்கூர் அரசாங்கத்தார் 47,000 அரிசி மூட்டைகள் பர்மாவிலிருந்து வரவழைக்க ஆர்டர் கொடுத்திருக்கின்றனர்.

அக்டோபர்

1 மத்திய மாகாண மந்திரியாகிய டி. பி. மிஸ்ரா என்பவர் மீது, சில காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் கொண்டு வந்த குற்றச்சாட்டு ருசுவாகவில்லையென்றும், குற்றஞ்சாட்டின அங்கத்தினர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் பாபு ராஜேந்திர பிரசாத் தீர்ப்புக்கூறி யிருக்கிறார்.

பாட்னுவில் பூகம்ப அதிர்ச்சி உண்டாயிற்று.

புதிதாக ஒரு போலந்தை சிருஷ்டிப்பது, முக்கியமான பிரச்னைகளைப்பற்றித் தீர்க்க ஐந்து வல்லரசுகள் மகாநாடொன்று நடத்துவது, இந்த முறையில் ஹிட்லர் சமாதானத்திற்கு வரக்கூடுமென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

போலந்தை, ஜெர்மனியும் ருஷ்யாவும் சேர்ந்து வெற்றி கொண்டதை அமெரிக்கா அங்கீகரிக்க முடியாதென்று ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தி, தமது பரிவாரங்களுடன் வார்தாவிலிருந்து புறப்பட்டு டெல்லிக்குச் சென்றார். அங்கு ராஜப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசுவார்.

போலந்தில் ஜெர்மன் நாணயச் செலாவணி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

2 இன்று, மகாத்மா காந்தியின் 71வது பிறந்தினம் உலகத்தின் பல பாகங்களிலும் கொண்டாடப் பட்டது. ஸர் ராதாகிருஷ்ணன், காந்தியடிகளைப் பற்றிப் பிரபலஸ்தர் பலர் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டு அடிகளுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்.

ஹாங்காங் தீவின் ஓரத்தில் சீனர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் சண்டை நடைபெறுகிறது.

ஐரோப்பிய யுத்தத்தில் தான் கலந்து கொள்ள விரும்பவில்லையென்று ஜப்பான் அறிவித்திருக்கிறது.

ஜெர்மானியர்கள் இன்று வார்ஸாவில் வெற்றி முழக்கத்துடன் பிரவேசித்தார்கள்.

3 பாபு ராஜேந்திர பிரசாத்தும் பண்டித ஜவஹர்லால் நேருவும் இன்று ராஜப் பிரதிநிதியைக் கண்டு பேசினார்கள்.

டென்மார்க் தேசத்தில், பிரிட்டிஷாருக்கு விரோதமான பிரசாரம் ஜெர்மனியால் செய்யப் படுகிறது.

பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் அருகாமையிலுள்ள சமுத்திரப் பிரதேசத்தில் அமெரிக்கக் கப்பல்கள் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லையென்று, ஹிட்லர் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஹாங்கோ நகரத்தின் மீது சீன ஆகாய விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன.

4 சர்தார் படேல் இன்று ராஜப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேசினார்.

மேற் காங்கத்துப் போர்முனையில் பிரெஞ்சுப் படைகள் அறுபது மைல் முன்னேறியிருக்கின்றன என்று ஒரு செய்தி கூறுகிறது.

அபிசீனியாவில் இதுகாறும் பல விதத் தொழில்களில் ஈடு பட்டிருந்த சுமார் இருநூறு இந்தியர்கள் இன்று பம்பாய் வந்து சேர்ந்தார்கள். அங்கு இத்தாலிய ஆதிக்கத்தின் கீழ் இந்தியர்களுடைய நிலைமை சகிக்க முடியாததாயிருக்கிறதென்று கூறினார்.

5 சீன—ஜப்பானிய யுத்தத்தில், குங்கியாங்

நகரத்தின் மீது ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுகளை வீசி எறிந்தன.

ஜெக்கோஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்கள் இன்னும் ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பிரேக் நகரத்திலுள்ள டிராம் வண்டிகளில் ஜெக்கர்கள் ஏறுவதில்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

இன்று ஹிட்லர் வார்ஸா நகரத்தில் வெற்றிக் கோலத்துடன் பிரவேசித்தார்

இன்றைய தினம், மகாத்மா காந்தி மீண்டும் (மூன்றாந்தடவை) ராஜப்பிரதிநிதியைச் சந்தித்துப் பேசினார்.

6 ஜெர்மன் ரீச்ஸ்டாக் (பார்லிமெண்டு) சபையில் ஹிட்லர், ஜெர்மனியின் கொள்கைகளைப் பற்றியும் கோரிக்கைகளைப் பற்றியும் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். ஜெர்மனியின் கோரிக்கைகள் இன்னின்னவென்று அவர் பின்வருமாறு கூறினார் :—

1. ஜெர்மனியின் தேசிய எல்லையை ஜாதி ஒற்றுமையை உத்தேசித்தும், சமுதாய நிலைமையை உத்தேசித்தும் அமைத்தல்.

2. ஜெர்மனியிலும், தென் கிழக்கு ஐரோப்பாவிலுமுள்ள எல்லா ஜெர்மன் ஜாதியாருடைய நிலைமையையும் சரிப்படுத்துதல்.

3. யூதப் பிரச்னையைப்பற்றி ஒரு முடிவுக்கு வருதல்.

4. எல்லா நாடுகளுடனும் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல்.

5. புதிய ஒரு போலந்தைச் சிருஷ்டித்து, அதன் சுய நிலைமைக்காக ஜெர்மனியும் ருஷ்யாவும் ஜாமீனாயிருத்தல்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று வார்தாவில் நடைபெற்றது.

பால்டிக் நாடுகளுக்கும் ருஷ்யாவுக்கும் சமரசப் பேச்சுகள் தொடங்கியிருக்கின்றன.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், சாங்ஷா என்ற இடத்தில் நடைபெறுகிற யுத்தத்தில் மட்டும் முப்பதினாயிரம் ஜப்பானியர்கள் மரணமடைந்தார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது.

7 ஸார் பிரதேச எல்லைப் புறத்தில் பிரெஞ்சு ஆகாய விமானங்களுக்கும் ஜெர்மன் ஆகாய விமானங்களுக்கும் யுத்தம் நடைபெற்றது.

அமெரிக்கா, தனது சேனாபலத்தை 280,000 பேருக்கு அதிகமாக்கியிருக்கிறது.

8 பிரெஞ்சு பார்லிமெண்டைச் சேர்ந்த இருபத்தாறு பொதுவுடைமைக் கட்சி அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம் இன்றும் கூடியது.

ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் ஹிட்லர் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன.

9 இன்று வார்தாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கூடியது. 300 பேர் ஆஜராயிருந்தனர். ஐரோப்பிய யுத்த நெருக்கடியை முன்னிட்டு 1939ம் வருஷம் டிசம்பர்மாதம் கூட வேண்டியிருந்த காங்கிரஸ் கூட்டத்தை அடுத்த வருஷம் மார்ச்மாதம் வரை தள்ளி வைப்பதென்று தீர்மானிக்கப் பட்டது.

லாட்வியா, எஸ்டோனியா முதலிய பால்டிக் நாடுகளிலுள்ள ஜெர்மானியர்களை ஜெர்மனிக்குத் திருப்பி அழைத்துக் கொள்வதென்று ஜெர்மன் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

10 ருஷ்யாவின் ராணுவ ஆதிக்கத்தைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாதென்று பின்லாந்து கூறியது.

எஸ்தோனிய ராஜ்யத்து மந்திரிச் சபை ராஜிநாமா செய்து விட்டது. பிரதம மந்திரியின் மகனை இல்மார் டோனிஸன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11 சோவியத் படைகள் எந்த நிமிஷத்திலும் வந்து ஆக்ரமித்துக் கொள்ளலா மென்று பின்லாந்திலுள்ள முக்கிய நகரங்கள் காலி செய்யப்பட்டு வருகின்றன.

பிரெஞ்சு பிரதம மந்திரியாகிய டலாடியர் இன்று ரேடியோவில் பேசுகையில் ஹிட்லரிஸத்தை அழிக்கும் முயற்சியில் பிரான்ஸும் பிரிட்டனும் ஒன்று பட்டதாகவே இருக்கிறதென்று கூறினார்.

மேற்குப் போர் முனையில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் சில குண்டுகளை எறிந்தனவென்றும் ஆனால் அவை பயனளிக்கவில்லை என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் மாகாண பிரதம மந்திரிகளும் ஒன்று சேர்ந்து, யுத்த நிலைமை சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலா மென்பதைப்பற்றி ஆலோசித்தார்கள்.

12 ஹிட்லர் எந்த விதமான சமாதான முறைகளுக்கும் இணங்கி வரவில்லை யென்றும், அவருடைய சமாதான கோரிக்கைகள் எவ்வித நிர்ணயத்துக்கும் உட்படாதனவா யிருக்கின்றன வென்றும் சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் கூறினார்.

லண்டனில் இத்தாலிய ஸ்தானிகராக நியமிக்கப் பட்டிருக்கும் ஸிக்னோர் பிஸ்டியானினி என்பவர், சமாதானக் கோரிக்கைகளைப் பற்றி இத்தாலியின் அபிப்பிராய மென்ன வென்பதைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க ரோமா புரியிலிருந்து லண்டனுக்குச் சென்றிருக்கிறார்.

வடகடலில் ஜெர்மானிய யுத்த விமானங்களுக்கும், பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களுக்கும் பெரும் போர் ஏற்பட்டது.

ஜெர்மானிய விமானங்களில், ஆறு, ஏழு விழுந்து நொறுங்கிப் போயின வென்று பிரிட்டிஷ் செய்தி யொன்று கூறுகிறது.

13 அ. இ. கா. கமிட்டி நிறை வேற்றியுள்ள யுத்த சம்பந்தமான தீர்மானம், நியாயமான கோரிக்கைகளைக் கொண்டதாக இருக்கிற தென்றும், காங்கிரஸ் காட்டியுள்ள ஏக மனப் பான்மையை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பாராட்டுவரென்று தாம் நம்புவதாகவும் மகாத்மா காந்தி ஓர் அறிக்கை வெளியிட் டிருக்கிறார்.

இந்தியாவில் மொத்தம் 1500 ஜெர்மானியர்கள் இருக்கிறார்க ளென்றும் இவர்களில் 850பேர் இன்றைய தேதிவரை கைது செய்யப்பட்டு காப்பில் வைக்கப் பட்டிருக்கின்றனர் என்றும் ஓர் அறிக்கை கூறுகிறது.

சென்னைப் பிரதம மந்திரி ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் இன்று ராஜப் பிரதிநிதியைப் பேட்டி கண்டு பேசினார்.

14 'ராயல் ஓக்' என்ற பெரிய யுத்தக் கப்பல் இன்று மூழ்கடிக்கப்பட்டது. இது 29,000 டன் நிறையுள்ளது.

மேற்குப் போர் முனையில் பிரெஞ்சுக்காரர் ரைன் மீது கட்டப் பெற்றிருந்த மூன்று பாலங்களை உடைத்தெறிந்து விட்டனர்.

ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள நாடுகளுக்கு ஸ்வீடன் அரசர் ஓர் அழைப்பு அனுப்பி யிருக்கிறார். டென்மார்க், நார்வே, பின்லாந்து முதலிய நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், ஹாங்கோ நகரம் சீன ஆகாய விமானங்களால் மூன்று முறை தாக்கப்பட்டன வென்றும் சுமார் ஐம்பது பேருக்கு மேல் கொல்லப் பட்டன ரென்றும் ஓர் அறிக்கை கூறுகிறது.

மகாத்மா காந்தி, காங்கிரஸுக்குள் ஒரு உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டு தேசத்தை நடத்த வேண்டு மென்று சுபாஷ் சந்திர போஸ் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

15 ஸ்லோவேகியாவின் எல்லைப் புறத்தில் ருஷ்ய துருப்புகள் பெரும் பகுதியாகக் கூடி யிருப்பது, ஸ்லோவேகியா விலுள்ளவர்களுக்கு ஒருவித அச்சத்தைக் கொடுத் திருக்கிறது.

16 இன்று இங்கிலாந்து கடலோரமாயுள்ள பிரதேசங்களின் மீது ஜெர்மன் ஆகாய விமானங்கள் வட்டமிட்டனவென்று ஒரு செய்தி கூறுகிறது.

போலந்திலுள்ள போலிஷ்காரத் துருப்புகள், இன்னும் ஜெர்மன் துருப்புகளையும் ருஷ்யத் துருப்புகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

மூன்று பிரெஞ்சுக் கப்பல்கள் இன்று மூழ்கடிக்கப்பட்டன.

ஐரோப்பிய யுத்த சம்பந்தமாக அ. இ. கா. கமிட்டி கொண்டிருக்கிற அபிப்பிராயத்தை ஆதரித்து பீஹார் சட்ட சபையில் பிரதம மந்திரியால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது.

17 இந்த யுத்த நெருக்கடி காலத்தில் எல்லாச் சக்திகளும் ஒன்று சேர்ந்துழைக்க வேண்டுமென்றும், இந்தியாவின் சுதந்திர லட்சியத்தைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கூறியுள்ள வாக்குறுதிகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை யென்றும், யுத்த காலத்தில், பொதுஜன அபிப்பிராயத்தைக் கலந்து கொண்டு காரியங்களை நடத்தும் பொருட்டு ஓர் ஆலோசனைக் கமிட்டி நியமிக்கப்படுமென்றும் இராஜப் பிரதிநிதி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

ஹிட்லரின் கொள்கைகளைப் பற்றியும் அவருடைய சகாக்களைப் பற்றியும் வருணித்து பெர்லின் நகரில் பிரிட்டிஷ் ஸ்தானீகராயிருந்த ஸர் நெவில் ஹெண்டர்ஸன் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இன்று ஜெர்மன் ஆகாய விமானங்கள், ஸ்காட்லாந்தின் வட பாகத்தை வட்டமிட்டன.

ஜெனரல் ஷேக்கின் 53வது பிறந்தினத்தை உத்தேசித்து பர்மாவிலுள்ள சீனர்கள் 10-10-39ல் ஒரு பெரிய திருவிழா நடத்தினார்கள். இதற்கறிகுறியாக, நான்கு விமானங்களை சீன அரசாங்கத்திற்கு அளித்திருக்கின்றனர்.

18 ராஜப் பிரதிநிதியின் அறிக்கை மிகவும் ஆசாபங்கத்தை விளைவிக்கிற தென்று மகாத்மா காந்தி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

ராஜப் பிரதிநிதியின் அறிக்கையைத் தழுவினாற் போல், லார்ட்ஸ் சபையில் லார்ட் ஜெட்லண்ட் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

19 பிரிட்டனுக்கும் துருக்கிக்கும் பிரான்ஸுக்கும் துருக்கிக்கும் இடையே ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்திடப் பெற்றன; இதனால் ருஷ்ய-துருக்கிய நேசம் பாதிக்கப்படாதென்று சொல்லப்படுகிறது.

வின்ட்ஸர் கோமகன், இன்று போர் முனைக்கு வந்தார்.

பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து, அமெரிக்காவினிடம் 5,750 ஆகாய விமானங்களுக்கு ஆர்டர் கொடுக்கப் போகின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

வடக்கு ஸ்காட்லாந்தில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் பலத்த குண்டு மாரி பொழிந்தன.

போலந்தின் எல்லைப் புறத்தை நிர்ணயிக்கிற ருஷ்ய-ஜெர்மானிய ஒப்பந்தத்தை இன்று ஹிட்லர் அங்கீகரித்து விட்டார்.

20 போலந்தில் யூதர்களுக்கென்று தனியானதொரு ராஜ்யம் சிருஷ்டிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

இன்றும் ஜெர்மன் ஆகாய விமானங்கள், ஸ்காட்லாந்தின் வட பாகத்தின் மீது குண்டுகளை எறிந்தன.

போலிஷ் காரிடர் பிரதேசத்திலுள்ள போலிஷ்காரர்களை யெல்லாம் அப்புறப் படுத்தி விட்டு, பால்டிக் நாடுகளிலிருந்து வெளியேற்றப்படுகிற ஜெர்மானியர்களை

அங்குக் குடி புகுத்துவதென்று ஜெர்மன் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

யுத்தத்தையும் இந்தியாவையும் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கொண்டுள்ள மனப்பான்மை மிகவும் விசனிக்கத்தக்கதென்று பார்லிமெண்டின் எதிர் கட்சித் தலைவர்களாயுள்ள ஸ்ரீமான்கள் அட்லியும், கிரீன்வுட்டும் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

21 இங்கிலாந்துக்குக் கொண்டுவரப் படுகிற உணவுப் பொருள்களை யெல்லாம் ஜெர்மனி தடை செய்யு மென்று லண்டனில் பலத்த வதந்தி உலவுகிறது.

இத்தாலியைச் சேர்ந்த தென் டைரோல் மாகாணத்திலுள்ள ஜெர்மானியர்களை யெல்லாம் ஜெர்மன் பிரதேசத்திற்கு அழைத்துக் கொள்ள ஜெர்மனியும் இத்தாலியும் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டன.

22 வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம், ராஜப் பிரதிநிதியின் அறிக்கையைக் குறித்துப் பெரிதும் வருந்துவதாகவும், மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமா செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

23 ஜெர்மனி, என்னென்ன நிபந்தனைகளின் மீது சமாதானத்திற்கு வர முடியுமென்பதைப்பற்றி ஏற்கனவே தெரிவித்திருக்கிறதென்றும், இனி அதை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் ஒரு ஜெர்மன் செய்தி கூறுகிறது.

24 எஸ்தோனியா நாட்டிலுள்ள எல்லைப் பிரதேசங்களையும் சோவியத் துருப்புகள் ஆக்ரமித்துக் கொண்டு விட்டன.

டான்ஜிக் நகரத்திலிருந்து வான் ரிப்பெண்ட்ராப் இன்று ரேடியோ பிரசங்கம் செய்கையில், டான்ஜிக் இனி எப்பொழுதும் ஜெர்மனியிலிருந்து பிரிக்கப் படாதென்று கூறினார்.

25 ஜெர்மானிய போலந்து பிரதேசத்திற்கு டாக்டர் பிராங்க் என்ற நாஜி தலைவர் கவர்னர்-ஜெனரலாகவும், செய்ஸ்-இன்குவார்ட் டெபுடி கவர்னராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இத்தாலி, தற்போதைய யுத்தத்தில் பூரண நடுநிலைமை வகிக்கும் என்று பிரான்ஸ் நம்பியிருக்கிறது.

துருக்கி, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தானம் ஆகிய நான்கு நாடுகளும் அங்காராவிலோ, பாக்தாத் நகரத்திலோ ஒரு மகாநாடு கூட்டுமென்று சொல்லப்படுகிறது.

26 சென்னை மாகாண அசெம்ப்ளியில் யுத்த சம்பந்தமான தீர்மானம் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

மேற்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள் பலத்த யுத்தத்தை ஆரம்பிக்கப் போகின்றனர் என்று ஒரு செய்தி கூறுகிறது. ஸ்லோவேகியா நாட்டுக்கு டாக்டர் ஜோசப் டிஸ்லோ என்பவர் பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் செல்லும் எல்லாவிதப் பொருள்களையும் தடுப்பதென்பது சரியாகாதென்று ருஷ்யா, பிரிட்டனுக்கு ஓர் எச்சரிக்கை அனுப்பியிருக்கிறது.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் இந்தியா சம்பந்தமாக இன்று வாதம் நடைபெற்றது. அரசாங்கத் தரப்பில் ஸர் சாமியல் ஹோர் பேசுகிற போது, மத்திய அரசாங்கத்தில் பொறுப்பாட்சியேற்படுத்துவதற்குத் தடையாயிருப்பது சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரச்னையேயென்றும், இந்திய தேசிய காங்கிரஸ் தன் வழியே செல்லுமானால், பிரிட்டிஷ் அரசாங்கம் எப்பொழுதும் போல் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பெறும் என்றும் கூறினார்.

உடற்கூறு சாஸ்திரத்தில் ஸ்லுகர் என்பதற்காக 1939ம் வருஷத்து நோபல் பரிசு

யுத்தச் செய்திகளில் நகைச்சுவை!

நாஜி தலைவர்களுக்கு வெண்ணெய்

லண்டன் அக்டோபர் 5உ

பீல்ட் மார்ஷல் கோயரிங், டாக்டர் கோப்பெல்ஸ் முதலிய நாஜி தலைவர்கள் யுத்தம் ஏற்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே இங்கிலாந்திலிருந்து ஏராளமாக வெண்ணெயை வரவழைத்துக் கொண்டார்களென்று (பிரிட்டிஷ்) விளம்பர மந்திரி இலாகா அறிக்கையொன்று கூறுகிறது. ஒவ்வொரு வாரமும் இரண்டு பவுண்ட் முதல் நான்கு பவுண்ட் வரை நிறையுள்ள சுமார் ஒரு டஜன் பார்சல்கள்,

நாஜி தலைவர்களுக்கு வெண்ணெய் சப்ளை செய்யப் படவில்லை

லண்டன், அக்டோபர் 16உ.

யுத்தம் ஆரம்பிப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னிருந்தே, கோயரிங் கொப்பெல்ஸ் முதலிய நாஜீ தலைவர்களுக்கு இங்கிலாந்திலிருந்து வெண்ணெய் சப்ளை செய்யப்பட்டு வந்திருக்கிறதென்று விளம்பர மந்திரி இலாகா வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றி பிராட் போர்ட் நகரத்திலுள்ள ஆர்தர் ஹெண்ட்ஸன் லிமிடெட் என்ற மா

டாக்டர் கெர் ஹார்ட் லோமக் என்ற ஜெர்மானிய நிபுணருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

27 சயாம் அரசாங்க மந்திரிச்சபை ராஜீநாமா செய்துவிட்டது. புதிய மஜ்லிஸ் (பார்லிமெண்ட்) கூடியவுடனே, மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விடுவது வழக்கம். டாக்டர் மாடியன் டப்தாரி (உள்நாட்டு மந்திரி) பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்,

சென்னை மாகாண மந்திரிச்சபை இன்று ராஜீநாமா செய்து விட்டது,

பம்பாய் அசெம்பளியில் யுத்த சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஐக்கிய மாகாண அசெம்பளியிலும் யுத்த சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஜெர்மனிக்கும் மற்ற நடுநிலைமை நாடுகளுக்கும் இருந்த டெலிபோன் சம்பந்தம் அற்றுப் போய்விட்டது.

ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கா நடுநிலைமை வகிக்க வேண்டுமென்று அமெரிக்கன் காங்கிரஸில் கொண்டுவரப் பட்ட ஒரு மசோதா நிறைவேற்றப் பட்டது.

28 தென்னமெரிக்காவிலுள்ள பொலிவியா நாட்டில் ராணுவச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

29 இந்தியா-பர்மாவின் உதவி மந்திரியாயிருந்த ஏ. ஜே. ஹூர்ஹெட் என்பவர் இறந்து விட்டார்.

30. சென்னையில் காங்கிரஸ் மந்திரிச்சபை ராஜீநாமா செய்துவிட்டதை முன்னிட்டும், புதிய மந்திரிசபை அமைக்க முடியாமற் போனதாலும், கவர்னரே அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு விட்டார். கவர்னருக்குத் துணையாக, ஜி. டி. போக், எச். எம். ஹூட், டி. ஜி. ருதர் போர்ட் ஆகிய மூவரடங்கிய ஓர் ஆலோசனை சபை இருக்கும்.

ஐக்கிய மாகாண மந்திரிச்சபை ராஜீநாமா செய்துவிட்டது.

மூன்று பிரிட்டிஷ் கப்பல்கள் அத்லாந்திக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப் பட்டன.

‘டேனிஷ் வெண்ணெய்’ என்று பெயரிடப்பட்டு, பிராட்போர்ட் நகரத்திலுள்ள ஒரு பிரபல மர வியாபாரக் கம்பெனியின் தலைவரால், மேற்படி நாஜி தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

(ராய்ட்டர்)

கோப் பெல்ஸ் எங்கே?

பாரிஸ், செப்டம்பர் 19வ

ஜெர்மனியிலிருந்து ஆம்ஸ்டர்டாம் நகருக்கு வந்து கொண்டிருக்கிற ஜனங்கள், யுத்த ஆரம்பத்திலிருந்து டாக்டர் கோப் பெல்ஸ் மௌனமாயிருப்பதைக் கண்டு ஆச்சரியப் படுகின்றனர் என்று ஹாவாஸ் ஏஜன்ஸி செய்தி யொன்று கூறுகிறது. சில வாரங்களாக, டாக்டர் கோப் பெல்ஸின் பெயர் நாஜி பத்திரிகைகளில் வெளி வரவில்லை யென்றும் அவர், ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு விரோதமாயிருந்தபடியால் அவர் புறக்கணிக்கப்பட்டு விட்டார் என்றும் சொல்லப்படுகின்றன. டாக்டர் கோப்பெல்ஸ் இறந்து விட்டார் என்றுகூடச் சிலர் நினைக்கின்றனர். டாக்டர் கோப்பெல்ஸைப் பற்றி எழுந்துள்ள வதந்திகளை மறுக்க எவ்வித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. (ராய்ட்டர்)

வியாபாரக் கம்பெனியார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். கோயரிங்குக்கோ, கொப்பெல்ஸுக்கோ அந்த மாதிரியான பார்சல்கள் தாங்கள் ஒன்றும் அனுப்பவில்லை யென்றும், ஆனால் ஒரு கம்பெனியின் டைரெக்டர்களின் உறவினர்களுக்கும், ஒரு ஜெர்மன் சிவில் அதிகாரிக்கும், மேற்படி பார்சல்கள் அனுப்பியதாகவும், மேற்படி சிவில் அதிகாரியின் பெயர் கோயரிங்கென்றும் ஆனால் அவர் பீல்ட் மார்ஷல் கோயரிங்கல்லவென்றும் மேற்படி ஹெண்ட்லன் கம்பெனியார் தெரிவிக்கின்றனர்

(ராய்ட்டர்)

அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்களுடன்

டாக்டர் கொப்பெல்ஸ்

பெர்லின், செப். 24வ

அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்களுடன் டாக்டர் கொப்பெல்ஸ் பேசிக் கொண்டிருக்கிறபோது, பெல்ஜியம், நெதர்லாண்ட்ஸ், லக்ஸம்பர்க் முதலிய நாடுகளை மட்டுமல்ல, மற்ற எல்லா நாடுகளின் நடுநிலைமையையும் ஜெர்மனி கௌரவிக்கும் என்று உறுதி கூறினார். பொஹிமியா, மொரேவியா முதலிய நாடுகளின் ஒற்றுமையைத் தாங்களே நேரில் பார்த்து உறுதி செய்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுத்துவருவதாகவும் சொன்னார்.

(ராய்ட்டர்)